**RAJA & CO SOLICITORS**

We provide following Legal Services:

Conveyancing:

Buying and Selling

Houses, Flats & Business

- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road,
Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road,
Colliers Wood.
SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family



BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 08 ♦ ISSUE - 151 ♦ 12 FRIDAY AUGUST 2011



**LONDON ACCIDENT CLAIMS LIMITED**

78 Windmill Road, Croydon, CR0 2XP

வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?

Driver / Passenger – within last 3 years

- Neck, Back & Shoulder Pain
- (Terms & Conditions Apply)

NO WIN NO FEE

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்

Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667

Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM


## பார்ட்டியில பலூன் உடைச்சால் வீட்டில அடிவிழும் கடை உடைக்கிறவங்களின்ட பாடு என்ன பாரோ ?



Photo: Lal Labakudas


*NEHANAA*
**Beauty & Fashion**

- Bridal makeup (hindus and christians)
- Makeup and dressing for all occasions
- Henna designs and nailing
- Saree blouse
- Flower arrangements
- Cake icing
- Facial
- Herbal and all types of facial

Contact : Sumaa
07404085745/07411150288

**OFF-LICENSE SHOP FOR SALE**

Epsom, Ewell, Surrey இல் A24 க்கு அருகாமையில் கடை விற்பனைக்குண்டு.

- Weekly Turnover - £500 to 7000
- Rent 14,000 per Annum.
- Rates £60 month
- ATM Income of £4000 a year
- Lease for 25 Years, Price £47,000

Contact: Nesan • Oyster Agent

Tel: 07816859744

Fully Licensed
Airconditioned

Ganga
The Authentic Kitchen of Kerala

taste the difference

உயர்ரகத்தில் - தரத்தில் - ருசியில்

கங்கா ரெஸ்டாரென்ட்

in Ilford, East London Promotes Kerala's distinctive cuisine

sea food
Tandoori
specialist

OPENING HOURS
MON - FRI : 6PM TO 11.30 PM
SAT : 12 NOON TO 11.30 PM
SUN : 12 NOON TO 10.30 PM

75 Seats Available

* We are specialist in all catering for all occasions incouding weddings, Birthdays and parties
* Avalible for private parties (please book in advance)

68 Longbridge Road,
Barking, Essex.
IG11 8SF
Tel : 020 8594 9998
07943 220 300

**INJURY CLAIMS ADVICE BUREAU LTD**
(Leading Personal Injury Claims Specialist)

வாகன விபத்தா? Any Accident

0800 917 8807 0208 933 7921 07932 762 452

info@injuryclaimsabl.co.uk

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

ஆகஸ்ட் மாதம் வைத்திய ஆலோசனைகளுக்காக வந்து சிகிச்சை எடுப்பவர்களுக்கு ஆலோசனைக் கட்டணம் இலவசம்.

தமிழில் தொடர்புகொள்ள வசதியுண்டு

HSFC
HARLEY STREET FERTILITY CLINIC

Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838



ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS

**Give your child the Learna Advantage. Today.**

- Maths & English Classes for 4- 16 years
- Challenging Individualised learning path
- Focus on Problem Solving, Reading and writing
- Improve child's self – confidence and concentration skills
- Thousands of computer activities & Printed worksheets
- Monthly progress tests and instant reports



LEARNA

• Individualised • Interactive • Inspiring

Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk

0845 094 0061
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU

PROPERTIES TO LET !

1, 2, 3, 4, 5 படுக்கையறைகள் கொண்ட வசதியான வீடுகள் வாடகைக்கு உள்ளன.

- Norbury
- Croydon
- Brixton
- Streatham
- Thornton Heath
- Balham
- Tooting
- Clapham
- Mitcham

UNIVERSAL ESTATES

தமிழில் உரையாட அழையுங்கள்

Call : 0208 764 6444 www.universal-estates.co.uk

1526, London Road, Norbury, SW16 4EU

M&K
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

IMMIGRATION
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

PERSONAL INJURY
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

CONVEYANCING
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

FAMILY LAW
Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration

KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE BASIC TAMIL LESSONS

TAMIL LESSONS
BEGINNERS
INTERMEDIATE £5/hr
ADVANCED

MATHS
ENGLISH £10/hr per subject
SCIENCE

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் கல்விக்கூடம்

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளிவாரியாகத் தோற்றவும் முடியும்.

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் – மாலை 08.00 மணிவரை நடைபெறும்

– தொடர்புகளுக்கு –
020 8090 3366
07738 056 950
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ

Chennai 21
Dosa Specialists
Indian & Srilankan Restaurant
Fully Licensed

GRAND OPENING
Sunday 21st August 2011 @12pm

Free Dosa or Idly Served All Day



ALL WELCOME

அனைவரையும் வருக வருக என
அன்புடன் அழைக்கின்றோம்

020 8952 4411
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH

- ESOL with Citizenship
- International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
- Spouse Visa Test
- Student Visa Extention Test
- Citizenship Courses for Settlement

£25 OFF
With this newspaper
valid till 07/08/2011, One coupon per course

Successfully trained over 35,000 students • Certificates within 20 days
• Online numeracy and literacy courses • Courses from £200 • Multilingual Staff

FREE
Initial
Assessment

உங்களுக்காக
இங்கே
நாம் !.



OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE
& WE TRAIN YOU TILL YOU PASS

To enrol or enquire about your nearest centre, call our team on 0207 099 2400

Head Office:
Vista Business Centre, 9th flr, 50 Salisbury Road
Hounslow TW4 6JQ
E-mail: courseinfo@trainingconnect.co.uk
Tel: +44(0)207 099 2400

TrainingConnect
www.trainingconnect.co.uk
Australia • China • Dubai • India • Russia • UK

National Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Birmingham, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Croydon.

# பூராயம்



## நாங்களாடா தீவிரவாதிகள்?

ஒரு கருப்பின சகோதரன் மரணத்திற்கு ஊரையே எரிக்கிறார்கள். தங்கள் ஒட்டுமொத்த இனமே அழிந்த பொழுது கூட தமிழர்கள் எம்மினத்தை காப்பாற்றுங்கள் என்று கதறி கொண்டு லண்டன் நகர வீதிகளில் அமைதியான போராட்டங்கள் தான் செய்தார்கள். சகோதரன் முருகதாசன் தன்னை தானே தான் எரித்து கொண்டான். இங்கிலாந்து இப்பொழுது புரிந்து கொள்ளும் தமிழர்கள் எத்தனை பெரிய ஜனநாயகவாதிகள் என்று.

*- பாக்கியராசன்*

## மானங்கெட்ட கிரிக்கெட்

ஜப்பானில் பூகம்பம் வந்தபோதும் சரி, ஈழத்தில் இனப் படுகொலை நடந்த போதும் சரி, இன்று இங்கிலாந்தில் கலவரம் நடக்கும் போதும் சரி. ஒரே ஒரு மானங்கெட்ட குழு மட்டும் எதற்கும் அசராமல் தன் பணியை தொடர்ந்து செய்யும் என்றால் அது நம் வீரமிக்க இந்திய கிரிக்கெட் அணி தான். இந்திய அரசை போலவே இந்திய கிரிக்கெட் அணிக்கும் மானம் மரியாதை இல்லை போல் தெரிகிறது.

*- பழனிசாமி*

## சுமந்திரன் கிறிஸ்தவராம்!

இரண்டு கிழமைக்கு முன்னர் கூட்டமைப்பு சுமந்திரன் லண்டன் கூட்டத்தில் உதிர்த்த முத்துக்கள் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. பலரும் தமது விசனத்தை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தியிருந்தனர். இவ்வாறு சுமந்திரன் மீது விமர்சனம் மேற்கொண்டதற்கு அவர் கிறிஸ்தவர் என்பதுதான் காரணம் என புதிய விளக்கம் ஒன்றை தந்திருக்கிறது 'பொங்கு தமிழ்' இணையதளம். அப்படியானால் ஏன் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்பவரை தந்தை செல்வா என அன்பாக அழைத்து அவர் பின் போனது ஈழத்தமிழினம் ஏன் ஐயா மொட்டந் தலைக்கும் முழந் தாழுக்கும் முடிச்சு போடுகிறீர்கள்??

*- நரேந்திரன்*

## சிங்களவர்களுக்கு தமிழ் நாட்டில் விழுந்த அடி.

சிங்கக் கொடி படம் போட்ட ரீசேர்ட்டுடன் தமிழ்நாட்டில் உலாவிய சிங்களவர்கள் தாக்கப்பட்டதனை சரியான நடவடிக்கை என ஏற்றுக் கொள்ள முடியாது. இருந்தாலும் உலகில் எங்கு வேண்டுமானாலும் தாம் நிம்மதியாக ராஜ நடை போட முடியும் என்று இறுமாப்புடன் இருந்த சிங்கள பேரினவாதத்திற்கு ஒரு இடத்திலாவது அச்சுறுத்தல் வந்திருக்கிறது என்பது ஒருவகையில் ஆறுதலாக இருக்கிறது.

*- ஆதியன்*

## விடுதலை வேண்டும்!

Headlines Today நிருபர் பிரியம்வதா இலங்கைக்குச் சென்று முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை பேட்டி கண்டபொழுது ஒரு ஏழு வயது தம்பி ஒருவனிடம் என்ன வேண்டும் உனக்கு என்று கேட்டாராம். தம்பி உடனே சொன்னானாம் 'விடுதலை' என்று. திரும்பவும் கேட்டபோது அதையே திருப்பிச் சொன்னானாம். அந்த தம்பி தனக்கு பால் வேண்டும் பணிஸ் வேண்டும் என்று கேட்காமல் விடுதலை வேண்டும் எனக் கேட்டிருப்பது எம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

*- கயல்விழி*

## வன்மையாகக் கண்டிக்கிறேன்!

கே.பியை பேட்டி கண்டு ஒலிபரப்பியதற்காக அவுஸ்திரேலிய தமிழ் வானொலியைச் சேர்ந்த நவரத்தினம் இரகுராம் என்பவர் அவமதிக்கப்பட்டுள்ளார். அவரது வீட்டிற்குள் மனித கழிவுப் பொருட்களை வீசியுள்ளார்கள். இவ்வாறான செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். ஊடகவியலாளர்களின் கருத்துச் சுதந்திரத்தில் தலையிடுவதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. சூழ்நிலைக் கைதியோ அல்லது தானாக சரணடைந்தவரோ எதுவாயினும் அவரது கருத்தினையும் வெளிக் கொண்டு வருவது நல்ல முயற்சி.

*- சிவராசா*

## விடாமுயற்சி கொண்ட தமிழன்

லண்டன் ஹெக்னி பகுதியில் வாழும் தமிழ் வர்த்தகர் சிவா கந்தையாவின் கடையும் அண்மையில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 10000 பவுன்ஸ் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டு வர்த்தக நிலையமும் தீவைக்கப்பட்டது. இவர் கடைக்கு காப்புறுதி வைத்திருந்தாரே தவிர கடையில் இருந்த பொருட்களுக்கு வைத்திருக்கவில்லை. தனது வாழ்க்கை முடிந்து விட்டதாக இருந்த இவரின் கருத்து இப்போது முற்றிலும் மாறியுள்ளது. எதுவுமில்லாத நிலையிலும் இப்போது திரும்பவும் வியாபார நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளார். சூறையாடப்பட்ட கடையைப்பார்க்க வரும் அயலவர்கள் தம்மாலான உதவிகளை செய்வதாக வாக்குறுதி அளித்ததாக அவர் கூறியிருக்கிறார். நீங்களும் உதவி செய்விரும்பினால் www.helpsiva.com என்ற இணையத்தளம் ஊடாக உதவலாம்.

*- தம்பையா*

## மரணதண்டனைக்கு எதிரான போராட்டம்

ராஜிவ் கொலைவழக்கில் மரணை தண்டனை விதிக்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிற பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் கருணை மனுவினை இந்திய ஜனாதிபதி நிராகரித்துள்ளார். அவர்களது மரணதண்டனை இரத்துச் செய்யக்கோரி சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளுக்கு மனு அனுப்புங்கள்!

*இருதயநாதன்*

## ஏன் இந்த சனம் இப்பிடி?

'உச்சிதனை முகர்ந்தால்' திலைப்பட சீடி வெளியீட்டு விழாவுக்கு போயிருந்தேன். சனம் அவ்வளவாய் வரேல்லை. சும்மா குத்தாட்டம் போடுகிற நிகழ்ச்சி எண்டால் முண்டியடிச்சுக் கொண்டு வாற ஆட்கள், இப்பிடி ஏதும் பிரயோசனமான படம் என்றால் பின்னடிக்கினம். ஏனெண்டு விழங்கேல்லை.

*லண்டன் பாலா*

## பிரியம்வதாவிற்கு பாராட்டுகள்!

சிறிலங்கா ஆமிக்கு தண்ணிகாட்டிவிட்டுஈழத்தின் உண்மைநிலையை வெளி உலகுக்கு தெரியப்படுத்திய சகோதரி பிரயம்வதாவிற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். எங்களிட்டை இருக்கிற மீடியாக்கள் யார் காதல் பிரச்சனையால் தற்கொலை செய்தான்.. யார் யாரோடை ஓடினான்.. எண்டு செய்திபோடுகிறார்கள். கே.பி. ஐ பேட்டி காணுகிறதை விட்டுட்டு அவரின்ரை பொஸ் கோத்தாவை பேட்டி காணுங்கள் ஐயா. அப்போதுதான் அவரின்ரை மண்டைக்கை என்ன இருக்குது எண்டு அப்போதுதான் தெரியவரும்.

*ரஞ்சன்*

> ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.
>
> பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 020 7043 4314.

# அறப்படிச்ச பல்லி 'கூழ்'ப் பானைக்குள் விழுந்த கதை...

**மாதவன்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் இரத்தினசீவன் கூழ் (சீவன் கூழ்) என்பவர் சிறிலங்கா காவற்துறையினரால் கைது செய்யப்பட இருந்தமையால், அங்கிருந்து தப்பி லண்டனுக்கு வந்திருப்பதாக ருவிற்றர் குறுஞ் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தியின் உண்மைத் தன்மையை சரி பார்த்துக் கொள்ள முடியாவிட்டாலும் இச் செய்தியை வெளியிட்டுள்ளவர் இரத்தினசீவனுக்கு மிகவும் நெருக்கமான செய்தியாளர் டி.பீ.எஸ். ஜெயராஜ் என்பதனால் அதனை வதந்தி எனப் புறந்தள்ளி விடமுடியாது. யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அவரும் அவரது மனைவியும் மூட்டை முடிச்சுகளுடன் அங்கிருந்து வெளியேற இருப்பதாக ஏற்கனவே அவரது ஆதரவாளர்களால் நடாத்தப்படும் ஒரு இணையதளம் செய்தி வெளியிட்டிருந்தது.

வட அமெரிக்காவில் வசித்து வந்த சாமுவேல் ஹேபர்ட் இரத்தினசீவன் கூழ் (58 வயது) அவ்வப்போது யாழ் ஸைவ மக்களுக்கு எதிரான கருத்துகளை எழுதி வந்தமையால் தமிழ்ப் பரப்பில் அறியப்பட்டவராய் இருந்தார். முன்னர் இலண்டனிலிருந்து வெளிவந்த "Tamil Times" இவரது கட்டுரைகளை பிரசுரித்து வந்தது. 1997 இல் The Exile Returned: A self-portrait of the Tamil Vellahlahs of Jaffna, Sri Lanka என்ற தலைப்பில் யாழ் சமூகத்தை பற்றிய கடுமையான விமர்சனங்களை கொண்டிருந் ஒரு நூலை எழுதி வெளியிட்டார்.

சீவன் கூழ் பற்றி மேலதிகமாக தெரிந்து கொள்ள வேண்டுமாயின் "Who is this man called Ratnajeevan H. Hoole? Here is an introduction to the man inside out" என்ற தலைப்பில் மறைந்த பத்திரிகையாளர் மதிப்பிற்குரிய திரு. சிவநாயகம் ஐயா அவர்கள் ஒரு பேப்பரில் எழுதிய கட்டுரையை படியுங்கள். 2006ம் ஆணடு யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக மகிந்த இராஜபக்சவினால் இவர் நியமிக்கப்பட்டதனையடுத்து திரு. சிவநாயகம் தனது ஆசிரிய பத்தியில் இக்கட்டுரையை எழுதியிருந்தார். இக்கட்டுரையை பிரசுரித்ததன் மூலம் ஒரு பேப்பர் தன்மீது பயங்கரவாதத் தாக்குதலுக்கு அழைப்பு விடுக்கிறது என அவர் புலம்பித் திரிந்தது வேறு கதை.

காலனித்துவ காலத்து கிறிஸ்தவ சமூக அமைப்பை ஆதரித்து, தமிழ்த் தேசியத்திற்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வந்த சீவன் சிறிது காலம் பேராதனை பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தார். இக்காலத்தில்தான் அவருக்கு இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின் உபவேந்தராக ஆக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டிருக்க வேண்டும் இந்த ஆசை அவரைப் போட்டு இன்றுவரை அலைக்கழிக்கிறது என்பது மட்டும் உண்மை.

2006ல் மகிந்த இராஜபக்சவின் நியமனம் கிடைத்ததும் விடுதலைப்புலிகளை தாஜா செய்யும் வேலையில் இறங்கினார். அதற்கு அவர்கள் இணங்கியதாகத் தெரியவில்லை, ஆனால் விடுதலைப் புலிகள் தனக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்தார்கள் என அமெரிக்காவுக்கு குடும்பத்துடன் தப்பியோடினார். இவருக்கு வக்காலத்து வாங்கி டக்ளஸ் தேவானந்தா அறிக்கை விடுத்தார். மீண்டும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பரப்புரையில் தீவிரமாக ஈடுபட்டார். அவரது பதவி நிரப்பப்படாமல் ஒரு வருடம் காத்திருந்த மகிந்த பின்னர் பேராசிரியர் சண்முகலிங்கத்தை அப்பதவியில் அமர்த்தினார்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தரின் நான்கு வருடகால பதவிக் காலம் முடியவும் போர் முடிவடைந்திருந்தது. இனி விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருக்காது என்ற எண்ணத்தில் இலங்கைக்கு திரும்பிய சீவன் உபவேந்தர் பதவியை தனக்கு தட்டில் வைத்துத் தருவார்கள் என எதிர்பார்த்தார். இப்போது அவருக்கு டக்ளஸ் இன் ஆதரவு தேவைப்பட்டது. டக்ளசை துதித்து விடுதலைப்புலிகளை நிந்தித்தபடி மகிந்தவின் கருணையை எதிர்பார்த்து நின்ற சீவனுக்கு, டக்ளஸ் பச்சைக் கொடி காட்டவில்லை. இதனால் பசில் இராஜபக்சவின் அடிவருடிகளான லண்டனில் வசிக்கும் கொன்ஸ்ரன்ரைன், ஜெயபாலன், இராஜேசக்கா என்பவர்களின் உதவியை நாடினார். கொன்ஸரன்ரைன் தன்னையொத்த சிலரின் கையொப்பங்களுடன் சீவனை உபவேந்தராக நியமிப்பதற்கு ஆதரவளிக்குமாறு டக்ளசுக்கு நேரில் சென்று மனுக்கொடுத்தார். ஜெயபாலன் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதாகக் கருதப்படும் முறைகேடுகள் பற்றி 'ஆய்வுக் கட்டுரை' எழுதினார். இராஜேசக்கா மகிந்தவிடம் மடிப்பிச்சை கேட்டார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)




NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, AUGUST 12, 2011, ISSUE 151

## கோத்தாபாய தண்டிக்கப்பட வேண்டும்!

அண்மையில் சிறிலங்காவின் பாதுகாப்புத் துறைச் செயலாளர் கோத்தாபாய Headlines Today தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வி சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மை முகத்தை வெளிக் காட்டுவதாக அமைந்திருந்தது. அச்செவ்வியில் அவர் தெரிவித்த கருத்துகள், பூசி மெழுகும் கருத்துகளை வெளியிடும் சிறிலங்காவின் இராச தந்திரிகளின் கபடத்தனத்தை போலன்றி உண்மையான நிலவரத்தை துருத்திக் கொண்டு காட்டியது.

ஊடகவியலாளர் இசைப்பிரியா பாலியல் வன்முறைக்கு உள்ளானது பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர் அவ்விதம் எதுவும் நடக்கவில்லை என மறுத்ததுடன், போரின் இறுதிக்கால கட்டத்தில் வன்னியில் மருத்துவத் தொண்டராக பணியாற்றிய தமிழ்வாணி ஞானகுமார் பற்றி மிகவும் கீழ்தரமான கருத்துகளை முன்வைத்தார். நாகரீக உலகம் வெட்கிக்கும் படியான இக்கருத்துகள் கோத்தாபாயா போன்ற ஒரு போர்க் குற்றவாளியிடமிருந்து வருவது ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் இக் கருத்துகளையிட்டு எம்மத்தியில் பெண்ணியவாதிகள் என தங்களை அழைத்துக் கொள்பவர்கள் கூட வாய்மூடி மௌனித்திருப்பதன் காரணம் புரியவில்லை.

கதிர்காம அழகி பிரேமாவதி மன்னம்பெரி தொடங்கி கிருசாந்தி குமாரசாமி, ரஜனி, கோணேஸ்வரி என எண்ணிக்கை தெரியாதளவு பெண்கள் சிறிலங்கா அரச படைகளினால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டமையையும், தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னமும் இந்தக் கொடுமைகள் நடைபெற்று வருவதனையும் எண்ணுகையில் சிறிலங்கா இராணுவம் தமிழர் தாயகப் பகுதியிலிருந்து வெளியேற்றபட வேண்டியதன் அவசியம் தெரிகிறது.

இதே செவ்வியில், அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் கருத்துத் தெரிவித்த கோத்தாபாய, விடுதலைப்புலிகள் அழித்தொழிக்கப்பட்டுள்ளமையால், தற்போது அதிகாரப் பரவலாக்கத்திற்கான அவசியம் இல்லை எனத் தெரிவித்திருக்கிறார். இக்கருத்தும் சிங்களப் பேரினவாதத்தின் உண்மை முகத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது. இந்நிலையில் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை, பாராளுமன்றத் தெரிவுக் குழு என்பன காலத்தை கடத்தும் உத்தி என்பது தெளிவாகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா பற்றி கோத்தபாய தெரிவித்திருக்கும் கருத்துகள் தமிழ் மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது தொடர்பில் தமிழ் நாடு சட்டமன்றத்திலும் பலத்த கண்டனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில், கோத்தாபாய போன்ற போர்க்குற்றவாளிகள் சரவதேச நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை வலுப்படுத்தும் வகையில் அவரது செவ்வி அமைந்திருக்கிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*எங்கட விளம்பரப் பகுதியிலை இருக்கிற நண்பர்கள் சொன்னதை உங்களுக்கு சொல்கிறோம். என்னண்டால், **ஒரு பேப்பர்** ஒசியாக விளம்பரம் போடுறதில்லை. சமூக நிறுவனங்கள் நடாத்திற நிகழ்ச்சியளுக்கு சும்மா காசு வாங்காமல் விளம்பரம் போடச் சொல்லி சிலர் அரியண்டம் கொடுக்கினமாம். ஆனால் அப்பிடிச் செய்தால் பேப்பர் அடிக்க முடியாது எண்டு சொல்லச் சொன்னார்கள்.*

*ஒண்டு இரண்டு தெரிஞ்ச ஆட்களுக்கு எண்டாலும் இந்த சலுகையை செய்யுங்கோவன் எண்டு சிலர் கேட்கிறது நியாயமாய்தான் படுகுது. ஆனால் எங்களுக்கு எல்லோ எல்லாரையும் தெரிஞ்சிருக்குது. ஆகவே இந்த ஓசி விளம்பரக் கதையை இத்தோடை விடுவம். ஆனால் ஒண்டு நடக்கவிருக்கும் நிகழ்வுகள் பகுதியில் சேர்க்கிறதுக்கு நாங்கள் கட்டணம் எதுவும் அறவிடுகிறதில்லை.*

***ஒரு பேப்பர்** ரிலை வாற விசயங்கள் தொடர்பாக ஏதாவது விமர்சனமிருந்தால் எங்களுக்கு அனுப்பிவைத்தால் நாங்கள் பிரசுரிக்கிறம். அதை விட்டுட்டு வேறை இடத்திலை போய் எழுதிற தாலை எங்களுக்கு அது நேர காலத்திலை தெரிய வாறதில்லை. பிறகு ஆறின கஞ்சி பழங்கஞ்சி போல ஆகி விடும். உப்பிடித்தான் ஏதோ ஒரு இணையதளத்திலை **ஒரு பேப்பர்** காரன்கள் காரிகளுக்கிடையிலை ஏதோ பிரச்சினை எண்டு எழுதியிருக்காம்.*

*அப்பிடியென்ன பிரச்சினையெண்டு உள்வீட்டிலை இருக்கிறாக்களுக்கே தெரியேல்லை. ஏதோ வதந்தியாய் இருக்கக்கூடும். இன்சா அல்லா, அப்பிடியோரு பிரச்சினையும் இதுவரைக்கும் வரேல்லை.*

*அண்மையில் காலம் ஆகிய பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிக்கான நினைவு வணக்கக் கட்டுரையை இந்த பேப்பரிலை பிரசுரிசிருக்கிறம். சுணங்கினதற்கு மன்னிக்கவும்.*

*அப்பெருந்தகை பற்றிய விமர்சனங்கள், குறிப்பாக செம்மொழி மாநாட்டில் அவர் கலந்து கொண்டமை தொடர்பாக அதிருப்தியிருந்தாலும் அவருக்குரிய மரியாதையை செலுத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறம். எங்கடை கூட்டாளி இரவி போலவே எங்கடை குரு சிவநாயகம் ஐயாவும் பேராசிரியர் ஐயாவுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர்.*

*உங்கடை பங்களிப்புக்காக நாங்கள் காத்திருக்கிறம் எண்டது உங்களுக்கு தெரிஞ்சிருக்கும். அஞ்சாம் பக்கத்திலை இருக்கிற வெற்றிடம் பெரிசாய் இருக்கிறது அதை அடைக்கிறது உங்கடை கையிலைதான் இருக்குது.*

*வேறை என்ன?*

*மீண்டும் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# 'Killing Fields of Sri Lanka' – A Reality Check



By: M.G. Devasahayam
THE WEEKEND LEADER

The air has been full with the "Killing Fields of Sri Lanka", the Channel 4 documentary. The visuals showed naked Tamil prisoners shot in the head, dead bodies of naked women who had been raped and dumped on a truck and other atrocities committed by the Sri Lankan armed forces in the final moments of the brutal civil war. World has never seen such barbarian brutality. Anyone who saw the documentary was numb with disbelief.

The authenticity of the footage has been confirmed by a forensic pathologist, forensic video analyst, firearms evidence expert and a forensic video expert of international repute and the images are horrific.

While the world seethes in anger, India has been silent. Not surprising, given the fact that fresh from his 'victory' over Tamils in Sri Lanka in May 2009, President Mahinda Rajapaksa said he has fought 'India's war' and all these brutalities are part of it. He was ecstatic of the fact that his victory coincided with Sonia's electoral victory. The ecstasy appeared to be mutual

Given the venal Indian mindset, Tamils in post-war Sri Lanka have been progressively reduced to serfs of the Sinhalese. This is endorsed by David Miliband and Bernard Kouchner, former foreign ministers of Britain and France respectively, when they wrote after a recent visit to Sri Lanka : "Tamil life is treated as fourth or fifth class citizens. If foreign policy is about anything, it should be about stopping this kind of inhumanity."

There is an untold story about how New Delhi became instrumental in the brutality and the present inhuman sufferings of Sri Lankan Tamils. In the 2005 presidential election, Rajapaksa of the SLFP, a known hawk, won by the narrowest of margins. As President he wanted to outlive his image of a hawk and establish rapport with the Indian government and leadership, but was repeatedly rebuffed and in fact snubbed.

> After these parleys Rajapaksa made a public statement hinting at a merged, autonomous North-East, a solution just short of Tamil Eelam.

This made Rajapaksa realise the importance of involving civil society in Tamil Nadu to resolve the intractable ethnic problem in his country and act as a bridge between the two countries. After much persuasion by Colombo , a small core group of retired civil servants, senior journalists and military veterans was formed with myself as the convener. The group held its preliminary meeting in Chennai on 10 May, 2007, with a senior adviser to President Rajapaksa, participating. It was unanimously agreed that a mutually acceptable political package was the only lasting solution to the ethnic crisis.

The group met President Rajapaksa and his high-level team in Colombo on 17 July, 2007. Throughout the long discussions, Rajapaksa was very much involved and positive. He fully endorsed the group's opinion expressed by me that the solution to the crisis should emerge from within Sri Lanka and refined through international opinion, particularly from India. After these parleys Rajapaksa made a public statement hinting at a merged, autonomous North-East, a solution just short of Tamil Eelam.

Following this, core group had a series of meetings with Rajapaksa's team of ministers and officials and agreed upon many steps to resolve the conflict. A crucial conference was held with President Rajapaksa in Colombo on 25 March, 2008, followed meetings with Sri Lankan Minister for Constitutional Affairs and National Integration, Chairman of Official Language Commission, and others. An action agenda was set.

The Indian High Commission in Colombo got wind of the group's activities and the Deputy High Commissioner, A Manickam, sought an appointment with me and it was fixed at 5 p.m. at the hotel I was staying. Manickam never kept his appointment but the High Commission later reprimanded the Sri Lankan presidential team for holding peace talks with 'unauthorised' persons.

## Sicilian Revenge

To fortify these initiatives I wrote to TKA Nair, my former colleague and presently principal secretary to Prime Minister on 01 April, 2008. The letter outlined the progress made by the group and the action agenda that has been set for political resolution and Confidence Building Measures. It requested the government to support the initiative taken by the group to end the long-festering political and humanitarian crisis in the island. There was no response.

Had New Delhi taken cognizance of this initiative and acted in concert by putting some pressure on President Rajapaksa, the issue would have been resolved and Tamils would now be living in the island with honour and dignity. But instead, pursuing somebody's personal agenda of 'Sicilian Revenge', New Delhi minions with a well-synchronised Network in Colombo , New York and Geneva , actively assisted the brutal Sri Lankan genocide. No wonder, Delhi is deafeningly silent.

Time is not far when Rajapaksa & Co is hauled up before the International Court of Justice for war crimes and genocide. In the event, New Delhi minions cannot escape responsibility for this inhuman horror. The bell is tolling!

# தமிழீழத்திற்காகத் தமிழகம் என்ன செய்துள்ளது?

**தோழர் தியாகு**
*(சீற்றில்)*

### தமிழக, தமிழீழப் போராட்டங்களின் இடையுறவு

சிங்கள ஒடுக்குமுறைக்கும், இந்திய ஒடுக்கு முறைக்கும் இடையிலான வரலாற்று வேறுபாடுகளை நாம் மறுக்கவில்லை. அதேபோல் தமிழீழ விடுதலைப் போராட்டமும், தமிழக விடுதலைப் போராட்டமும் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளில் இருப்பதை நாம் கருத்தில் கொள்ளவே செய்கிறோம். ஆனால் தமிழகத்தில் தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சிக்கான தேவையையும், அதற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குமான இடையுறவையும் புரிந்து கொள்ளாமல், கண்டு கொள்ளாமல் அல்லது கணக்கில் கொள்ளாமல் இருப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை.

'தமிழீழத்திற்காகத் தமிழகம் என்ன செய்துள்ளது?' என்பதற்கு மறுமொழியாக 'தமிழகத்திற்காகத் தமிழீழம் என்ன செய்துள்ளது?' என்ற வினாவை நான் தொடுத்தபோது தமிழீழ நண்பர்கள் பலரும் திகைத்துப் போனார்கள். தமிழகத்தின் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தமிழீழத் தேசியர்களுக்கு அக்கறை இருக்க வேண்டும் என்பதைச் சுருக்கென்று உணர்த்துவதற்காகவே நான் இந்தக் கோள்வியைக் கேட்டேன்.

### தமிழக அரசியல் பற்றிய பார்வை

முள்ளிவாய்க்காலுக்குப் பின் தமிழீழ மக்கள் இந்தியாவைக் கடுமையாக வெறுக்கிறார்கள் என்பது மெய்தான். ஆனால் இது மட்டும் போதாது. இந்திய அரசின் வல்லாதிக்கத் தன்மையை உணர்வதோடு, அதற்கெதிரான போராட்ட ஆற்றல்களை இனங்கண்டு அவற்றோடு தோழமை கொள்ளவும் வேண்டும். குறிப்பாகத் தமிழக அரசியலை வெறும் கருணாநிதி - செயலலிதா போட்டியாகப் புரிந்துகொள்வதிலிருந்து வெளியேவரவேண்டும். அடுத்த முதலமைச்சர் ஆகப் போகிறவர் யார்? என்ற புதிருக்கு விடை தேடுவதிலேயே காலங்கழித்துக் கொண்டிருக்கக் கூடாது. வருங்காலத்தில் தங்களுக்குப் பிடித்தமான ஒருவர் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து விடுதலையைப் பொட்டலம் கட்டி அனுப்பி வைக்க மாட்டாரா? என்று ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாது.

இப்பொழுதுள்ள இந்திய அரசமைப்பில் யார் முதலமைச்சர் தமிழீழ மக்களைக் காக்கத் தவறிவிட்டார் என்பதன் பொருள் அவர் முதலமைச்சருக்குரிய சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி இதைச் செய்திருக்க முடியும். ஆனால் செய்யத் தவறிவிட்டார் என்ற பொருளில் அல்ல. அவர் தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் தில்லி அரசை எதிர்த்துப் போராடத் தவறிவிட்டார் என்ற பொருளில்தான் இப்படிச் சொல்கிறோம். எடுத்துக்காட்டாக, ஈழத் தமிழர் இன அழிப்பில் தில்லியின் பங்கைக் கண்டித்து அவர் முதல்வர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுத் தெருவில் இறங்கிப் போராடியிருக்கலாம். இவ்வாறு தில்லிக்கு நெருக்குதல் கொடுத்து அதன் தமிழர் விரோதப் போக்கைத் தடுத்திருக்கலாம். ஒரு முதலமைச்சரால் அதிகபட்சம் செய்யக்கூடியது பதவி விலகிப் போராட முன்வருவதுதான். இதைச் செய்யாமல் பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தார் என்பதுதான் கருணாநிதி செய்த இரண்டகம். பதவியின் பெரும் பயன் (அதிகபட்சப் பலன்) பதவி விலகல்தான் என்னும் போது விலகுவதற்கு மட்டும் பயன்படக்கூடிய பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் ஏன் இத்துணைக் கவலை.

### பதவி அரசியல்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதால் என்ன பயன்? இந்திய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பதவி விலகுவதால் என்ன பயன்? ஈழ ஆதரவு அரசியல் கட்சிகள் தேர்தலைப் புறக்கணிப்பதால் என்ன பயன்? என்றெல்லாம் அப்போதே கேள்வி எழுப்பினார்கள். இவர்களெல்லாம் பதவி விலகுவது மக்களை எழுச்சி கொள்ளச் செய்யும். இந்திய அரசுக்கு நெருக்குதல் உண்டு பண்ணும்.

2008 அக்டோபர் 14 ஆம் நாள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுத்தபடி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகியிருக்க வேண்டும். ஒருசில கட்சிகள் இந்த முடிவிலிருந்து பின் வாங்கியிருந்தாலும் மற்ற கட்சிகள் விலகல் முடிவைச் செயல்படுத்தியிருக்க வேண்டும். நடுவண் அரசின் தி.மு.க., பா.ம.க. அமைச்சர்கள் பதவி விலகியிருக்க வேண்டும். போரை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டே கடைசிவரை பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தை மன்னிக்க முடியாது. இன அழிப்புப் போரை எதிர்ப்பதாகச் சொன்ன அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்து, போரை நிறுத்தும் வரை இங்கே தேர்தல் நடத்தத் தேவையில்லை என்று அறிவித்திருந்தால் அது காங்கிரசைத் தனிமைப்படுத்தி இருக்கும். மற்ற கட்சிகள் தயங்கினாலும், உறுதியான ஈழ ஆதரவு கட்சிகள் மட்டுமாவது இவ்வாறு நிலை எடுத்திருக்க வேண்டும்.

இதை விடுத்து ஈழ ஆதரவுக் கட்சிகள் தமக்குள் கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்திருக்க வேண்டும் என்பது போகாத ஊருக்கு வழிகாட்டும் வேலை. இப்படியொரு கூட்டணி அமையாததால்தான் தி.மு.க. காங்கிரசுக் கூட்டணியில் இணைந்தேன் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் சொல்லும் சமாதானம் ஏற்புடையதன்று. எந்தக் கூட்டணியும் தேவையில்லை என்று தனித்துப் போட்டியிடாதது ஏன்? என்பதற்கு அவரிடமிருந்து பொருத்தமான விளக்கமில்லை. பேசாமல் தேர்தலையே புறக்கணித்திருக்கலாமே! ஏன் அப்படிச் செய்யவில்லை?

*(தொடர்ச்சி 28 பக்கம்)*

# Political Solution and War Crimes

**By: Periasamy Kanthavel**

"Not only will we have to repent for the sins of bad people; but we also have to repent for the appalling silence of the good people." - Martin Luther King Jr.

What happened recently in the Lok Sabha, the Parliament in New Delhi is an indication of events to come.It was simply a U-turn on Tamil issue, a desperate attempt. As per the list of business circulated in the morning, a discussion was to take place under Rule 193 on "alleged killing of Sri Lankan Tamils by the island nation's Lankan army in 2009 as recently revealed in a United Nations report".

However, by noon, another version was circulated to MPs. The text of the issue for the debate underwent a dramatic change, much to the chagrin of MPs from Tamil Nadu. The corrigendum to the list of business read that the discussion would be "on the steps taken by Government of India for relief and resettlement of Tamils in Sri Lanka and other measures to promote their welfare." The sting was gone and the purpose lost.Only the Dublin Tribunal touched the issue. The Government of India is yet to acknowledge even the 'war crimes'.

In a light hearted sence, let us see this;

[Who said Gota is not intelligent.. Good job Gothabaya in implicating India in war crimes and genocide in Sri Lanka. Let me guess; India also sent delegates to attend your seminar and they were sitting humbly listening to your ramblings? Great positioning Sir! No one can beat your acute sense of Machiavellian diplomacy.]

Said by someone who just watched,

Headlines Today (Video) - 'Lankan Army killed 40,000 Tamils'

*<http://indiatoday.intoday.in/site/video/lankan-army-killed-40000-tamil-civilians-un/1/147707.html>*

India simply hobbled the struggles of the Sri Lankan Tamils for equality of treatment by declaring the LTTE as terrorists. What a blunder? Come out clean and be a witness in the International independent Trial and that would be the only chance to redeem your prestige and position in the world, you the Great India!

Now the Sinhalse say Tamils lost the war and they are in a weak position, no need to devolve any substantial powers to them, even disregarding democratic voice of Tamils. The Govt simply live on lies and deception.

Sri Lanka's decades-long intention of genocide is so obvious and is the basis of all actions behind the war. Only the Dublin Tribunal touched the issue. The internatioanal Community cannot ignore these offenses, which are grave crimes in violation of international law, for political or other reasons and deserves to see that the law is upheld regardless of the perpetrator and whoever the co-actors or partners.

The 'war Crime' and the ethnic problem or the peace process should not be linked together and any attempt to do so will just make matters worse. Accountability and transparency in administration and credibility of conduct is very important as far as India and the UK foreign policy are concerned. Yet these big powers have not commented on the out come of the local elections.

## Month of August, 2006

Tamils will never forget this month! On the 17th of August 2006 Sri Lanka air-force carried out Air-bombing. They managed to kill 63 children on the spot, all girls and severly injured another 121. The Sri Lankan Monitoring Mission who visited the site said they couldn't find "any evidence of military installations or weapons."

President started the war in July 2006 and started indiscriminate bombing of Vanni.The Liberation Tigers took the task of safeguarding the poor Tamils living there by training them how to safeguard their lives. Still people died of bleeding caused by shrapnel from bombs. LTTE decided to train the school children from various school and conducted a first-aid course.These poor children only got killed.

Just 14 days after that killing, Mahinda met Tony Blair in his Holiday home and had a one to one meeting for 40 mintutes.

Their message all-round being; "the military's "defensive" role in the wake of LTTE attacks". (Get set, ready, and go for the Vanni Tamils genocide)

("Mahinda-Chinthanaya London giya"; *http://sundaytimes.lk/060903/columns/political.html)*

## The Flawed Hypothesis

International community's decisions and actions were based on the wrong belief that the Sri Lankan Government could be trusted but the Tamil freedom fighters, the Liberation Tigers of Tamil Eelam (LTTE), could not be trusted. The IC believed that the LTTE could not be trusted to respect the 2002 ceasefire agreement; sooner or later it would break it and re-start the war. The Sri Lankan government, on the other hand, could be trusted to honor its pledge that it would not restart the war and seek a military solution. The flawed nature of this belief would become evident as events unfolded in 2006. It was the LTTE that was eager to keep the ceasefire alive and it was the Sri Lankan Government that would not end its aerial bombings and other offensives in spite of repeated requests from the international community.

On 5th July 2005, as the United Nations prepared to mark the 10th anniversary of the fall of Srebrenica during the Balkan wars, a senior official has reaffirmed the UN's commitment to help heal the wounds in the town that was the site of a massacre of 7 000 Muslim men and boys by Bosnian Serb forces after they took over the town designated by the Security Council as a "safe area."

*In Sri lanka there are no graves for 150 000 Tamils, nor any bones left. Fonseka and Rajapakse used Chinese made incinerators like the Nazis. Somebody made a lot of commission as well.*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

1st and Best Accountants
Wembley ................ 07828 396 651

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
கவி

விளம்பரம்
மலர்

அச்சு
தர்சினி (கனடா) - பானு

வடிவமைப்பு
மயூரன் - பெகின்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
நிவேதா

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்

**இரவி அருணாசலம்**
*ஒரு பேப்பர்*

எனது தந்தையரின் நினைவுநாள் அன்று (ஜூலை 06) தந்தையாரின் நினைவில் துக்கித்துக் கொண்டிருந்த அதே நாளில், என் ஆசான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் காலம் ஆனார்.

சிவத்தம்பி ஆசானுக்கும் எனக்கும் இடையிலான உறவு போன்ற ஒன்று வேறு எவருடனும் அவருக்கு இருந்திருக்க முடியாது.

குரு-சிஷ்யன், ஆசிரியர்-மாணவன், அப்பா-மகன், அதிகாரி-ஊழியன், ஆண்டவன்-பக்தன் என இன்னும் சொல்ல உள்ளன உறவுமுறைகள்.

இதனை வேறொரு விதமாகவும் கூறலாம் அதட்டுபவரகவும் அடங்கிப்போபவனாகவும், அன்பு செலுத்துபவராகவும் பணிந்து போபவனாகவும், அறிவுரை சொல்பவராகவும் ஓம் sir என்று அதை ஆமோதிப்பவனாகவும், கடுமை காட்டுபவராகவும் அவர் காலடியில் கிடப்பவனாகவும் என்று எத்தனயோ உருமாற்றம் அவரிடம் கொண்டேன்.

கடற்கரையின் நாடு வெயிலுக்குள் அவரை முதன் முதலில் காண்கிறேன் 1980 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் ஒரு நாள் அது. வல்வெட்டித் துறையின் கடற்கரையில் இருந்த பெரிய வீடு அவருடையது. அப்போது 'புதுசு' என்ற காலந்திதழை நடத்தி கொண்டிருந்தேன் இலங்கை முற்போக்கு முகாமின் வரட்டுதனத்துக்கு சாமரம் வீசுகிறார் என்பதற்காக அப்போது 20 வயதே ஆன நான் அந்த பென்னம் பெரியவரை சாடும் எழுத்துக்களை 'புதுசு' வில் வைத்தேன்.

அவர் அவை ஒன்றையும் சட்டை செய்வதாக இல்லை. அதற்காக அவர் அதை 'பூ' என்று ஊதி விட்டதாகவும் இல்லை 'தம்பி அப்பன்' என்று அன்பு சொரிந்து என்னை கட்டுவெட்டினார். அது மாத்திரம் இன்றி முதுபெரும் எழுத்தாளர் S.பொன்னுத்துரை அவர்கள் தன்னை பூதத்தம்பி என்று விளிப்பதாகச் சொல்லி சிரித்தார். அதனூடாக வேறொரு செய்தியையும் எனக்கு சொன்னார். அதை புரிகிற பக்குவம் அப்போது எனக்கு வரவில்லை.

அப் பக்குவம் வந்தபோது அந்த பேராசிரியருக்கு நான் மாணவனாக அமைந்தேன். அவரிடம் நவீன இலக்கியத்தையும், விமர்சன கோட்பாடுகளையும், ஒப்பியல் ஆய்வுகளையும், தொல்காப்பிய பொருள் அதிகாரத்தையும், பிழை மரபையும், தமிழியலில் கற்றபோது, நாடகமும் அரங்கியலும் என்பனவற்றையும் கற்றேன். முதுகலைமானியை (MA) அவரிடம் பயின்றேன். 'நீ சிவத்தம்பிட ஆள்' என்று பேராசிரியர் வேலுப்பிள்ளை சொல்லும் அளவு எங்கள் உறவு இருந்தது. அதனால் என் தரமும் (class) இறக்கப்பட்டு பெறுபேறு வந்தபோதும் கவலைப்பட்டதில்லை நான்.

ஏனேன்றால், தமிழியலிலும் நாடக அரங்கியலிலும் அவரிடம் கற்றதிலும் பார்க்க வெளியில் அவரிடம் கற்றது அதிகம். மனிதத்துவத்தை அவரிடம் கற்றேன். மனித மாண்பை கற்றேன்.

*'மனிதனுக்கு மேல் ஒரு தெய்வமும் இல்லை*

*மானுடம் போலொரு மெய்மையும் இல்லை'*

என்று என்னை உணர வைத்தவரும் அவரே.

1987 ஜனவரி இல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் ஆசிரியர் பணி ஏற்கிறேன். அவரே அதற்கும் காரணர். அந்த ஆண்டின் இறுதியில் ஈழ தமிழ் மக்களின் வாழ்வு இந்திய ஆக்கிரமிப்பு படையின் வருகையில் குலைத்திருந்தது. என் துணைவி பிள்ளையை வயிற்றில் தரித்த காரணத்தினால் வேலை தேடி கொழும்புக்கு ஓடினேன் 'வீரகேசரி' இல் உதவி ஆசிரியர் வேலை கிடைத்தது. அப்பொழுதுதான் எனக்கு தகவல் வந்தது துணைவி வயிற்றில் தரித்தது ஒரு பிள்ளை அல்ல இரட்டை பிள்ளைகள் என்று. 'ஓடடா இப்ப ஓடு சுசித்தி பக்கத்தில நீ நிக்க வேணும்' என்றார் சிவத்தம்பி Sir. ஓடவும் யாழ்ப்பாணத்தில் ஒரு வேலை எடுக்கவும் அவர் காரணர் ஆகினார். அவர் தலைமைத்துவ பொறுப்பேற்ற அகதிகள் புனர்வாழ்வு கழகத்தில் அதிகாரத்துவம் மிக்க ஒரு பணி எனக்கு கிடைத்தது.

அப்பணியில் பக்குவமில்லாத என் அதிகரத்துவத்தில் ஒரு பணி செய்தேன். ஒரு விதவை மறுமணம் செய்ய முயன்றபோது அவருக்கு வழங்க இருந்த புனர்வாழ்வை நிறுத்த முயன்றேன். என் நோக்கம் இன்னொரு விதவைக்கு அதை வழங்கலாம் என்பதே. Sir கேட்டார் 'எங்களுடைய புனர்வாழ்வை பெறுவதற்காக அவள் இன்னொரு கலியாணம் கட்டகூடாது என்று நீ நினைக்கிறியா? அடேய் அவள் உன்ர தங்கச்சியடா அவளுடைய கலியாணத்துக்கு ஒரு சீதனமாக அல்லது ஒரு Present ஆக இதை குடன்டா' மேசைகள் அடுக்கி கிடந்ததிலும் வெளியில் ஆட்கள் நின்றதிலும் அக்கணம் அவர் காலில் நான் விழவில்லை.

1995 ஆம் ஆண்டின் கடைசி மழைக்காலம் இலங்கை தேசிய புலனாய்வு பிரிவினர் என்னை 'புலி' என்று ஊகித்து கொழும்பில் நான் பணி புரியும் உலவும் இடங்களில் எல்லாம் தேட தொடங்கினர். ஒன்றும் செய்ய இயலாது. இலங்கையை விட்டு ஓட வேண்டும். 'ஓட போறன்' என்றேன் Sir இடம். 'நில் எண்டு சொல்ல என்னால ஏலாம கிடக்கு ஓடு எண்டு சொல்ல மனம் இல்லாமல் இருக்கு, என்னடா செய்ய' என்று கலங்கினார் நான் கதறினேன். அழைத்து சொன்னார் 'நீ எனக்கு மகனடா ஒரு தகப்பனா ஓடு எண்டுதான் சொல்லமுடியும் நீ போ எல்லாத்துக்கும் ஒரு காலம் வரும்'. .

என் மீதான சிவத்தம்பி Sir இன் மகா ஆனந்தங்களில் ஒன்று அவரின் இளைய மகளுக்கு நான் தமிழ் கற்பித்தது. அவர் எனக்கு தமிழ் கற்பிக்க அவர் மகளுக்கு நான் தமிழ் கற்பிக்க எவ்வளவு பேருக்கு இந்த பாக்கியம் கிட்டும். அதே ஆனந்தத்தில் வேறோர் இடத்திலும் என்னிடம் இருந்து எடுத்தார். எனது 'காலம் ஆகி வந்த கதை' புத்தகத்தின் முன்னுரையில் அதை குறிக்கிறார். 'இரவிக்கு இந்த அமைவு எப்படி வந்தது. உண்மையில் எனக்கு பெருமையாகவே இருக்கிறது'.

2008 ஏப்ரல் மாத பின்னேர வெயிலில் அவரை நான் இறுதியாக சந்திக்கிறேன். சென்னை பல்கலைகழக விருந்தினர் தங்கு விடுதியில் அவரை காண்கிறேன். சில பிரச்சினைகளை சொல்லி இரு துளி கண்ணீர் சொட்டியதையும் கண்டேன். அப்பொழுதுதான் அவர் அழுவதை நான் என் சீவியத்தில் பார்க்கிறேன். நெஞ்சம் பதைபதைத்தது 'Sir அழாதிங்கோ' என்று சொல்லி அவரை கட்டிப்பிடித்து முதுகில் கொஞ்சினேன். அதுவே அவருடனான என் இறுதி கணம் என்பது எனக்கு தெரிந்தது.

அவர் காலமான அன்று காலையில் என்னை தேடி லண்டனுக்கு தொலைபேசி எடுத்திருக்கிறார். என்று ஒருபேப்பரில் இருந்து எனக்கு தகவல் வந்தது. அப்போது நான் கனடாவில் நின்றேன். எனக்கு அத்தகவல் கிடைக்கவில்லை. என்னுடன் என்ன பேச முயன்றாரோ? அதுவே என் பெரும் துக்கம்.

*'எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்*

*யாம் இலம் இதற்கு ஓர் கைமாறே' -*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## சரியானதைப் படியுங்கள்!

மகாத்மா காந்தி சிறு வயதில் பார்த்த ஹரிச்சந்திரன் நாடகம் அவர் மனதில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை அவர் பல முறை சொல்லி இருக்கிறார். மன்னனாக இருந்த ஹரிச்சந்திரன் அப்பழுக்கற்ற சத்தியவானாக இருந்ததால் சத்ய ஹரிச்சந்திரன் என்றழைக்கப்பட்டவன். அவனைப் பொய் சொல்ல வைக்கிறேன் என்று சூளுரைத்து விட்டு வந்த விசுவாமித்திர முனிவர் செய்த சூழ்ச்சியால் அவன் நாட்டை இழந்து, மனைவியை இழந்து, மகனை இழந்து இடுகாட்டில் வெட்டியானாக மாறி, மகன் பிணத்தையே மனைவி புதைக்க எடுத்து வந்த போதும் சத்தியத்திலிருந்து மாறாமல் இருந்ததை விவரிக்கும் நாடகம் அது. கடைசியில் விசுவாமித்திர முனிவர் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு அனைத்தையும் அவனுக்குத் திருப்பிக் கொடுத்ததில் முடியும் அந்த நாடகம் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற சிறுவன் மனதில் விதைத்த விதை அந்த சிறுவனை மகாத்மா காந்தியாக பிற்காலத்தில் வளர்த்து விட்டது. அதே நாடகத்தைப் பார்த்து விட்டு இத்தனை கஷ்டங்கள் பட வேண்டிய அவசியம் என்ன. ஒரு பொய் சொல்லி விட்டுப் போயிருக்கலாமே, எதையும் இழக்க வேண்டியிருந்திக்கவில்லையே என்ற ஒரு சராசரி மனிதனின் மன ஓட்டம் காந்தி மனதில் ஓடியிருக்குமானால் மகாத்மா காந்தியாக அவர் உருவெடுத்து இருக்க முடியாது.

எனவே ஒரு பாடத்தில் இருந்து சரியான படிப்பினை பெறுவது மிக முக்கியம். ஹரிச்சந்திரன் கதையைப் படித்து விட்டு உண்மை சொன்னால் இத்தனை பிரச்னைகள் வரும் என்று படிப்பினையைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சத்தியத்தை கைவிடலாகாது என்ற படிப்பினையைப் பெறவும் முடியும். வாழ்க்கைப் பள்ளிக்கூடத்தில் நடத்துகிற ஒரே பாடத்தில் பலரும் பலதரப்பட்ட பாடங்களைப் பெறுகிறார்கள் என்பதற்கு நம் தினசரி வாழ்க்கையிலேயே நாம் ஏராளமான உதாரணங்களைப் பார்க்கலாம்.

சரியான படிப்பினையைப் பெறுகிறோமா தவறான படிப்பினையைப் பெறுகிறோமா என்பதைப் பொறுத்தே வாழ்க்கையின் வெற்றி தோல்விகளும், உயர்வு தாழ்வுகளும் அமைகின்றன.

ஒரு அழகான ஆங்கிலக் கவிதையில் வரும் இந்த வரிகள் எனக்குப் பிடித்தமானவை-

Two men looked out from prison bars,

One saw mud, the other saw stars.

(சிறைக்கம்பிகள் வழியே இருவர் வெளியே பார்த்தார்கள். ஒருவன் சகதியைப் பார்த்தான். இன்னொருவன் நட்சத்திரங்களைப் பார்த்தான்)

இருக்கின்ற இடம் ஒன்றே ஆனாலும் பார்க்கின்ற பார்வைகள் வேறாகின்றன. பார்வைகள் மாறும் போது வாழ்க்கையே மாறுகின்றன. இது மிகப் பெரிய உண்மை.

நாம் சந்திக்கின்ற சூழ்நிலைகளும், மனிதர்களும் நமக்கு பாடங்களே. நாம் சரியான பாடம் கற்கத் தயாராக இருப்போமானால் நமக்கு நிறைய நல்லதைக் கற்க முடியும். மனிதர்களில் சிலர் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பிக்கிறார்கள். சிலர் எப்படி இருக்கக் கூடாது என்பதைக் கற்பிக்கிறார்கள். நாம் மாற்றிப் படித்துக் கொண்டு விடக்கூடாது. அதே போல ஒரே மனிதன் சில விஷயங்களில் இப்படி இருக்க வேண்டும் என்ற பாடத்தையும், சில விஷயங்களில் இப்படி இருக்கக் கூடாது என்ற பாடத்தையும் கற்பிக்கக் கூடும். ஏனென்றால் மனிதர்கள் அனைவரும் பலம் பலவீனம் கொண்டவர்கள் தானே. சரியானதை மட்டும் கற்க நாம் கற்றுக் கொண்டால் நம்மை சுற்றி உள்ள அனைத்துமே நமக்கு ஆசானாக இருக்க முடியும்.

ஒருவர் சிறந்த கலைஞராகவோ, விளையாட்டு வீரராகவோ இருக்கலாம். அதே நபர் தனிப்பட்ட முறையில் நம்பத்தகாத நபராகவும், மோசக்காரராகவும் கூட இருக்கலாம். அந்த நபரை ஒட்டு மொத்தமாகப் பின் பற்ற முடியுமா? அந்தக் கலையையும், விளையாட்டையும் பொறுத்த வரை அவரை முழுமையாக பின்பற்றலாம். மற்ற விஷயங்களில் எப்படி இருக்கக்கூடாது என்ற பாடத்தையே அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும். இந்த அறிவு இல்லாமையே இன்றைய காலத்தில் பெரிய சாபக்கேடு.


ஒரு துறையில் திறமைபடைத்தவன் எல்லா விஷயத்திலும் திறமை படைத்தவன் என்று நம்பும் முட்டாள் தனமான 'ஹிரோ வர்ஷிப்' நம்மிடையே நிறைய இருக்கிறது.

இருக்கும் கட்சித் தலைமையானாலும் சரி, கவர்ந்த கதாநாயகனானாலும் சரி, பிடித்த விளையாட்டு வீரனானாலும் சரி அவர்கள் செய்வதெல்லாம் சரி, அவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதே நம் வழி என்று இருக்காமல் எது நல்லதோ அதை மட்டுமே எடுத்துக் கொண்டு நல்லதல்லாதவற்றை ஏற்றுக் கொள்ளாமல் விலக்குவதே சரியான பாடங்களைப் படிக்கும் முறை. அன்னப்பறவை தண்ணீரையும் பாலையும் பிரித்து பாலை மட்டுமே குடிக்கும் திறமை கொண்டது என்று சொல்வார்கள். அது போல நாமும் எல்லாவற்றில் இருந்து சரியானதை மட்டுமே எடுத்துக் கொள்ள முடியுமானால் நாம் அடைய முடியாத சிகரங்கள் இல்லை.

மேலும் படிப்போம்....

- என்.கணேசன்

# மாறும் அரசியல்... அதனைக் கண்டு கொள்ளாத செயற்பாடுகள்..




**கோபி**
*ஒரு பேப்பர்*

இலங்கைத்தீவு பிரித்தானிய காலனித்துவத்துடமிருந்து விடுபட்டதிலிருந்தான கடந்த அறுபத்து மூன்று வருட காலத்தில், இப்போதுள்ளதுபோல் தீவின் அரசியல் நிலவரங்களில் சர்வதேச அரசியல் சூழ்நிலைகள் நேரடியான பாதிப்பினை ஏற்படுத்தியதில்லை. இலங்கைத்தீவு பௌதிக நிலையில் உள்ளது போல், அரசியலிலும் ஓரளவுக்கேனும் ஒரு தீவாகவே இருந்தது. தற்கால அரசியலில் இலங்கைத் தீவு மட்டுமல்ல ஏனைய நாடுகளின் விடயங்களிலும் வெளிச்சக்திகளின் பாதிப்பு காணப்படுவது தவிர்க முடியாதது. இந்நிலைக்கு, உலகமயமாக்கல், புதிய உலக ஒழுங்கு, உருவாகிவரும் பொருளாதார சக்திகள், சர்வதேச பொருளாதார நிலமைகள் என ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட விடயங்களைக் குறிப்பிடலாம். அவைபற்றி விரிவாகப் பார்ப்பதனை தவிர்த்து, இந்நிலையை கருத்திற்கொண்டு தமிழர் தரப்பின் அரசியல் நகர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைப் பார்ப்போம்.

விடுதலைப்புலிகளை விமர்சிப்பவர்கள், முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்கு, அவர்கள் சர்வதேச அரசியல் நகர்வுகளை அவதானித்து அதற்கேற்ப திட்டங்களை வகுக்கவில்லை என குற்றம் சாட்டுகிறார்கள். குறிப்பாக விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளின் முன்னாள் செயற்பாட்டார்கள் சிலர் இவ்விதமான குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். ஆனால் அவர்கள், தம்மிடமிருந்த மாற்றீடான திட்டங்கள் பற்றி இதுவரை எதுவும் தெரிவித்ததில்லை. அல்லது விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் குறைந்து போயுள்ள இன்றைய நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றியதிட்ட வரைபுஎதுவும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் இவர்கள் ஒன்றில் தோல்வி மனப்பான்மையுடன் கருத்து வெளியிடுகிறார்கள் அல்லது விடுதலைப் புலிகள் மீதான அதிருப்தியினை இவ்விதம் வெளிக்காட்டுகிறார்கள் என்றே எடுத்துக கொள்ள வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்டு வந்த ஆயுத வழியிலான போராட்டம் தோல்வியடைந்ததுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டதான தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. இனித் தமிழர்களுடன் அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் கூட பேசத் தேவையில்லை என்ற முடிவுக்கு சிங்கள அரசியல்வாதிகள் வந்தது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல. ஆனால் தமிழ் தேசியத் தளத்தில் நின்றவர்கள் நிலை குலைந்து போய் சிங்களப் பேரினவாதிகளின் காலில் விழுந்தமை சற்றும் எதிர்பார்க்காதது. இராணுவ மேலாதிக்கத்தினைக் கொண்டு தமிழர்களை அடக்கியாள முடியும் என்ற நம்பிக்கையுடன் சிங்களம் செயற்படும் போது அதனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என சில தமிழர்கள் பரப்புரை செய்ய முற்பட்டனர். ஈழத்தில் இனி ஒரு போராட்டம் ஆயுத வழியிலோ அல்லது வேறெந்த வழியிலோ முன்னெடுக்க முடியாது என்ற கருத்துருவாக்கத்தை வலுப்படுத்த அவர்களில் சிலர் முற்படுகின்றனர். இந்நிலையில் புலம்பெயர் நாடுகளில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் கோரிக்கை நீதியான சமாதானத்தை ஏற்படுத்துதல் என்ற தளத்தில் உள்ளதே தவிர, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என் பெயரில் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை சகித்துக் கொள்ள வேண்டும் என்பதாக இருக்கவில்லை.

தமிழர்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கப் புறப்பட்டது அவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் வாழ முடியாது போனமையால் அன்றி வேறெந்தக் காரணங்களினாலும் அல்ல. தனிநாட்டுக் கோரிக்கையின் சாத்தியத்தன்மை தற்போது குறைவாக இருந்தாலும், அதன் நியாயத்தன்மை முன்னரைவிட துல்லியமாக வெளிப்படுகிறது என்பதனை உலகில் பரந்துபட்ட மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கைகளை இலட்சியத் தன்மையானவையாகவும், யதார்த்தத்திற்கு புறம்பானதாகக் கருதும் அனைத்துலக சிந்தனை மையங்கள், மேற்கத்தைய இராச தந்திரிகள் ஆகியோர் இதனை உணர்நதுகொண்டுள்ளார்கள். இந்த அமைப்புகள் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் முன்னரை விட நெருக்கமாக பணிபுரிகின்றன என்பதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தாயகத்தை பொறுத்தவரை, போராட்டங்களை முன்னெடுக்கக்கூடிய சூழல் அங்கு இல்லை என்பது உண்மை எனினும் அவ்வாறான சூழல் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக போராட்டம் இதற்கு சான்றாக அமையும். எனினும் கொடூர யுத்த்திற்கு முகம்கொடுத்த மக்கள் அடிபணிவு அரசியலை ஏற்றுக் கொள்ளத் தாம் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கிறார்கள். தாயக மக்களிடமும், அங்குள்ள அரசியற் குழுக்களிடமும், குறிப்பாக கூட்டமைப்பினரிடம் ஏற்படும் மாற்றங்களுக்கு உந்து சக்தியாக புறக்காரணிகளே அமைந்துள்ளன. இவ்விடயத்தில் புலம்பெயர் அமைப்புகளின் பணி முக்கியமானதாக அமைந்துள்ளது.

இலங்கை தீவில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு சர்வதேச தரத்திலான விசாரணைக்குழு அமைக்கவேண்டும் என்ற விடயத்திலும் இப்பொறிமுறையூடாக அங்கு ஒரு புதிய அரசியல் ஒழுங்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்திலும் மேற்குலகம் உறுதியாக உள்ளது தெரிகிறது. இந்த அணியில் இணைந்து கொள்ள இந்தியா விருப்பின்றியாவது உடன்படும் சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன. இதுவிடயத்தில் டெல்லி அரசின் பிரமுகர்கள் வெளிப்படையாக கருத்துத் தெரிவிக்கத் தயங்கினாலும், தனது கருத்துகளை துணிகரமாக வெளிப்படுத்தும் தமிழ்நாடு மாநில முதல்வர் ஜெயலலிதாவின் கருத்துடன் அவர்கள் முரண்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. இன்னொருவிதமாக கூறுவோமானால், டெல்லி நேரடியாகவோ மறைமுகமாகவோ கூறமுடியாதவற்றை ஜெயலலிதா மூலமாக வெளிப்படுத்தி வருகிறது.

மேற்கின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப வெகுமக்கள் மத்தியில் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தும் பணியினை சனல் 4 காணொளித் தொகுப்பு செய்து வருகிறது. அண்மையில் சுவிற்சலாந்து நாட்டு தொலைக்காட்சி ஒன்றும் இதுபோன்ற காணொளியை ஒளிபரப்பியது. சனல் 4 தயாரித்த Sri Lanka's Killing Fields இவ்வாரம் டென்மார்க்கிலும், தாய்லாந்திலும் ஒளிபரப்பட்டது. இது தவிர இந்தியாவின் செய்தி அலைவரிசையான Headlines Today ம் அண்மையில் தயாரித்த செய்தி விவரணம் ஒன்றை வெளியிட்டது. இத்தொலைக்காட்சியின் செய்தியாளர் பிரியம்வதா சிறிலங்கா அரசின் அனுமதியின்றி வன்னிக்கு சென்று இவ்விவரணத்தை படமாக்கியுள்ளார் என்ற தகவல் அவதானிக்கத்தக்கது. இவ்விவரணத்தில் தமிழ் மக்களுக்கு நடந்ததை, நடப்பதை விபரிக்க மேற்கு சொல்லத் தயங்குகிற the "G" word என அழைக்கப்படும் genocide (இனப் படுகொலை) என்ற சொல்லாடல் பயன்பட்டது. மேற்கை திருப்திப்படுத்த இச்சொல்லாடலை தவிர்த்து வரும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்த வருட மார்ச் மாதத்தில் ஐ.நா. மனிதவுரிமைச் சபை முன் இவ்விடயம் விவாதிக்கப்பட்டு, சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ளும் பிரேரணை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 47 நாடுகளை அங்கத்தவர்களாக் கொண்ட மனிதவுரிமைச் சபையில் 13 ஆபிரிக்க நாடுகள், 13 ஆசிய நாடுகள், 6 கிழக்கு ஐரோப்பிய நாடுகள், 7 மேற்கு நாடுகள் (வட அமெரிக்கா உட்பட), 8 தென் அமெரிக்க நாடுகள் அடங்குகின்றன. மேற்குலகின் ஆதரவு நாடுகள் தவிர்ந்த மற்றய நாடுகள் எவ்விதமான முடிவினை எடுக்கும் என உறுதியாகக் கூறமுடியாது. இந்நிலையில் சீனா, இரஷ்சியா போன்ற நாடுகளின் உதவியைப் பெறவும் அவர்களுக்கு நெருக்கமான நாடுகளின் ஆதரவினைப் பெறவும் சிறிலங்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மகிந்தவின் சீனப் பயணம் இதனையே உணர்த்தி நிற்கிறது. சீனாவின் ஆதரவைப்பெற்றுக் கொள்வதற்காக, அதன் நலன்களைப் பேணுவதற்கு எந்த விட்டுக் கொடுப்புகளை யாவது தாம் செய்யத் தயாராயிருப்பதாக ஒரு பட்டியலுடன் அங்கு சென்றிருப்பார்.

தமிழ் மக்களுக்கு எதிரான போரின்போது, முரண்படும் நாடுகள் உட்பட ஏறத்தாள முழு உலகின் ஆதரவினையும் அனுசரணையும் பெற்ற சிறிலங்காவின் ஆதரவுத்தளம் சீனா, இரசியாவுடன் குறுகிப்போனது தமிழர்தரப்பிற்கு அனுகூலமான ஒன்றாகவே கருத முடியும். தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் ஈழத் தமிழ் மக்களுக்கான அனுதாபம் அதிகரித்துள்ளது. இதில் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் சற்றும் குறைத்து மதிப்பிடக் கூடிய ஒன்றல்ல. ஈழத்தமிழர் விடயத்தில் தமிழ்நாட்டின் முதன்மை அரசியற் சக்திகளின் மத்தியில் வேறுபட்ட கருத்துகள் காணப்படவில்லை. வரலாற்றில் இவ்வாய்ப்பான சூழலை தமிழர்கள் கொண்டிருக்கவில்லை.

இச்சூழலைப் பயன்படுத்தி எமது ஆதரவு வட்டத்தினை அதிகரிக்கக் கூடிய அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய கடமை புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடம் உள்ளது. துரதிர்ஸ்டவசமாக கவரில் எழுதப்பட்டுள்ளது போல் உள்ள இச்செய்தியினை உணர்ந்து கொள்ளாமல், தமிழ் அமைப்புகள் (தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும்) தமக்கிடையே அதிகாரப் போட்டியில் ஈடுபடுவது, தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ள செயற்பாடுகளாகக் கருத முடியாது. இந்நிலையில் தமிழ் மக்களிடையே சாதி, மத, பிரதேச வேறுபாடுகளை வளர்க்க முற்படுபவர்களை இனங்கண்டு ஒதுக்குவதும் அவசியமாகிறது.

## ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

### New Malden
| | |
|---|---|
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |

### Tooting
| | |
|---|---|
| Yhaal House | 020 8767 8585 |
| Sharon | 020 8672 9353 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Prime Foods | 020 8682 3777 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| Spice way | 020 8685 1122 |

### Croydon
| | |
|---|---|
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |

### Lewisham
| | |
|---|---|
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |

### Eastham
| | |
|---|---|
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |

### Ilford
| | |
|---|---|
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |

### Edmonton
| | |
|---|---|
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |

### Walthamstow
| | |
|---|---|
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |

### Harrow
| | |
|---|---|
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |


### Wembley
| | |
|---|---|
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |

### Ealing
| | |
|---|---|
| Amman kovil | 020 8810 0835 |

### Greenford
| | |
|---|---|
| Ambiha | 020 8813 0967 |

### South hall
| | |
|---|---|
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Ruby Food Store | 020 8813 9663 |
| Ruby restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

# வேட்டையாடப்பட்ட கதைகள் வேட்டைக்காரரையே புகழ்ந்து சொல்லும்



உலகின் அனைத்துச் சமூகங்களிற்குள்ளும் வரலாறு என்ற விடயம் முக்கியத்துவம் பெற்றுத் தான் விளங்குகின்றது. எல்லோரையும் போல அல்லது மற்றையவர்களைக் காட்டிலும் சற்றுத் தூக்கலாக நாங்களும் வரலாறு பற்றிக் காலதிகாலமாகக் கதைத்துத் தான் வருகின்றோம். இருப்பினும், துரதிஸ்ரவசமாக, வரலாறு என்ற வார்த்தையும் எங்கள் மத்தியில் அவ்வப்போது வெறும் கோசமாக மட்டும் ஆகிப் போய் விடுகின்றது. அந்தவகையில் வரலாறு என்ற வார்த்தை பற்றி எமது சமூகம் சார்ந்து பார்க்க விழைகிறது இப்பபதிவு.

சிங்கங்களின் பிரத்தியேக வரலாற்றாசிரியன் உருவாகும் வரை, சிங்கங்கள் வேட்டையாடப்பட்ட கதைகள் வேட்டைக்காரரையே புகழ்ந்து சொல்லும்? ஈபோ (நைஜீரியா) பழமொழி

கடந்து போன போர்களை வைத்து எதிர்காலப் போர்களைத் திட்டமிட்டுக் கோட்டைவிடும் இராணுவ ஜெனரல்களைப் போல, பல பெற்றோர்கள், கடந்து போன காலங்களிற்காகத் தம் குழந்தைகளைத் தயார் படுத்துகின்றார்கள்? பெயர் மறந்து போன எப்போ வாசித்த ஒரு புத்தகத்தில் இருந்து

வரலாறு என்பதில் ஒரே ஒரு புரிதல் என்பது சாத்தியமற்றது. இருப்பினும், ஒரு பொதுவான புரிதலை வரலாறாக ஏற்றுக் கொள்ளுவதும், ஆவணப் படுத்துவதும், பரப்புவதும், சந்ததிகள் கடந்து காவிச் செல்லுவதும் பல நாடுகளிலும் நிறுவனங்களிலும் நடந்தவண்ணமே உள்ளன. தமது குழுமத்திற்கு ஆதரவான வரலாற்றினை கருத்தொருமித்து ஏற்றுக் கொள்வது அமெரிக்கா தொட்டு தென் சூடான் வரை நடக்கிறது. வாழ்வாதாரத்திற்கான அன்றாட முனைதல்கள் சார்ந்து தம்மைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஒன்றாகவும் கூட மேற்படி வரலாற்றின் ஏற்றுக்கொள்ளலைப் பார்க்க முடியும். ஆனால் அத்தகைய ஒரு குழுநிலை உடன்பாட்டிற்கு வரலாறு சார்ந்து ஒருவர் வருவதற்கு, குறித்த குழுமத்தின் அங்கத்தவராக எத்துணை தூரம் அவர் தன்னை உணர்ந்து கொள்கிறார் என்பதும் குறித்த குழுமத்தின் பெறுமதிகளோடு அவர் எத்தனை தூரம் உடன்படுகிறார் என்பதும் அடிப்படைகளாக விளங்குகின்றன.

உதாரணமாக, கொள்கை வகுப்புக்கள் சார்ந்து குறித்த நாளின் அமெரிக்க அரசாங்கத்தோடு உடன்படாதோர் பலர் இருப்பினும் அமெரிக்கா என்ற பொதுமையோடும் அதன் இருப்பிலும் உயர்விலும் மிகப்பெரும்பான்மையான அமெரிக்கர்கள் எப்போதும் கரிசனையுடையவர்களாகவே இருக்கின்றார்கள். தம்மை அமெரிக்கர்களாக, அமெரிக்காவின் உயர்வைத் தமது உயர்வாக சந்தேகத்திற்கிடமின்றி இப்பெரும்பான்மையால் ஏற்றுக் கொள் முடிகின்றது. இந்த அடிப்படையிலேயே கட்சி அரசியல் பன்மைத்துவம் என்பவற்றிற்கெல்லாம் அப்பால் அமெரிக்காவின் ஒவ்வொரு ஜனாதிபதியும் கதாநாயகர்களாகச் சித்தரிக்கப்பட வேண்டும் என்பது தொட்டு அமெரிக்கா என்பதன் வரலாறு அமெரிக்காவைப் புகழ்வதாய் அமெரிக்காவின் இருப்பிற்கும் உயர்விற்கும் உறுதுணையாய் இருப்பதாய் ஏற்றுக் கொள்ளப்படுவது அவர்களிற்குச் சாத்தியமாகிறது. இது அமெரிக்காவிற்கு மட்டும் அன்றி உலகின் வெற்றிபெற்ற அத்தனை நிறுவனங்களிற்கும் குழுமங்களிற்கும் நாடுகளிற்கும் பொருந்தும். தாம் சார்ந்திருக்கும் குழுமத்தின் உயர்வினைத் தமது உயர்வாக அதன் அங்கத்தவர்கள் கருதும் வரை தான் அக்குழுமத்தின் வரலாறு அவர்களிடம் முக்கியத்துவம் பெறுகிறது.

நாம் சாந்த குழுமத்தின் அங்கமாக நாம் எம்மை உணராதவரை, வரலாற்றில் இருந்து பாடம் கற்போம் என்பது சாத்தியமற்றது. பொதுமையின் உயர்வு பிரத்தியேக உயர்வாக உணரப்படாதவரை பொதுமையின் எந்த வரலாறும் எதையும் கற்றுத்தராது. சிங்கம் தன்னைச் சிங்கமாக உணராதவரை சிங்கள் வேட்டையாடப்பட்ட கதை சிங்கத்திற்கு அர்த்தமற்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தைப் பொறுத்தவரை, ஈழத்தமிழர் என்ற குழும உணர்வையும் ஈழத்தமிழரின் அபிலாசை என்ற ஒரு பொதுவான பெறுமதிக்கோர்வையினையும் இப்பெறுமதிகள் சார்ந்த கனவுகளையும் மிகமிகப் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி உள்ளூர உண்மையாக உணர்ந்த நிலைமை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் மட்டுமே சாத்தியமானது என்பது என்னைப் பொறுத்தவரை விவாதத்திற்கு அப்பாற்பட்ட உண்மை.

**இரவு உணவின் பின் கோனியாக்குடன் கதைத்து இரசிப்பதற்கு ஈரோஸ் புளொட் மட்டுமல்ல சமையத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் துண்டுப் பிரசுரங்களும் மேற்தட்டுத் தமிழ் மக்களிற்கு இனித்தது தான்.**

எண்பதுகள் வரை ஏதோ ஒரு குழும உணர்வு படிப்படியாக எமக்குள் அருக்கூட்டிக்கொண்டிருந்தது என்பது உண்மை தான் என்றபோதும் முளை விட்ட குழும உணர்வு மரமாக வளரமுடியாதபடியே நிலைமை இருந்தது. எமது நம்பிக்கையீனங்களும் எமது சமூகத்தின் இதர குணவியல்புகளும் முளைகளை முறித்தெறிந்தபடியே இருந்தன. உன்னுடைய மாடு போனது என்னுடைய மாடு வந்ததற்குச் சமன் என்ற அளவிற்குப் புரையோடிப் போயிருந்த பொதுமைக்கு எதிரான பிரத்தியேகம் சார்ந்த சிந்தனையினை, ஈழத்தமிழர் என்ற பொதுமையாக, உனது வாழ்விற்காக நான் எனது உயிரைக் கொடுக்கின்றேன், எனது சாவு உனது வாழ்வை மேம்படுத்தும் அதனால் எங்கள் நாடு உயரும் என்ற மனநிலையாக ஆயுதப் போராட்டம் தான் மாற்றியது.

ஆனால் ஆயுதப் போராட்டம் எடுத்த எடுப்பில் இதனைச் சாதித்து விடவில்லை, பல நம்பிக்கையீனங்கள் புரையோடிப்போயிருந்த சமூகத்தில், முப்பதிற்கு மேற்பட்ட இயக்கங்கள் தோன்றிய போதும், சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்ற வாசகம் பொதுவாகப் புழங்கும் அளவிலேயே மக்கள் இருந்தார்கள். மக்களின் இத்தகைய நம்பிக்கையீனங்களிற்குத் தூபம் போடும் வகையில் பிரச்சினை என்ன என்பதைத் தெளிவாக்காது பிரச்சினைக்குத் தீர்வு காணப் பல இயக்கங்கள் விழைந்து கொண்டிருந்தன.

சிங்களவன் திட்டமிட்டுக் குடியேற்றம் செய்து எம் நிலங்களைப் பறிக்கிறான் என்று ஒரு புறத்தில் போராட்டத்தை நியாயப்படுத்திய போராளி-மகன் இன்னுமொரு புறத்தில் சமவுடமை கதைத்து எடுத்த எடுப்பில் தந்தையின் நிலங்களைப் பிடுங்கித் தொழிலாளரிற்குப் பகிர்வதைத் தந்தையால் புரிந்து கொள்ளமுடியவில்லை. தந்தையின் நிலையைப் பார்த்த ஊரவரிற்கும் தம் நிலங்கள் பற்றியும் சொத்துப் பற்றியும் சிந்தனைகள் எழவே செய்தன. சிங்களவன் கட்டவிழ்க்கும் பிரச்சினை பற்றியே ஒரு திட்டவட்டமான தெளிவினை ஏற்படுத்த முன்னர் உலகளாவிய புரட்சி வரலாறுகள் இயக்கங்களின் பிரசுரங்களாக வந்து கொண்டிருந்தன. கொழும்பிற்குப் போவது பற்றிய பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கையில் பாட்டாளிகளின் பேரணி பருத்தித்துறையில் இருந்து பேளின் நோக்கி நகரும் என்ற கோசத்தை மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. சாம்பல் மேட்டில் இருந்து பூ பூக்கும் என்ற வாசத்தை வாசிக்கவும் ரசிக்கவும் உடன்பட்ட மக்கள் அவ்வாக்கியத்தின் இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட நடைமுறைப் பிரயோகம் புரியவில்லை என்றே உணர்ந்தார்கள். மொத்தத்தில் முப்பத்தாறு இயக்கங்கள் தோன்றினும் ஒரு இலக்கில் ஒரு பொதுமையில் ஒரே அபிலாசைகளோடு ஒரு குழுமமாக தேசியத்தைத் தைப்பது என்பதும் தைக்கப்பட்ட தேசியத்தை உணர்வது என்பதும் எண்பதுகளின் நடுப்பகுதிகள் சந்தித்த துன்பியல் சம்பவங்களின் பின்னரே மக்களிற்குக் கைவரப் பெற்றது.

ஆழிக்குமரன் ஆனந்தன் சாதிதத்தால் சாதனை என்று ஏற்று மகிழ்ந்தவர்கள் பக்கத்து வீட்டுப் பையன் 4-ஏ எடுத்தால் பொறாமையில் உழலும் நிலையே ஆயுதப் போராட்டம் வரை இருந்தது. பொறாமை எரிச்சல் என்பனவற்றைத் தாண்டி நாம் அனைவரும் எமக்கான பொது வெற்றியாய் அனுபவிப்பதற்கு தேசிய விளையாட்டு அணிகள் கூட எம்மிடம் இருக்கவில்லை. பள்ளிக்கூடங்களிற்கிடையேயான கிரிக்கட் போட்டிகளைக் கூட பிரிந்து நின்றே நாங்கள் பார்த்தோம். ஊர்கள் சட்டையிட்டுக் கிடந்தன. இந்நிலையில் எம் அனைவரிற்குமான வெற்றிகள் என்று நாம் மகிழக் கூடிய சந்தர்ப்பங்களை ஆயுதப் போராட்டமே ஏற்படுத்தித் தந்தது. எமது தேசியம் முளைநிலை தாண்டி வளரத் தொடங்கியது.

தேசியம் தன்னாட்சி சுயநிர்ணயம் என்ற வார்த்தைகள் மக்களிற்குப் பரிட்சயமாக நெடுங்காலம் இருந்திருப்பினும் அப்படியென்றால் என்னவென்பதை புத்தகம் படிக்காது மக்கள் இயற்கையாக உணர்ந்தமை புலிகளின் காலத்திலேயே சாத்தியப்பட்டது. இதர இயக்கங்களை அழித்தது என்பது மாபெரும் விலை என்பது அடுத்த கருத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது. ஆனால் அந்த விலையினை நிர்ணயித்தவர்கள் புலிகள் அல்லர். புலிகள் செய்தது நிர்ணயிக்கப்பட்ட கோர விலையினைக் கொடுத்தது மட்டுமே.

**பொபி தாஸ் மோதல், ஊரிற்குள் கொள்கைள், தோளில் ஏ-கே தொங்க ஒரு கையில் சிகரெட் மறு கையில் பன்ராவோடு நடமாடிய பொபி குரூப் பொடியள் என்று நிலமை இருந்தபோது வலிய நிறுவனமான புலிகள் நிலமையினை சாதகமாக்கிக் கொண்டமை தான் நடந்தது.**

அயலவனின் மாடு தொலைந்ததை இட்டு மகிழ்ந்த என்னைத் தேசியத்தின் பெயரில் அயலவனிற்காக உயிர்விடும் நிலைக்கு மாற்றியதுமட்டும் அன்றிஎனது உயிர்க்கொடையினை எனது ஊரையும் தாண்டி என் மக்கள் ஒரேவாறு புரிந்து கொண்டமைக்கான நிலையாக மாற்றுவதற்கு அத்தகைய விலை தேவைப்பட்டது. இந்தவிலை ஏன் தேவைப்பட்டது என்பது புலிகள் மீதான விசாரணையால் மட்டும் புரியப்படமுடியாதது.

புலிகளில் மட்டும் தான் உயிர்கொடுக்க இளைஞர்கள் சித்தமானார்கள் என்பதாய் இதனை எவரும் தவறாகப் புரிந்து விடாதீர்கள். இங்கு நான் கோடிட்டுக் காட்ட விழைவது போராளியின் உயிரிழப்பைத் தமக்கான தியாகமாய் மக்கள் உணர முடிந்தமையினை மட்டுமே. அதாவது சிங்களக் குடியேற்றத்தால் உனது காணி பறிபோகும் என்று இயக்கம் தொடங்கி பின் கொமினிசத்தின் பெயரில் அவ்வியக்கம் எனது காணியினைப் பறித்துக் கொண்டிருக்குமேயாயின், அவ்வியக்கப் போராளியின் இழப்பை எனக்கான தியாகமாக உடனடியாகப் புரிவது எனக்குச் சிரமமாய் இருக்கும். (புலிகள் மட்டும் இதைச் செய்யவில்லையாக்கும் என்ற நக்கல் கேட்கிறது. ஆனால் நான் இங்கு குறிப்பிடுவது பொதுமை கட்டியெழுப்பப் படுவதற்கு முந்திய காலத்தை.)

மேலும் தேசியம் என்ற பொதுமையினை மக்கள் உள்ளுக்குள் இயல்பாய் உணர்வதற்கு முன்னர், அத்தேசியத்தின் அபிலாசைகள் சார்ந்து ஏதேதோ இசங்கங்களை மேற்கோள் காட்டிப் பிரச்சாரங்கள்? துண்டுப்பிரசுரங்களாக வந்துகொண்டிருந்தன. மக்கள் அப்பிரச்சாரங்கள் முன்வைத்த இலக்குகளைத் தமது இலக்குகளாகப் பார்த்தார்களா என்பது தான் இங்?கு பிரச்சினை.

அதாவது, ஏகப்பட்ட நம்பிக்கையீனங்கள், சிறுபிள்ளை வேளாண்மைச் சிறுகதைகள் முதலியவற்றின் மத்தியில் முதலில் பொதுமையின் குறைந்தபட்ச அபிலாசைகள் என்றேனும் எதையேனும் வரையறுப்பது அவசியம். அதன் பின்னர் வரையறுத்த அபிலாசைகள் அடையப் படக்கூடியன என்ற நம்பிக்கை நம்பிக்கையீனங்களையும் பரிகாசங்களையும் தாண்டி நடைமுறை ரீதியாக ஏற்படுத்தப்படவேண்டும். அதுவும் எமது வளங்களை வைத்து அவ்விலக்குகள் எட்டப்படலாம் என்ற நம்பிக்கை பிறக்கவேண்டும். என்னைப் பொறுத்தவரை புலிகளால் மட்டுமே இது சாத்தியமானது. நடைமுறையில் உணரக் கூடிய தேசியம் என்ற ஒன்றையும் அத்தேசியதத்திற்கான பொதுவான அபிலாசையினை வரையறுத்துக் கொள்வதிலும் எமது வளங்களை வைத்து நாம் வரையறுத்த அபிலாசைகளை அடையலாம் என்பதை மக்கள் நம்புவதற்கும் பகீரதப் பிரயத்தனம் தேவைப்பட்டது. இந்த முயற்சிகளின் முன் தான் . இதர இயக்கங்களைத் தடைசெய்ய வேண்டிய அவசியம் புலிகளிற்கு ஏற்பட்டது என்பது எனது அபிப்பிராயம்.

இரவு உணவின் பின் கோனியாக்குடன் கதைத்து இரசிப்பதற்கு ஈரோஸ் புளொட் மட்டுமல்ல சமையத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் துண்டுப் பிரசுரங்களும் மேற்தட்டுத் தமிழ் மக்களிற்கு இனித்தது தான்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்)

# உலகப் பொருளாதார நெருக்கடி பெரும் சமூக, அரசியல் நெருக்கடியாக வெடிக்குமா?



**அமெரிக்க டொலரின் பெறுமதி இப்படி ஆகிவிட்டதாம்**

**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

உலகெங்கும் உள்ள பங்குச் சந்தைகள் கடந்த சில வாரங்களாக பெரும் வீழ்ச்சியைக் கண்டன. சில பணக்கார நாட்டு அரசுகள் தடுமாறி நிற்கின்றன. பொருளாதார வல்லுனர்கள் தலை முடியைப் பிய்த்துக் கொள்கின்றனர். சமூகவியலாளர்கள் அச்சம் கொள்கின்றனர். உலகமே வங்குரோத்து நிலையை அடைந்து விட்டதா என்று பலரும் அஞ்சுகின்றனர்.

## என்னடா இந்த வாஷிங்டனுக்கு வந்த சோதனை

அமெரிக்க அரசின் கடன் உச்ச வரம்பை உயர்த்தாவிடில் உலக நிதிச் சந்தை பெரும் நெருக்கடிக்கு உள்ளாகும் என்று எதிர்பார்க்கப் பட்டது. உச்ச வரம்பு கடைசி நேரத்தில் உயர்த்தப் பட்டது. ஆனால் உலக நிதிச் சந்தையில் நெருக்கடிகள் தொடருகின்றன. அமெரிக்க அரசின் கடன் உச்ச வரம்பை உயர்த்தாவிடில் அமெரிக்காவின் கடன்படு திறன் தாழ்த்தப்படும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் உயர்த்திய பின்னும் அமெரிக்காவின் கடன்படு திறன் தாழ்த்தப்பட்டது. 1998இல் ஜப்பானின் கடன்படு திறன் குறைக்கப்பட்ட பின்னர் அங்கு பொருள்களின் விலைகள் சரியத் தொடங்கின. பணச்சுருக்கம் ஏற்பட்டது. பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதே நிலை அமெரிக்காவிற்கும் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு தடிமன் வந்தால் உலகெங்கும் நியூமோனியா வரும். இப்போது அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு நியூமோனியா. இதனால் உலகப் பொருளாதாரத்திற்கு என்ன நடக்கும் என்ற பயம் ஆட்சியாளர்களை ஆட்டிப் படைக்கிறது. உலக பொருளாதார உற்பத்தியில் காற்பங்கு அமெரிக்காவினுடையது. சென்ற ஆண்டு 2% ஆல் குறைந்தத அமெரிக்க மொத்தத் தேசிய உற்பத்தி இனி 10% வீதத்தால் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கடன் கொடுத்துக் கலங்கும் சீனா.

**காய்ஞ்சி போன பூமி எல்லாம் வத்தாத நதியை பாத்து ஆறுதல் அடையும். அந்த நதியே காய்ஞ்சி போய்ட்டா??**

தனது மக்களைச் சுரண்டி அவர்களுக்கு மிகக் குறைவான கூலியைக் கொடுத்து பல உற்பத்திப் பொருட்களை சீனா மலிவான விலையில் உற்பத்தி செய்கிறது. அமெரிக்காவின் தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் சீனத் தொழிலாளர்களில் கூலி இருபதில் ஒரு பங்கு மாத்திரமே. தனது மலிவான பொருட்களை உலகெங்கும் ஏற்றுமதி செய்த சீனாவிற்கு வெளிநாட்டுச் செலவாணி உபரியாக 3.2ரில்லியன் டொலர்கள் கிடைத்தன. அவற்றில் மூன்றில் இரு பங்கை சீனா உலகப் பெரும் பணக்கார நாடான அமெரிக்காவில் முதலீடு செய்தது. அவற்றில் பெரும்பாலானவை அமெரிக்க அரசின் கடன் முறிகளில் முதலிடப் பட்டன. சுருங்கக் கூறின் வரவிற்கு மிஞ்சி செலவு செய்யும் அமெரிக்காவிற்கு சீனா கடன் கொடுத்தது. அமெரிக்கா தனது நாட்டில் இருந்து பொருட்களை போதிய அளவில் இறக்குமதி செய்யவுமில்லை சீனா தனது நாணயத்தின் பெறுமதியைக் கூட்டவுமில்லை. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா சீனாவைப் பழி வாங்க சீனாவின் அமெரிக்க முதலீடுகளின் பெறுமதியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறதா என்பது பெரும் கேள்வி. பராக் ஒபாமா அரசியலமைப்பின் 14வது திருத்தத்தைப் பாவிக்காமல் எதிர்க்கட்சியினருக்கு விட்டுக் கொடுத்தது அமெரிக்காவின் நடவடிக்கையில் சந்தேகத்தை சீனாவிற்கு ஏற்படுத்துகிறது. தனது முதலீடு கரைவதை யிட்டு சீனா கலங்கி நிற்கிறது. சீன அரச ஊடகம் அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் வரவுக்கு மிஞ்சி செலவழித்ததாக திட்டித் தீர்த்தது.

## பலமுனைச் சிக்கல்.

உலகப் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறை, நாடுகளிடையான வர்த்தகம், வங்கித் துறை, நாணயமாற்று, பங்கு வர்த்தகம் போன்றவை முக்கியமானவை. உற்பத்தித் துறை பாதிக்கப்படுவதுண்டு. நாடுகளிடையான வர்த்தகம் தடைப்படுவதுண்டு. வங்கிகள் திவாலாவதுமுண்டு. பங்குச் சந்தையில் பெரும் வீழ்ச்சிகளும் நிகழ்ந்ததுண்டு. நிதிச் சந்தை ஆட்டம் காண்பதுமுண்டு. இவை தனித்தனி அல்லது இரண்டு ஒன்றாக நடப்பதுண்டு. ஆனால் இப்போது பல முனைகளில் உலகப் பொருளாதாரம் ஆட்டம் காணுகிறது. வங்கிகள் நட்டம் காண்கின்றன. அரச கடன் முறிகளின் விலை வீழ்ச்சியைக் காண்கிறது. பங்குச் சந்தைகள் சரிகின்றன. உற்பத்தித் துறை பாதிக்கப் பட்டுள்ளது. இவை எல்லாம் பிழைக்கும் போது அரசுகள் களத்தில் இறங்கிச் செயற்படும். ஆனால் இப்போது பல அரசுகள் நிதிப் பற்றாக் குறையை எதிர் கொள்கின்றன. ஏற்கனவே பல நாடுகள் வட்டிவீதத்தை குறைத்து விட்டன இனிக் குறைக்க இடமில்லை.



**அமெரிக்கக் கடன் நெருக்கடிக்கு குடியரசுக் கட்சியினரின் தவறான நடவடிக்கையை விளக்கும் கருத்துப் படம்**

## வாவு எட்டணா!! செலவு பத்தணா!!! கடைசியில் துந்தணா!!!!

அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின், அயர்லாந்து, கிரேக்கம் உடபடப் பல நாடுகளின் அரசுகள் வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் தவித்து நிற்கின்றன. பொருளாதாரம் நலிவடையும் போது அரசுகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளான வரிக் குறைப்பு அரச செலவீன அதிகரிப்பு வட்டி வீதக் குறைப்பு போன்றவற்றைச் செய்ய முடியாத நிலை உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ளது. அப்படிச் செய்ய அரசு கடன்பட வேண்டி வரும். அரசுகள் பல கடன் சுமை கூடியதால் தவிக்கின்றன. காய்ஞ்சி போன பூமி எல்லாம் வத்தாத நதியை பாத்து ஆறுதல் அடையும். அந்த நதியே காய்ஞ்சி போய்ட்டா??

## குறைத்ததெல்லாம் குறைத்தான்! அவன் யாருக்காகக் குறைத்தான்?

அமெரிக்க பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபை பராக் ஒபாமாவின் எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒபாமாவின் கைகளை அவர்களால் கட்டிப் போட முடியும். பொருளாதாரத்தை சீர்படுத்த பராக் ஒபாமாவால் செய்யக் கூடிய ஒரே ஒரு நடவடிக்கை வட்டி வீதத்தைக் குறைப்பது தான். உலகெங்கும் பங்குச் சந்தைகளில் பெரும் விலை வீழ்ச்சியைத் தொடர்ந்து ஒபாமா நிர்வாகம் வட்டி வீதத்தை 09-08-2011 இலன்று பூச்சியத்திற்கு கிட்டக் குறைத்துவிட்டது. இது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த பங்குகளின் விலைகள் உலகெங்கு உயர்ந்தன. வட்டி வீதக் குறைப்பிற்கான பயன் பெரும் முதலீட்டாளர்களை உடன் சென்றடைந்தது. இது மக்களைச் சென்றடைய சில ஆண்டுகள் எடுக்கும். வட்டிக் குறைப்பால் மக்களின் கடன் பளு குறையும். நிறுவனங்கள் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதிற்கு சில காலம் எடுக்கும்.

## குறையும் எரிபொருள் விலைகள்

அமெரிக்க நிதி நெருக்கடியைத் தொடர்ந்து எரிபொருள்களின் விலைகள் குறையத் தொடங்கின. இது உறபத்தி மற்றும் விநியோகச் செலவுகளில் குறைவை ஏற்படுத்தி உற்பத்திகள் அதிகரித்து வேலைவாய்ப்புக்கள் அதிகரித்து... நீண்ட நாட்கள் எடுக்கும். எரிபொருள் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி பொருளாதாரத் தூண்டலுக்கு ஏதுவானதாக இல்லை. மல்லிகைப் புரட்சிகளின் பின்னர் ஆபிரிக்க நாடுகளின் தேசிய உற்பத்திகள் வீழ்ச்சியைக் கண்டுள்ளன. இன்னொரு பணக்கார நாடான ஜெர்மனியிலும் ஏற்றுமதித் துறையில் 1.2வீத வீழ்ச்சி யூன் மாதத்தில் ஏற்பட்டுள்ளது.




**TEA(Taxed Enough Already) Party என்ற பிற்போக்குக் கும்பலிடம் குடியரசுக் கட்சி சிக்கிவிட்டது என்பதை விளக்கும் படம். குடியரசுக் கட்சிக்கு இன்னொரு பெயர்: GOP. Grand Old Party**

## உலகெங்கும் மக்கள் கிளர்ந்து எழலாம்

வருங்காலப் பொருளாதார நிலையில் நம்பிக்கை இல்லாத நிலையில் உற்பத்தியாளர்கள் வேலைக்கு ஆட்சேர்ப்பது குறையும். மக்கள் தங்கள் செலவைக் கட்டுப்படுத்துவார்கள். இது ஒரு எதிர்மறை விளைவை பொருளாதாரத்தில் ஏற்படுத்தும். இதனால் நிறுவனங்கள் ஆட் குறைப்பு நடவடிக்கையில் இறங்கலாம். உலகப் பொருளாதாரம் ஆட்டம் காணும் போது உலகெங்கும் வேலையில்லாப் பிரச்சனை தலை தூக்கும். அமெரிக்காவில் மட்டும் 25 மில்லியன் பேர் நிரந்தர வேலையின்றி இருக்கின்றனர். வேலையில்லாப் பிரச்சனை சமூக குழப்பங்களுக்கு வழி வகுக்கும். சுதந்திரப் பொருளாதார முறைமைமீதும் இப்போதுள்ள ஆட்சி முறைமை மீதும் மக்களுக்கு நம்பிக்கை இழந்து மக்கள் உலகெங்கும் கிளர்ந்து எழலாம்.

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா
www.orumanam.com

# இங்கையுமா கலவரம்?

சுகி
*(ஒருபேப்பருக்காக)*

நாம் தான் 1956, 1977, 1983 என அடுக்கடுக்காக இன கலவரங்களையும், இனப் படுகொலைகளையும் பார்த்து தப்பிப் பிழைத்து இங்கு வந்திருக்கிறோம் என்று பார்த்தால், இங்கு நடக்கும் கலவரம் என்ன காரணத்திற்காக நடக்கிறது என்று பெரிய சமூக அரசியல் ஆய்வாளர் எல்லாம் தலைமுடியைப் பிய்த்து கொண்டு யோசிக்கும் அளவிற்கு, தென்னை மரத்தில தேள்கொட்டினால், பனைமரத்தில நெறிகட்டுமாம் என்ற கதை மாதிரி நடக்கிறது.

மாக் டக்கன் என்ற 29வயது Tottenham வாசியை விசேட ஆயுதம் தாங்கிய காவல் படையினர் (Scotland Yard CO19) கடந்த வியாழக்கிழமை இரவு சுட்டுக் கொன்றார்கள். முதலில் மாக் டக்கன் ஒரு துப்பாக்கி வைத்திருந்ததால் காவல் படையால் சுடப் பட்டார் என்றும், பின்னர் அவரது துப்பாக்கியால் தானே தன்னைச் சுட்டுக் கொண்டதாகவும் பல்வேறு கதைகள் காவல் தரப்பில் இருந்து கூட சரிவரத் தெரியாமல் வந்தபோதும், கொலின் ஸ்பாரோ, எனும் சுயாதீன காவல் விசாரணை ஆணைக் குழுக்கான பிரதி உயர் விசாரணை அதிகாரியின் அறிக்கையின் படி அவ்விடத்தில் வேறு எந்த துப்பாக்கியும் இருக்கவில்லை என்றும், மாக் டக்கன் இறப்பதற்கு காரணமான குண்டு, விசேட காவல்படையினருடையது என உறுதிப்படுத்தியுள்ளார்.

நாலு குழந்தையின் தந்தையான மாக் டக்கன் கொல்லப்பட்டதன் தாக்கத்தின் எதிரொலியாக சுமார் 120 பேர் Tottenham காவல் நிலையத்திற்கு முன்பாக ஆர்பாட்டம் செய்தனர். அப்போது அவர்களை முன்னேற விடாது ஒரு வரிசையில் தள்ளும்போது, காவல்துறை அதிகாரி ஒரு 17 வயது பெண்ணை தனது பொல்லால் அடித்துள்ளார்.

இந்தக் கதை பரவிய, அடுத்த ஒரு மணித்தியாலத்திற்குள் கலவரம் தொடங்கி விட்டதாகச் சொல்லப்படுகிறது.

வடக்கு லண்டனின் தொடங்கப்பட்ட காவல்துறை வாகனத்தின் மீதான தாக்குதல், கடைகள் யன்னல்கள் உடைப்பு, எரிப்பு என்று சுமார் 200 இளவயதுடையவர்களால் தொடங்கப்பட்டு மிக வேகமாக பரவி Wood Green, Clapham Junction, Camden High street, Croydon, Ealing என்று லண்டனோடு மட்டும் நின்று விடாது, Manchester, Liverpool, West Bromwich, Nottingham. Birmingham, Leeds, Bristol, Salford, Nottingham ஆகிய இடங்களுக்குப் பரவி மூன்று நாள்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்றது.

பரவலாக 800மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டும், 150ம் அதிகமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு திருட்டு, சட்டக் கீழ்படிவின்மை போன்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டுள்ளார்கள். இப்படியான சம்பவத்தில் ஒருபாடசாலை ஆசிரியர், வரை கலைஞர், பட்டதாரி இளைஞர் உட்பட பல்வேறு தரப்பினர் பிடிபட்டுள்ளனர்.

பல லட்சக் கணக்கில் சேதாரங்கள் நிகழ்ந்த பின், இப்படி இளவயதில் உள்ளவர்கள் சட்டத்திற்கு எதிராக ஈடுபடுவதற்குக்கென்ன காரணம் என பல கோணத்திலும் பார்க்க விளைந்துள்ளார்கள்.

தற்போது நிகழும் வேலையில்லா திண்டாட்டம், பலசமூக நிறுவனங்களில் நிதிபற்றாக் குறை காரணமாக நிறுத்தப்பட்ட இளவயதினருக்கான சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், கலை நிகழ்வுகள் அத்தோடு கட்டணம் உயர்த்தப்பட்ட உயர்கல்வி வாய்ப்புகள், வசதி குறைந்த மாணவர்களுக்கான நிதி உதவிக்குறைப்பு, விலைவாசி உயர்வு என பல காரணங்கள் பேசப்படுகின்றன. அரசாங்கங்கள் இளைய தலைமுறைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டது எனக் கூறப்படுகிறது.

இனிச் சிறுசிறு திட்டங்களுக்கு பணம் செலவழிப்பதை விடுத்து, வறுமைக் கோட்டுக்குள் வாழும் பிள்ளைகளுக்கு நிரந்த தீர்வுக்கான கல்வித் திட்டத்தையும், தொழில் வாய்ப்பையும், ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளையும், திட்டங்களையும் வகுக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

காவல்படைக் குறைப்புக்குரிய தீர்மானத்தை மீள்பரிசோதனை செய்யவேண்டும் என Hackney பாராளுமன்ற உறுப்பினர் பரிதுரைத்துள்ளார். இக்கலவரத்தை அரசு ஒரு விழிப்புக்கான அழைப்பாக எடுத்து எதாவது உருப்படியாகச் செய்யவேண்டும் என்றே பெற்றோர்கள் விரும்புகிறார்கள்.

ஒரு சிறு உதாரணமாக பிறன்ட் பகுதியில் (Wembley, Alperton, Sudbury and Tokyngton) மட்டும் எட்டு சூதாட்ட (Gambling) நிலையங்களுக்கு, அதனால் வரும் வியாபார வரிக்காக நகரசபை அநுமதித்துள்ளார்கள், ஆனால் அக்கடைகளுக்குப் போய்ப் பார்த்தால் அதில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவராகவே உள்ளனர்.

இதனால் வரும் சமூக சீர்கேட்டைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. கேட்டால் தற்போது உள்ள திட்டமிடல் சட்டத்தின் கீழ் அதற்கு A2 use class இருந்தால் போதுமானது அத்தோடு இதே A2 வகுப்பைச் சேர்ந்த வங்கிகள், சட்ட ஆலோசனை நிறுவனங்கள், வீட்டு வாடகை நிறுவனங்கள் (estate agents) போன்றன அதற்கான சம்மதத்தை எடுத்த பின் சூதாட்ட கடையாக மாற்றுவதை இப்போது உள்ள திட்டமிடல் சட்டத்தின் கீழ் நிறுத்த முடியாது என்று கைவிரிக்கிறார்கள். சட்டத்தை யார் இயற்றினார்கள்? சரியில்லாவிட்டால் மாற்றி எழுதுவதற்கு காலக்கெடு எதற்கு?

இதைவிட BBC 1 இல் சவுத்தோல் பகுதியில் சீக்கிய இளைஞர்கள் தமது சொத்துக்களை தாமே வீதியில் இறக்கி கிரிக்கற் மட்டைகளுடனும், கொக்கி தடிகளுடனும் பாதுகாத்ததாக அவர்களை பேட்டிகண்டு போடுகிறார்கள் பேட்டியில்காவல்படை ஒன்றும்செய்யாததால், சட்டத்தை தமது கைகளில் எடுத்துள்ளதாகச் சொல்கிறார்கள். தற்செயலாக ஒரு சீக்கிய இளைஞர் அடித்து இன்னொரு இனத்து இளைஞர் இறந்திருந்தால் விளைவு என்ன மாதிரி இருந்திருக்கும் என்பதை அரசு சிந்தித்துப் பார்த்தார்களா? இதுதானா இவர்களது Big Society திட்டம்?

நாம் நாற்பதாயிரம் எம்மக்கள் இறந்த போது, ஒன்றையும் எரிக்கவில்லை, எம்மவர்கள் தம்மை தாமே எரித்துக் கொண்டார்கள். தேம்ஸ் இல் உயிரை மாய்த்துக் கொள்ளப் பாய்ந்தார்கள். குழந்தை, பால்குடி என்று குடும்பத்தோடு வந்து இரவு பகலாக தொடர்ச்சியாக 87 நாள்கள் பாராளுமன்ற திடலில் கிடந்தோம். எம்மை தீவிரவாதிகள் என்றார்கள். அமைதியாக வீதிமறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறை இழுத்தெறிந்து, அடித்துக் கலைத்தார்கள். Big Maggு உண்ணாவிரதம் இருந்த பரமேஸ்வரன் உண்டதாகக் கூறி எமது போராட்டத்தைக் கொஞ்சைப்படுத்தினார்கள். ஒரு மனிதன் இறந்ததற்கே கலவரம் என்றால், நாற்பதாயிரம் சனம் இறந்தபோது நாம் எவ்வளவு துடித்திருப்போம். அன்று சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட தமிழர் இளைஞர்கள் இன்றும் அதன் பலனை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கலவரங்கள் லண்டனுக்கு புதிதல்ல. 1809 இல் கொவன்ட் காடின் உள்ள தியேட்டரின் நுழைவு சீட்டின் விலை அதிகரிக்கப்பட்ட போது பழைய விலையைக் கோரி மக்கள் கலவரம் மூண்டது. மூன்று மாதங்களாக நடைபெற்ற இக்கலவரம் அப்போதைய முகாமையாளர் John Philip Kemble இன் விலைக் குறைப்பினாலும், பொது மன்னிப்பு கோரியதாலும் அடங்கியது. தற்போது நடந்த கலவரத்தால் லண்டனின் நல்லபிப்பிராயம் உலக அரங்கில் பாதிக்கப்பட்டு விட்டது. ஒலிம்பிக் போட்டிக்கு முன் அதை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்றெல்லாம் கதைக்கிறார்கள். கலகம் பிறந்தால் நியாயம் கிடைக்கும் என்று சொல்வார்கள் இளைஞர்கள் காட்டுமிராண்டிகள் போல நடந்து கொண்டது ஏன்? நாட்டுப் பற்று, சமுக சிந்தனை எல்லாம் இங்கு பிறந்த அவர்களுக்கு ஏன், இல்லாமல் போய்விட்டது என்று யோசித்து ஏதாவது செய்தார்கள் என்றால் நல்லது, காவல் படையை அதிகரிப்பது ஒன்று மட்டும் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்த்து விடாது.

**GYPS Pest Control Services**

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நிம்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control visit மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**

**UNIVERSAL ESTATES**
www.universal-estates.co.uk




Properties required in Tooting, Streatham, Brixton, Battersea, Clapham, Balham, Mitcham, Croydon, Norbury, Thornton Heath, Dulwich, Lewisham and Harrow.

For a free valuation Call 020 8764 6444

# தேசியத்தை கெடுக்குமா சாதீயம் ?

**வ.கணேஸ்**

*(ஒருபேப்பருக்காக)*

தமிழ் மக்கள் சாதீய அடிப்படையில் தனிக் குழுக்க ளாகத் திரண்டு அனைத்தையும் குட்டிச் சுவரா க்கும் நிலைமையைத் தமிழ்த்தேசியத்தை தற்போது வழிநடாத்தும் தலைமைகள் சும்மா பாத்துக் கொண்டிரு க்காது. சாதீயத்துக்கெதிராக போராட வேண்டிய காலம் வந்திருக்கிறது. அத்தகைய போராட்டங்களை எப்படி முன்னெடுப்பது என்பதே இன்றைய கேள்வி.

இது மட்டைக்கிழப்பான் அவர்களின் *ஒரு பேப்பர்* ஜூலை 29 இல் வெளிவந்த ஆக்கத்தின் அடிப்பகுதி. அழகாக தேசியத்தில் தொடங்கிமெல்ல மெல்ல வேளாள முகத்தை மட்டும் மெல்லத் தடவி இறுதியில் சாதீய ஒழிப்பு அறிவுரையோடு தேசியத்தையும் தலைப்புக்கேற்றால் போல் தடவி சாதியத்துக்காக எப்படி போராடலாம் என்பது மட்டும் புரியாமல் முடித்திருக்கிறார்.

சாதீயம் என்பது இன்று நேற்று முளைத்தது அல்ல. திடீரென பிடுங்கி எறிவதற்கு. இதுவொரு தமிழ் மக்களின் அவலமான சாதீயமுறை. தொழில்சார் அடிப் படையில் அழைக்கப்பட்ட சமூகங்கள் பின்னர் தொழில் களின் பெயர்களையும் தாண்டிசாதி என்பதை செருகி விட்டார்கள். இதன்படி ஒவ்வொரு சமூக தொழிலாளர் களும் ஏதோ ஒரு விதத்தில் மற்றைய தொழிலாளரின் சமூகத்தினரை நம்பி வாழ வேண்டிய தேவைகளை உருவாக்கிவிட்டது. இது ஒருவரை ஒருவர் தாழ்த்துவதற்கு வசதியாகப்போய்விட்டது.

இந்த அடக்குமுறையால்தான் வட கிழக்கில் ஓரிரு சமூகத்தினர் சாதி முறைகேடுகளைப் பார்க்காத கிறிஸ் தவ மதத்தில் அக்காலத்திலேயே இணைந்து கொண் டார்கள். குறிப்பாக மீனவ சமூகத்தினரும் கள்ளு உற்பத்தி செய்யும் சமூகத்தினரும் கூடுதலாக இந்து சமயத்திலிருந்து விலகி கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினா ர்கள். இவர்களுக்கு மேற்பட்ட சாதியென்று கருதியவர் களுக்கு பயமிருக்கவில்லை. இவர்கள் எல்லா சமூகத்தினருக்கும் வேண்டப்பட்டார்கள். ஆகையால் அவர்களை அங்கே போக முடியாது இதில் தொட முடியாது என்று ஒடுக்க முடிந்ததே தவிர அவர்களை அடக்கமுடியவில்லை. காரணம் கள்ளுக்கும் மீனுக்கும் மேட்டுக்குடிகளும் இவர்கள் முன் குந்தியே தீர வேண்டும்.

ஒரு சலவைத் தொழிலாளியோ பறையடிக்கும் தொழிலா ளியோ கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியிருப்பார்களாயின் அவர்களுக்கு ஓர் இந்து வீட்டிலோ அல்லது இந்து மத சடங்குகளிலோ வேலையுமிருக்காது. இவர்கள் வீடுகளில் சோறும் வெந்திருக்காது.

ஆனால் அன்றைய இந்த நிலைமைகள் இன்று கணிச மான அளவு மாற்றமடைந்திருக்கின்றது. வரவேற்கத்த க்கது.

முதற்கூறிய இரு சமூகத்தினரும் கணிசமானதொகை யினர் கிறிஸ்தவர்களாக மாறியிருந்தாலும் அவர்களது தொழில்ரீதியான பெயர்கள் நிலைக்கவே செய்தன. வேளான்மை செய்பவர்களை வேளாளன் என்றும் தச்சு வேலை செய்பவர்களை தச்சனென்றும் அழைப்பதில் தப்பில்லையே. ஆனால் அதை ஒரு சாதியாக்கி மேல், கீழ் என்று தரம் பிரித்ததே இன்றுள்ள இந்த அவலத்துக்கு கார ணம். ஆனாலும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய வட கிழக்கு பகுதிகளில் ஏக்கர் கணக்கில் காணி, பூமிகளை வைத்திருக்கும் வேளாள குலத்தவர்கள் மட்டைக்கிழப்பான் அவர்களின் கூற்றைப்போல் பெரியளவில் மற்றைய சாதி யினரின் மனம் நோகும்படி அவர்களை தாழ்த்தி பேசியோ பெரிதாக ஒதுக்கி வைப்பதோ குறைவு.

ஆனால் யாழ்ப்பாணப்பகுதியில் அரைப்பரப்பு காணியுமி ல்லாதவர்கள்கூட தம்மை வேளாண்மைக்காரனென்றும் எட்டுப்பரப்பு காணிக்கு சொந்தக்காரனை எழியன் சாதியி னரென்றும் ஒதுக்கி வைப்பது வேடிக்கையானது.

ஆனாலும் இதில் வேளாள குலத்தை மட்டும் சாருவதென்பது ஆரோக்கியமாக அமையாது. பழமொழி ஒன்று உண்டு. தெரிந்த தொழிலை விட்டவனும் கெட்டான். தெரியாத தொழிலை தொட்டவனும் கெட்டான் என்று. ஆக மனிதகுலம் வாழ்வதற்கு தொழில்கள் அவசியமாகும் போது அந்தந்த தொழில்கள் புரியும் குடும்பங் களில் அந்தந்த தொழில்கள் தெரிந்தவர்கள் பெண்ணோ, ஆணோ தேடி கல்யாணம் கட்டுவதும் கட்டி வைப்பதும் தவறில்லை.

இன்னொன்றையும் சுட்டிக்காட்டுவது அவசியம். ஒரு மீ ன்தொழில் செய்யும் ஒரு மீனவ குடும்பத்தில் மீன் தொழில் செய்யாத அதே மீனவ குடும்பமோ அல்லது கள்ளு தொழில் செய்யும் சமூகம் அதே சமூகத்தை சேர்ந்த பனை மரம் தறித்துக்கொடுக்கும் சமூகத்தினரின் பெண்ணோ, ஆணோ எடுப்பதில்லை.அதேபோல் வேளாள வீடுகளில் குடிமை செய்யும் ஒரு நாவிதர் குடும்பம் சந்தியில் சலூன் வைத்திருக்கும் ஒரு குடும்பத்தில் பொண்ணோ ஆணோ எடுப்பதில்லை. இப்படி சலவைத் தொழிலாளர்களுக்கும் பாகுபாடு உண்டு.

வட கிழக்கு பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலங்களில் இந்த சாதீய ஒழிப்பிற்காக பாடுபட்டார்கள். அதற்காக பலதரப்பட்ட சமூகத்தினரையும் பொறுப்பாளர் களாக நியமித்தார்கள்.

ஆனாலும் அடியிலிருந்து ஆரம்பிக்க வேண்டியதை தலையில் இருந்து ஆரப்பித்தார்கள். இதனால் பல வேளாள குடும்பத்தினர்கள் தண்டிக்கப்பட்டதுமுண்டு.

தாழ்த்தப்பட்ட குலம் என்று கருதுபவர்கள் வேளாள குலத்தோடு பொருதுண்டார்களே தவிர தங்களுக்கு கீழ்ப் பட்ட சமூகத்தினரின் பெண்களை, ஆண்களை எடுத்தது மிக அரிது.

விடுதலைப்போராளிகள் கூட பலபேர் மெல்ல மெல்ல வந்த வேளாளர் ஆகினரே தவிர தங்களின் சமூகத்தினரை விட தாழ்ந்த சமூகத்தினரிடம் கல்யாணம் வைத்துக் கொண்டது மிகக்குறைவு.

ஆனாலும் சாதீயத்தைக் கடந்து தேசியத்துக்குள் போன ால் கணிசமான மேட்டுக்குடிகளை சேர்ந்தவர்கள் தேசிய போராட்டத்துக்காக ஆங்காங்கே தலைகளைக் காட்டி விட்டு மெல்ல மெல்ல மேற்குலங்களுக்கு தாவிவிட்டார் கள். இவர்களால் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களை சார்ந் தவர்களால்தான் இறுதிவரை போராட்டம் முன்னெடு க்கப்பட்டது. இதை நோக்கும்போது மீண்டுமொரு நல்ல தலைமை கிடைக்குமாயின் சாதீயம் செத்து தேசியம் தலைதூக்கும் என்பதில் ஐயமில்லை.

வடக்கின் தீவுப்பகுதிகளில் டக்கிளஸ் பல வருடங்க ளாக அவரோடு சேர்ந்து அந்த மக்களுக்கு பல சலுகை களை செய்தும் ஆயுத முனைகளில் அடக்கியும் வைத்தி ருப்பதோடு மட்டுமல்லாமல் அரச மானியத்தை நம்பி வாழ வேண்டிய நிலைக்குள் பல மக்களை தள்ளிவிட்டு என் னிடம் கையேந்துங்கள் நான் இல்லையென்று செல்ல மாட்டேன் என்ற நிலைதான் அங்கே.

அதோடு தமிழர் கூட்டமைப்பு கூட பிரச்சாரங்களுக்காக பல வருடங்களாக அப்பகுதிகளுக்குள் நுழைய முடிவ தில்லை. ஆக அவர்கள் சாதீய அடிப்படையில் அல்லது அடக்குமுறைக்குள் சிக்குண்டுள்ளார்கள் என்பதே தெளிவு.

யாழ்ப்பாணத் தொகுதிகளிலும், சாவகச்சேரி தொகுதி களிலும் கூட அரசமானியங்களை நம்பி வாழ வேண்டியவர் களின் கணிசமான வாக்குகள் E.P.D.P. கட்சியினருக்கு சேர வேண்டியதாய் போய்விட்டது. அவர்களால் வழங்கப்பட்ட தையல் இயந்திரம், துவிச்சக்கரவண்டிகள் மற்றும் கிடைத்த அரச ஊழியங்கள் போன்றவற்றை இழப்பதற்கு எத்தனை பேருக்கு துணிவு வரும் அத்தோடு அரைப் பங்கு மக்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இவர்கள் நிச்சயமாக தேசிய விடுதலையில் விருப்பு கொண்டவர்களே ஒழிய வெறுப்புக் கொண்டவர்களாக கருத முடியாது. பயம் காரணமாக பங்களிக்கவில்லை என்பதே உண்மை.

---

**அமிர்தலிங்கம் காலத்திலும் அதற்கு முன்னைய காலங்களிலும் கூட தற்போதைய நிலைமையை விடவும் அப்போதுதான் சாதீய கொடுமைகள் கொடிகட்டிப்பறந்தது.ஆனாலும் தேசியத்திற்காக அத்தனை சாதியினரும் ஓரணியில்தானே நின்றார்கள்.**

---

ஆக அப்போது அரச உதவிகளை நம்பி மக்கள் சாப்பிட வேண்டியநிலை இருக்கவில்லை. இன்று சிங்கள ஆதிக்க சக்திகள் தமிழ்ச்சமுதாயத்தை சுதந்திரமாக தொழில் களை செய்யவிடாது வேளாண்மை காணிகளையும் அபக ரித்து கால்நடை வளர்ப்புகளை கட்டுப்படுத்தி இப்படி பல வழிகளில் மக்களுக்கு பொருளாதார ரீதியாக மட்டப்படுத்தி போசனத்துக்கு திண்டாட வேண்டி வந்ததால் தேசிய விடுதலையின் எண்ணமே அவர்களுக்கு வராத படி செய்கின்றார்கள். காலப்போக்கில் இதைத் தான் செய்யவும் போகிறார்கள்.

ஆக அண்மையில் தீபம் தொலைக்காட்சி புலிக்கொடி பிடிக்கலாமா பிடிக்கக்கூடாதா என்று ஆய்வு நடத்தியது போல தற்போதுள்ள நிலையில் அதாவது விடுதலைக் கான நம்பிக் கைகள் விழுந்துகொண்டிருக்கும் வேளையில் சாதீயத்தையும் கொண்டுபோய் செருகுவதால் தேசிய எழுச்சியின் எண்ணிக்கை குறையுமே தவிர கூடப் போவதில்லை.


## Job Vacancy - Accountant

Accountancy practice based in Croydon seeking an experienced part qualified Accountant / bookkeeper / admin on a part time basis (10-12 hours per week). Hours can be negotiable and potentially can increase with the right candidate.

**We require:**
- Completion of statutory accounts
- Personal Tax returns
- Balance sheet reconciliations
- Experience of UK GAAP
- Book keeping/VAT preparation
- Administration
- Ad hoc analysis

**Person should:**
- Be a self-starter with Proven experience
- Able to communicate in English and Tamil
- Good knowledge of Microsoft Office
- Experience in IRIS software (not essential but advantages)

Please send CV with covering letter to croydon@bbkca.com

## Grocery Shop For Sale

**Rent:** £15,000
**Rate:** £4,000
**Business:** £3,000 - £4,000 weekly
includes the 4 room apartment above the shop.
**15 years lease.**
Linton, Cambridgeshire, CB21 4LY

Car park behind the shop. Shop has a garage and stock room. Situated in a village which is suitable for families. Not much competition around the area. Support can be given for getting an **'Off License'** status.

**Please contact:**
Anjum 07855837158
Uthayanan 01799218313
07414090612

## தையல் வேலைக்கு ஆள் தேவை



குரோயிடனில் சாறி–பிளவுஸ் தைக்கும் அனுபவம் உள்ளவர் வேலைக்கு தேவை.

தொடர்புகளுக்கு : புஷ்பா

தொலைபேசி : **020 8684 1026 / 079 6076 1606**

## Indian Chef Wanted

Experienced South Indian chef wanted in Kingsbury area.

Please Call **Suthan 07957383535**

Lewisham
## BEST FOOD ENS Group வழங்கும்

**Monthly OFFER AUGUST**
offer ends 26
**Frozen Fish** 2 for £4.49
(Note: Except SAMUDRA)

**1kg flour**
**BUY 2 FOR £2.99**
(Any brand any Flour)
**Lentles -TRS**
**பருப்பு 2kg - £1.99**
**மலிவு விலையில்**

30 Loampit Hill, Lewisham,
London SE13 7SW.
**020 8692 9811 - 074 6669 7934**

அரங்கேற்ற மலர்கள், விழா மலர்கள்
அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள்
தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு
வேலைகளுக்கும் அழையுங்கள்....

**Call : 020 7043 4319**



# இந்தியாவின் எல்லை தாண்டிய பேரினவாதமும் எல்லை மீறிய சிங்களப் பயங்கரவாதமும்



வேல் தர்மா
*(ஒரு பேப்பருக்காக)*

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் தயாரிக்கப் பட்டபோது இந்தியாவின் பேரினவாதியான ஜவகர் லால் நேரு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப் படுவதைத் தடுத்தார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய அம்பேத்கார் இந்தியாவில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொண்ட ஒரு இணைப்பாட்சி (சமஷ்டி) முறைமையை விரும்பினார். அவரது விருப்பம் இந்தியப் பேரினவாதிகளால் தடுக்கப்பட்டது. இந்தியாவில் உள்ளது ஒரு அதிகாரப் பரவலாக்கமே. அதிகாரப் பகிர்வு அல்ல. அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு நிர்வாக ஏற்பாடு மட்டுமே. அதிகாரப் பரவலாக்கத்தில் பிராந்திய அலகுகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் மைய அரசின் அதிகாரக் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கும்.

இந்தியாவின் பேரினவாதம் தனது நாட்டில் சிறுபான்மை இனங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு இலங்கையில் சிறுபான்மை இனமான தமிழினம் அதிக அதிகாரங்கள் பெறுவது அல்லது எழுச்சி பெறுவது தடையாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. அவ்வப்போது மறைமுக சதி நடவடிக்கைகள் மூலமும் நேரடித் தலையீடு மூலமும் இலங்கையில் தமிழர்கள் எழுச்சி பெறுவதை தடுத்து வருகின்றனர் இந்தியப் பேரினவாதிகள்.

## ஐம்பதுகளில் ஜவகர்லால் நேரு

தொடர்ந்து மைதானத்தில் சொற்பொழிவு, இசைக்கச்சேரி, தவில் மற்றும் நாதஸ்வரக்கச்சேரி, நாட்டிய நடனம், மற்றும் கலைநிகழ்வுகள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 020 8767 9881

# Mummy I want தண்ணி.....

ஆயிரம் மைல் கடந்து அன்னை தேசம்
தனை பிரிந்து
அனாதைகளாய் ஆனபோதும்
அண்ணனாய் தம்பியாய் பிள்ளைகளாய்
உற்ற உறவுகளாய்
அன்போடு அரவணைக்கும்
என் புலம் பெயர் சொந்தங்களே வணக்கம்!

என் உயிரிலும் மேலான
தமிழ்தாயின் உச்சிமுகர்ந்து
அவள் தந்த தமிழ்ப்பாலின் பாசம் உணர்ந்து
புதுவை அண்ணாவை என் நெஞ்சில் வைத்து
காசி அண்ணாவின் கைபிடித்து
கவிதை நான் எழுதி வந்தேன் காலம் அறிந்து!

வீட்டிலே தமிழ்!
தமிழா வீட்டிலே தமிழ் பேசு – இல்லையேல்
தமிழ் மானம் போச்சு!

தமிழனாய் பிறந்தோம் என்று
பெருமை பேசு – இல்லையேல்
தமிழினத்தின் அருமை போச்சு!

தமிழினத்தின் உயிர் மூச்சுதானே
எங்கள் செம்மொழி
மூச்சையே நிறுத்திவிட்டால்
இனம் வாழ ஏது வழி?

படலை திறந்து வந்தோம்
உடலை மட்டும் தானே கொண்டுவந்தோம்
உயிரும் உணர்வும் இப்போதும் அங்கேதானே!

சத்தியமாய் சொல்லுங்கள்
எங்களின் கால் இடுக்கில்
இப்போதும் எங்கள் வீட்டின்
முற்றத்து மண்தானே ஒட்டி இருக்கிறது.

அரியாலையில் இருந்த மாதிரி
அவுஸ்திரேலியாவில் இருக்கமுடியாது
மேடைக்கு ஏற்ற வேசம் போட்டே ஆகவேண்டும்
ஆனாலும் தமிழன் என்ற அடையாளம்
தொலைக்கப்படாது

அடையாளங்களை தொலைத்துவிட்டு
அரைகுறையாய் வாழ்வதை விட
அட அம்மணமாக வாழ்வது எவ்வளோ மேல்!

ஒசி(Aussie) என்று சொல்வதில்
சிலநேரம் எனக்கு பெருமை!
என்னதான் வெளுக்க "லோசன்"(lotion)
போட்டாலும் என் தோல் கருமை!
கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகாது
அதுதான் உண்மை!

பிள்ளை ஒன்று பெறுவதே பெரும்பாடு
என் பெற்ற பிள்ளை தமிழ் மறந்தால் அது
வெக்கக்கேடு!

தமிழா வீட்டிலே தமிழ் பேசு – இல்லையேல்
தமிழ் மானம் போச்சு!

பெற்ற பிள்ளைக்கு பீற்றர் என்றும்
ஹரிபோட்டர் என்றும்
பெயர் வைச்சால் என்ர பிள்ளை
என்ன மொழி பேசும்?

பீற்றரும் ஸ்ரெல்லாவும் "hi how are you"
என்று பேசலாம்
தமிழரசியும் கலையரசியும் "hi how are you
buddy" என்று சொன்னால்
என்னாகும் எங்கள் சந்ததி?

தமிழரசியின் பெயரில் மட்டுமே தமிழ்
அவள் மூச்சிலும் இல்லை
பேச்சிலும் தமிழ் இல்லையே!
அது அவள் பிழை இல்லை!
தமிழரசியை பெற்ற தந்தை என் பிழை!

Factory இல பட்டை அடி அடிச்சுப் போட்டு
பாசத்தோடு ஓடி வந்து முத்தமிட்டால்
"அப்பா" என்று சொன்னால்த்தானே
அந்த அலுப்பு தீரும்
அப்பதான் என்ர ஆயுளும் கூடும்

என்ர மூத்தது "Daddy i want ulunthu VADA"
என்கிறான்
அட என்ர கடைக்குட்டி Mummy i want thanni..
என்கிறாள்

தாலி கட்டியவளை "darling" என்றால்
என்ர பிள்ளை என்னப் பாத்து "dada"
என்டுதான் சொல்லுவான்
காலம் போக என்னை "வாடா" என்பான்
மனம் நொந்து என்ன பலன்?

கட்டிலிலே தமிழ் மறந்தால்....
தொட்டிலிலே என்ன வரும்?

Mummy i want thanni......!!!
தமிழ்த் தாய் நொந்து போவாளே இதை எண்ணி

தாய்ப்பாலோடு சேர்த்து தமிழையும் ஊட்டுங்கள்
தாய் பாசத்தோடு சேர்த்து தமிழ் நேசத்தையும்
காட்டுங்கள்

நாங்கள் எல்லாம் பூவரசம் கதியால்
புடுங்கி வந்து FRANCE இல் நட்டாலும்
பூக்கிறது பூவரசம் பூதான்!
ஆனால் இந்த பிஞ்சுகள் பூவரசம் பூவின் நிறம்
அறியாத ரோஜாக்கண்டுகள்

விதை விதைக்கும் போது அவதானம்
இல்லையெனில் எங்களுக்குத்தான் அவமானம்!

NORWAY இல் இருந்து வந்த
மூத்தவளின் இளையதும்
FRANCE இல் இருந்து வந்த
இளையவனின் கடைசியும்
என்ன மொழியில் பேசுவது
என்று தெரியாமல் முழிக்கும்..!!!

என்ர அப்புவுக்கு ஆயிரம் டொலர் தேவையில்லை
தன்ர பேரன் தமிழ் பேசவேண்டும்
அப்பதான் அப்புவின் அடிவயிறு குளிரும்

ஆங்கிலம் பேச வேண்டாம்
எண்டு குதர்க்கம் பேசவில்லை
ஆங்கிலம் என்பது அவசிய மொழிதான் – ஆனால்
அன்னை மொழியை ஆங்கிலம் தின்டால்
அடுத்த சந்ததி தமிழ் மறந்தால்
யாருக்கு வேதனை?

தமிழ் இனத்தை அழிக்க ஆரும் தேவையில்லை
மொழியை மறந்தால் தமிழ் இனம் தானாய்
அழியாதோ?

தமிழா வீட்டிலே தமிழ் பேசு – இல்லையேல்
தமிழ்மானம் போச்சு!

எத்தனை ஆயிரம் உயிர்விலை கொடுத்து
செங்குருதி ஊற்றி வளர்த்த மொழியல்லோ
எங்கள் தாய்மொழி
தமிழ் இனத்தின் விழிதானே எங்கள் தமிழ்மொழி

அடிபடுவம் பிடிபடுவம் புடுங்குப்படுவம் – ஆனால்
தமிழீழம், தலைவன், தமிழ் எண்டால்
தம்பியாய் தங்கையாய் அண்ணனாய்
ஒண்டா நிப்பம்!

தாயை பழித்தவனின் நாக்கைதான் அறுப்போம்.
தாய் மொழியை பழித்தவனின் தலையையே
அறுப்போம்.

நாளைய இந்த சந்ததி தமிழ் மறந்தால்
நாறிப் போகாதோ நம் இனம்?
இளைய சந்ததிக்கு இது புரிந்தால் இன்னும்
தலைநிமிரும் எம் இனம்.

தாய் பிறந்த தேசத்தின் வாசம்
அறியாத இந்த பிஞ்சுகள் சில
தமிழீழத்தின் மேலும் தமிழின்
மேலும் கொண்ட பாசம்
அப்பழுக்கில்லாத ஆழ்ந்த நேசம்.!
விடுதலை மீதும் அண்ணனின்
மீதும் இவர்கள் காட்டும் பாசம்
எங்களில் சிலர் போடும் வேசத்திலும் பெரியது!

வாய்க்கால் வெட்டி வளிந்தோடும்
இந்த நீருக்கு வழிகாட்டுங்கள்
வளர்க்கிற போதே வாய்க்கு வாய்
தமிழ் சொல்லி வளருங்கள்

வெளியில என்ன மொழியையும் பேசுங்கோ
விட்டில மறக்காமல் தமிழையே பேசுங்கோ

Mummy i want thanni......!!!
தமிழ்த்தாய் நொந்து போவாளே இதை எண்ணி

வீட்டிலே தமிழ்!
தமிழா வீட்டிலே தமிழ் பேசு–இல்லையேல்
தமிழ்மானம் போச்சு!.

- தமிழ்ப் பொடியன்
(அவுஸ்திரேலியாவிலிருந்து)

## அறுப்படிச்ச பல்லி...

*(3ம் பக்கத் தொடர்ச்சி)*

இந்த முனைப்புகளின் மத்தியில், முதற்கட்டமாக பல்கலைக்கழக மேலவையின் தெரிவு இடம்பெற்றது. இதில் 13 வாக்குகளை தற்போதைய உபவேந்தர் வசந்தி அரசரத்தினம் பெற்றார் தலா 9 வாக்குகளை முன்னைய உபவேந்தர் சண்முகலிங்கமும், சீவனும் பெற்றனர். இருப்பினும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் மகிந்தவிடமிருந்ததால், அவரை பணிய வைக்க கூழ் தன்னாலானவற்றையெல்லாம் செய்தார். அவரை புகழ்ந்தார். யுத்தத்தில் வெற்றி பெற்றதற்கு நன்றி தெரிவித்தார். கடந்த டிசம்பரில் மகிந்த லண்டன் வந்த போது தமிழ் மக்கள் அவருக்கு எதிராக போர்க்கொடி காட்டியபோது, சீவனின் லண்டன் சகாக்கள், மகிந்தவைச் சந்தித்து சீவனை உபவேந்தராக நியமிக்கும்படி கேட்டுக் கொண்டனர். சிலவாரங்கள் கழித்து சீவன் யாழ் பல்கலைகழகத்தின் உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளதாக செய்தியும் வெளியிட்டனர். ஆனால் மகிந்த, டக்ளசின் தெரிவான வசந்தி அரசரத்தினத்தையே நியமித்தார்.


அதன் பின்னர் டக்ளசே சீவனின் எதிரி நம்பர் ஒன்றாக மாறினார். மகிந்த அரசில் டக்ளசுக்கு இருக்கும் முக்கியத்துவம் சீவனுக்கு தெரியாததல்ல. தன்னுடைய கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு கூட முடியாத டக்ளஸ் தான் இதில் முடிவெடுப்பவராக சீவன் நினைத்திருந்தால் அவர் உபவேந்தர் பதவிக்கு தகுதியற்ற ஆள் என்பதை உடனேயே கூறிவிடலாம். இலகுவான இலக்கான டக்ளசை தாக்குவதன் மூலம் மகிந்த மீதான தனது வயித்தெரிச்சலை தீர்த்துக்கொள்ள மகிந்தவும் அவரது இராணுவப் படைகளும் செய்கிற அராஜக நடவடிக்கைகளை டக்ளசின் மீது போட்டு விட்டு மகிந்தவிற்கு தொடர்ந்து துதிபாடினார். பழிக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் டக்ளஸ் கும்பல் தீவகத்தில் புரிந்த அடாவடித்தனத்தை வெளிக் கொணர்ந்தார். விளைவு ஜூலை 24ம் திகதி பொலிசார் இவரது வீடு தேடிவந்தனர். அவதூறு வழக்கில் கம்பி எண்ணும் நிலைவரும் என அறிந்ததால், இப்போது நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். இன்னும் நாலுவருடகாலம் காத்திருந்து விட்டு மீள யாழ்பாணம் போகக் கூடும். பதவி ஆசை விடவா போகிறது?

### சுடுகவி... சுடுகவி.. சுடுகவி..

காலை எழுந்தால்
கடைதான் கண்ணுக்குள்
கடையைத் திறந்தால்
மனைவிதான் மனதுக்குள்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

# களவாடப்படும் கடன் அட்டைகள்

கையில் காசு கொண்டுதிரிய பயமாக இருப்பதால் கடன் அட்டைகளைக் காவியவண்ணம் நடமாடும் இன்றைய சமூகத்தினருக்கு களவாடப்படும் கடன் அட்டைகள் பற்றிய செய்திகள் திகிலைக்கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. சமீபத்தில் வெளிவந்த செய்தியொன்றில் 517 கடன் அட்டைகளின் விபரங்கள் களவாகப் பதிவு செய்யப்பட்டு 41000 பவுண்கள் வரை மோசடி செய்யப்பட்ட சம்பவம் நீதிமன்றம் வரை வந்துள்ளதாக அனேகர் அறிந்திருக்கமுடியாது.

இக்களவில் சம்பந்தப்பட்டவர் ஒரு இலங்கைத் தமிழர் என்பதும் வதிவிட அனுமதி மறுக்கப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய இராச்சியத்தில் களவாக வாழ்ந்து வந்தவர் என்பதும் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். இவரது களவு நடவடிக்கைகளுக்கு இவர் கடமையாற்றிய எரிபொருள் நிரப்பும் நிலையம் வசதியாக இருந்ததாக ஆதாரங்கள் மூலம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவர் செய்த களவு மோசடிக்கு சர்வதேச மட்டத்தில் இயங்கும் நிறுவனமொன்று தொழில்நுட்ப உதவிகளைச் செய்துள்ளதாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

எது எப்படியோ! நடந்தது களவு. பிடிபட்டவர் ஒருவர் இலங்கைத் தமிழர். களவு நடந்த இடமோ ஒரு எரிபொருள் விற்பனை நிலையம். இவையாவும் எளிதில் தூக்கியெறிய வேண்டிய விடயமல்ல. ஏனெனில் ஐக்கிய இராச்சியத்திலும் சரி ஐரோப்பிய நாடுகளிலும் சரி எரிபொருள் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களான அனேகஈழத்தமிழர்கள் இருப்பது தான் சிக்கலை உண்டாக்கும் விடயமாகும்.

மேற்கூறிய செய்தி, ஊடகங்கள் மூலம் அம்பலப்படுத்தப்படுமானால் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை உபயோகிக்கும் வாடிக்கையாளர்கள் தமிழர்கள் கடமையாற்றும் நிலையங்களில் கடன் அட்டைகளையும் பாவிக்கத் தயங்குவார்கள் அல்லது தவிப்பார்கள். இதனால் நட்டமடையப்போவது புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் என்பதில் மறுப்பில்லை. யாரோ ஒருவர் செய்த குற்றத்திற்காக எரிபொருள் நிலையங்களைத் தமது வியாபாரமாகவும் அதில் கடமையாற்றும் தொழிலை நம்பி வாழும் தமிழர்களை பாதித்துவிடாமல் இருக்கவும் இத்தகைய களவு மோசடிகளை முற்றாக ஒழிக்கவேண்டியது புலம்பெயர் தமிழர்களின் கடமையாகும்.

எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளர்களும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் வருங்கால சந்ததியினரின் நன்மை கருதி கடன் அட்டையின் மூலம் இடம்பெறும் மோசடிகளை ஒழித்துக்கட்ட முழு ஆதரவை நல்கவேண்டும். பலநாள் கள்வன் ஒருநாள் பிடிபடுவான் என்பது பொய்யல்லவே.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் கருப்பையை அகற்றத் தேவையில்லை

இளம்பெண்ணின் வாழ்க்கையில் எத்தனை இடையூறுகள். இதனுள் இளம்பிராயத்திலேயே புற்றுநோயால் பீடிக்கப்பட்ட பெண்கள், கதிர் இயக்க சிகிச்சைகளுக்கு (Cheotherapy) ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இச்சிகிச்சைக்கு உள்ளாகும் பெண்கள், மகப்பேறு அடையவேண்டிய ஆசையிருந்தால் சினைப்பையில் உருவாகும் கருமுட்டைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக சினைப்பையை (Ovaries) அகற்றி உறைந்து போன நிலையில் பாதுகாக்கப்பட்டு வருவது இது வரை கடைப்பிடிக்கப்பட்டுவரும் மருத்துவ நடவடிக்கையாகும். எனினும் உறைய வைக்கப்பட்ட சினைப்பையில் காணப்படும் தசைகளில் (Tissues) புற்றுநோய் அணுக்கள் தொற்றியிருக்கக்கூடிய அபாயமும் இருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் எச்சரிக்கை அடைந்துள்ளனர்.

டென்மார்க் தேசத்தின் பிரபல்யமான கொப்பன்ஜேகன் பல்கலைக்கழக வைத்திய பிரிவில் கடமையாற்றும் Elisabeth Larsen என்பவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட ஆராய்ச்சியில் 53 பெண்கள் உட்படுத்தப்பட்டனர். இளம்பிராயத்திலேயே சிறுபிள்ளைகளுக்கு உண்டாகும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கதிர் இயக்க சிகிச்சையை மேற்கொண்ட 53 பெண்களை 10 வருடங்களுக்குப் பின்னர் ஆராய்ந்தபோது இவர்களுடைய கருப்பையில் உருவாகும் முட்டைகள் குறைவாகக் காணப்பட்ட போதும் குழந்தை உருவாகும் வாய்ப்பு நிறையவே இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். 10 வருடங்களுக்கு முன்பு இவர்கள் கருத்தரிப்பார்களோ என்று ஏங்கிய இந்தப் பெண்களில் கூடுதலானவர்கள் குழந்தைகளுடன் குதூகலமாக இருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருவதாக Larsen கூறுகிறார்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

இதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Kirst Tryde Schmidt மேற்கொண்ட ஆய்வில் புற்றுநோய்க்கான சிகிச்சை ஆரம்பிக்கும் முன்னர் சினைப்பை அகற்றப்பட்டு உறைந்த நிலையில் வைக்கப்பட்ட 56 பெண்களில் 35 பெண்கள் 91 சதவிகிதம் இயற்கையாகக் கருத்தரித்து ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றெடுத்ததாக தனது அறிக்கையில் சமர்ப்பித்துள்ளார். ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்கும் கொவென்றியை (Coventry) தளமாகக் கொண்டு இயங்கும் வோர்விக் வைத்தியசாலையைச் சேர்ந்த Graaldne Hartshome எனும் ஆராய்ச்சியாளரின் கூற்றுப்படியும் புற்றுநோய்க்கான சிகிச்சைகளை கடைப்பிடித்தாலும் சினைப்பையை அகற்றாமல் வைத்திருக்கும் பெண்கள் கருத்தரிக்கும் வாய்ப்பு தடைப்படாமல் இருப்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அறிக்கைகள் இளம்பிராயத்திலேயே புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இளம்பெண்களுக்கு நம்பிக்கையைத்தரும் செய்தியாகும்.

# 2015 ஆம் ஆண்டில் தென்கொரிய மாணவர்கள் புத்தகங்களை சுமக்க வேண்டியதில்லை.

கட்டுக்கட்டாக புத்தகங்களைக் காவிக்கொண்டு கல்விக் கூடங்களுக்குச் சென்றது ஞாபகம் வருகிறதா? என்னதான் சொன்னாலும் அந்தப் புத்தகங்களைப் புரட்டப் புரட்ட அதிலிருந்து புறப்படும் ஒருவித நறுமணம் எந்தக் காலத்திலும் துரத்த முடியாத ஒரு வாசனை என்பது பாடசாலைப் பருவத்தை மறக்க முடியாத அன்பர்களின் அனுபவம். இந்த அனுபவத்தை துடைத்தெறியப் புறப்பட்டுவிட்டது தென்கொரியா.

கடந்த யூலை மாதம் 1 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி தென்கொரிய அரசின் கல்வியமைச்சு மாணவர்களின் கல்வியில் புரட்சிகரமான மாற்றத்தை 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்த தனது நிகழ்ச்சி நிரலை முடுக்கிவிட்டுள்ளது. இதன் நிமித்தம் இருநூறுகோடி அமெரிக்க டொலர்களை ஒதுக்கி ஆரம்பப்பள்ளிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடசாலைப் புத்தகங்களை கணனிப் பதிவுகளாக டிஜிட்டல் முறையில் மாற்றம் செய்ய கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்படும் பாடப் புத்தகங்களை கணனிகள் மூலமாகவோ ஐ போட் மூலமாகவோ எலெக்ரோனிக் வழியில் தொடர்புகளைத் தரும் எந்தவித சாதனங்களின் மூலமாகவோ வாசிக்கவும் எழுதவும் பதிலளிக்கவும் முடியுமென ஆணித்தரமாக கல்வியாளர்கள் நம்புகிறார்கள். இந்த வசதிகளினால் தவிக்கமுடியாத காரணங்களினால் பாடசாலைகளுக்கு செல்லமுடியாத மாணவர்கள், அங்கயீனமுடைய மாணவர்கள், பாடங்களைத் தவறவிடாமல் அவரவர் இருக்கும் இடங்களிலேயிருந்தே கல்வியைத் தொடர முடியுமென நம்புகிறார்கள். எனவே புத்தகங்களின் மணத்திற்கு பதிலாக கணனிகளின் எலெக்ரோனிக் வாசைன மிஞ்சப்போகிறது.

(8 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# வேட்டை...

ஆனால் இந்தத் தட்டு மக்கள் சிங்களவரின் ஆபத்துக்களையும் தம்மால் சமாளிக்க முடியும் என்று நம்பிய மக்கள். தமது உரிமைகளை இன்னொருவர் போராடித் தான் தமக்குப் பெற்றுத் தரவேண்டும் என்ற மனநிலையில் இருந்திராத மக்கள். இந்தத் தட்டு மக்களைப் பொறுத்தவரை ஈரோசும் ஈபி ஆர் எல் எப்பும் புளொட்டும் துண்டுப் பிரசுரங்களை மட்டும் அனுப்பிக் கொண்டிருப்பதுதான் சாதகமானது. அத்துண்டுப் பிரசுரங்கள் சொல்லும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் சிங்களப் பிரச்சினைக்கு உண்மையில் முகம் கொடுத்த மக்களிற்கு துண்டுப் பிரசுரங்கள் நடைமுறைப்படுத்தபட்டால் மட்டுமே நம்பிகை பிறக்கும். இந்தவகையில் இருந்திராத பொதுமையினைத் தைத்து எ?ப்பதற்கு ஏகப்பட்ட முனைகளில் புலிகளிற்கு முயற்சி அவசியப்பட்டது.

ஆனால் ரெலோ இதர இயக்கங்களை விட வித்தியாசமாகப் பார்க்கப்படவேண்டியது. புலிகளிற்கு மாற்றீடாக வரக்கூடிய ஏது நிலைகள் ரெலோவில் நிறையவேதென்பட்டது. புலிகளும் ரெலோவைப் போட்டியாகப் பார்த்தார்கள் என்றே தோன்றுகின்றது. அத்தகைய போட்டி தவிர்க்க முடியாதது. எமதுமக்களிற்குப் பொதுமையில் நம்பிக்கை ஏற்படுவற்கு எமது அபிலாசைகள் எமது வளங்களை வைத்து மட்டுமே அடையப்படக்கூடியன என்று நிரூபிக்கவேண்டியது அவசியம். ஆனால் எமது சொற்ப வளங்கள் இரு நிறுவனங்களிற்குப் போதவில்லை என்ற போது வலிய நிறுவனம் மற்றைய நிறுவனத்தை ஒரு ஹொஸ்ரைல் ரேக் ஓவர் செய்தது போன்று தான் ரெலோவின் நிலை பார்க்கப்பட முடியும். பொபிதாஸ்மோதல், ஊரிற்குள் கொள்கைகள், தோளில் ஏ-கே தொங்க ஒரு கையில் சிகரெட் மறு கையில் பன்ராவோடு நடமாடிய பொபி குருப் பொடியள் என்று நிலமை இருந்தபோது வலிய நிறுவனமான புலிகள் நிலமையினைச் சாதகமாக்கிக் கொண்டமை தான் நடந்தது. ஒரு முனையில் துன்பியல் என்றபோதும் தைக்கப்படவேண்டியிருந்த தேசியத்திற்கு இந்தவிலை தேவைப்பட்டமையினை ஆதரிக்காவிட்டாலும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆக ரெலோ அழிந்தபோது தேசியம் அழிந்தது என்பது பிதற்றல். ரெலோவின் இரத்தமும் தேசியம் வளரத் தேவைப்படடது என்பதும் தேசியம் வளர்ந்தது என்பதும் தான் துன்பமான கோரமான ஆனால் நிகழ்ந்த நிகழ்வு.

மேற்படி துன்பியல்கள் தொடர்பில், புலிகள் அழித்தார்கள் என்று மட்டும் சொல்லுவது போதாதது. அழிக்க வந்த புலிகளை எதிர்க்கும் பலமின்றி அழிந்தவர்கள் இருந்தார்?கள் என்பதும் கவனிக்கப்படவேண்டியது. பலமானவை தெரிவு செய்யப்படுவது உலக இயல்பு. (ஒருவேளை முள்ளிவாய்க்கால் முடிவில் தமது பலத்தைக் காட்டியதாய் முன்னர் தடைசெய்யப்பட்டவர்கள் கூறமுடியும். அது புலிகள் சார்ந்து ஒருவேளை அவர்களிற்குச் சரியாய் படலாம். ஆனால் பொதுமை தேசியம் என்ற விடயங்களில் தடைசெய்யப்பட்டோர் எப்போதும் தோற்றவர்களே).

இந்தவகையில் துன்பியல்கள் கோரங்கள் இன்னல்கள் தாண்டி தமிழ்த்தேசிய முளை ஒருவாறு மரமாகி மில்லர் என்ற பூ பூத்து பின் இந்திய இராணுவம் வந்து போய் அனுராதபுர வான்படை முகாம் வரை தேசியம் கிளை பரப்பியது. இந்தப் பாதையில் எமது வராலாறு இவ்வாறு தான் எழுதப்பட வேண்டும் என்று யாரும் சொல்லாமல் மக்கள் தாங்களாகவே உணர்ந்து கொண்ட நிலை பரிணமித்தது. வரலாற்றின் முக்கியத்துவமும் எங்களிற்குள் நாங்கள் அடிக்கடி கதைக்கும் விடயமாக ஆகியது. ஈழத்தின் உயர்வு எங்களின் உயர்வாக எங்களிற்குத் தானாகப் பட்டது. சமாதான காலத்தில் வன்னியில் நடந்த நேரங்களில் எங்களை அறியாது எங்கள் நெஞ்சுகள் நிமிர்ந்து நின்றன. நாங்களும் அமெரிக்கர்கள் போல் தான் எங்கள் நாயகர்களைப் போற்றியபடி எங்கள் உயர்வுகளை வரவேற்றுக் கொண்டிருந்தோம். இதற்கான அடிப்படை, எங்களை நாங்கள் நாங்களாகவே பொதுமையாக நோக்கிக் கொண்டோம்-. எங்கள் பொதுமையின் உயர்வு எங்கள் உயர்வு என்று எங்களிற்கு எவரும் வகுப்பெடுக்கத் தேவையின்றி நாங்களாக உள்ளூர உண்மையாக உணர்ந்தோம். நாங்கள் பார்த்தது எங்களிற்குப் பிடித்தது அதைத் தக்கவைக்க எங்களிற்கு வரலாறு தேவைப்பட்டது-- எனது பார்வையில் இந்தப் பொதுமையினை உருவாக்கியமை புலிகளின் அதி உச்ச சாதனை

தமிழீழம் வேணும் என்று வாயால் சொல்லிக் கொண்டு ஆனால் அதற்காகத் தம்மை ஒறுக்கவோ எந்தப் பங்களிப்பை நல்கவோ மறுத்தவர்களிற்கும் புலிகளிற்கும் அல்லது இதர தமிழீழ ஆதரவாளர்களிற்கும் இடையே அவ்வப்போ முறுகல்கள் நடந்தன தான் என்ற போதும் ஒரு பொதுமை எங்களிற்கு இருந்தது. நாங்கள் தமிழீழம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தவரை அதற்காக உழைக்கப் புலிகள் இருந்தார்கள். அது மட்டுமன்றி நாங்கள் வேணும் என்று சொல்லும் விடயத்திற்காக எங்களையும் உழைக்கவைக்கவும் ஒறுப்புக்களை மேற்கொள்ளவும் புலிகள் எங்களை நிர்பந்தித்துக் கொண்டிருந்தார்கள் என்று கூடச் சொல்லலாம். வெறுமனே கோசம் போட்டுவிட்டு சும்மா இருக்க புலிகள் எங்களை விடவில்லை. ஆனால் எங்களிற்கென்றொரு பொதுமை இருந்தது. எங்களின் பொதுமைக்கு ஒரு நடைமுறை இருந்தது.

பின் முள்ளிவாய்கால் நடந்து முடிந்தது. எங்கள் தேசிய மரம் மீண்டும் முறிந்து போனது. இந்த முறிவிற்கான பொறுப்பைப் புலிகளில் மட்டும் போட்டுவிட்டு நாங்கள் இருந்து விட முடியாது. அடிப்படை எங்கள் பொதுமையின் தன்மையில் இருக்கின்றது.

இப்போது நாங்கள் எங்கள் வரலாறு பற்றி ஒரு முடிவிற்கு வரமுடியாதவர்களாக நிற்கிறோம். வெறுமனே வரலாறு அவசியம் என சொல்லிக் கொள்கிறோம் வரலாற்றில் இருந்து பாடம் கற்கவேண்டும் என்று பிதற்றுகிறோம் ஆனால் வரலாறு ஏன் தேவையோ அந்தப் பொதுமை இப்போது எங்களிடம் இல்லை. இதனால் தான் எங்கு திரும்பினாலும் சேறு பூசல்களும் அருவருப்புகளுமாக எங்கள் நடைமுறை விரிகிறது.


அமிர்தலிங்கம் பேசிக்கொண்டு மட்டும் நிற்கையில் ஆயுதங்கள் புது நம்பிக்கை ஏற்படுத்தின. இப்போது ஆயுதங்களையும் கடந்து வந்து நிற்கிறோம். இனித் திருப்ப குடியேற்றக் கதையிலும் தரப்படுத்தல் கதையிலும் ஆரம்பித்து வியூகம் அமைக்க முடியாது. எமது தேசியம் என்ற பொதுமை ஒன்று கட்டியமைக்கப்படவேண்டியது மீண்டும் தேவை ஆகி நிற்கின்றது. மீண்டும் நாங்கள் பொதுமையினை உணர்வதற்கும், நம்புவதற்கும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. ஆனால் இந்த முயற்சிகள் கடந்து போன காலங்களிற்கான தயார் படுத்தல்களாய் இருக்க முடியாது. தாம் வளர்ந்த காலத்திற்காகப் பெற்றோர்கள் தம் குழந்தைகளைத் தயார் படுத்துவார்களேயாயின் குழந்தைகள் தோற்றுத் தான் போகும்.

வரலாற்றை எழுதி வைத்து அதைப் படித்துத் தான் பொதுமை வளரவேண்டும் என்பது அவசியமல்ல. பொதுமை உணரப்படுகையில் பொது வரலாறு தானாக எழுதப்படும்.

-இன்னுமொருவன்



**Affordable IT Support services for Businesses and medium size Companies**



உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை
நாங்கள் கவனித்துக் கொள்ள...
கவலைகளை மறந்து உங்கள்
வியாபாரத்தில் வெற்றியடையுங்கள்.

Do what you're best at = **Business**

We are best at = **IT support**

**Hassle free option**

**FREE Consultation**

Call us on

**020 7043 4318**

IT SUPPORT

let us look after it.

# ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி....

ILC Tamil. அனைத்துலக உயிரோடைத்தமிழ் மக்கள் வானொலி "எண்ணித் துணிவோம். ஒன்றிணைந்து எழுவோம்" எனும் தாரக மந்திரத்துடன் நல்ல தமிழை புலத்து தமிழ் மக்களுக்கு எடுத்து செல்லும் புதிய வான் ஒலி. (பிழிவு) பிளிவு ஒலி ஊதல் என இலக்கண இலக்கிய வழுவற்ற சொற்களை இனம்கண்டு ஒலி ஊதுகின்றது.

புலத்துதமிழ் சமூகத்தின் தற்போதைய கடமை என்ன? என்பதில் விளிப்புடன் செயற்படும் இந்த வானொலி "நாணயம்" என்று ஒரு நிகழ்ச்சி உண்மையில் அருமை. பாராட்டுக்கள் வாழ்த்துக்கள். வான் ஒலிக்கும் அந்த நிகழ்ச்சியினை தயாரித்து வழங்குபவருக்கும்.

கடந்த மாதம் (31.07.2011) ஞாயிறு மாலை புலத்து தமிழர்கள் சொல்லவேண்டியது என்ன? தமிழக முதல்வர் ஈழத்தமிழர் தொடர்பாக ஆற்றிய உரையினை ஒலி ஊதி நிகழ்ச்சியினை தொடங்கினார்கள். தொடர்ந்து கணவன் மனைவி உரையாடலில் கணவன் ஈரப்பலாக்காய் கறி இன்று வைக்கவில்லையா? (ஈரப்பிலாக்காயா? ஈரப்பலாக்காயா? சரி அவர்கள் ஒலி ஊதினால் சரியானதை அறியலாம்.) என கேட்க மனைவி பதில் அளிக்க நிகழ்சச்சி அதன் முக்கிய பரிமானத்தை வந்தடைந்து கொண்டிருக்க பலரும் வான் அலைக்கு வந்தார்கள். ஒருவர் வந்தார். அவர் நான் இருபது வருடத்திற்கு மேலாக புலத்தில் வாழ்கின்றேன். இலங்கையில் இருந்து வரும் வீரகேசரி பத்திரிகையைத் தவிர எதனையும் நான் வாங்கியது இல்லை என கற்பூரம் கொழுத்தி சத்தியம் பண்ணாத குறையாக வான் அலையில் அழ முயற்சித்தார்.

நிகழ்ச்சி தொடர்ந்தது. பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்தார்கள். சிலரது கருத்துக்கள் ஆரோக்கியமானதாக இருந்தன. இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யும் உணவுப் பொருட்களை புறக்கணித்தல் என்ற விடயமே நிகழ்ச்சியில் முக்கியப்படுத்தப்பட்டது. இலங்கை மரக்கறி வகைகள் (முருங்கைக்காய், கறிவேப்பிலை), கடல் உணவுகள் (பாரை, நெத்தலி, விளைமீன், கணவாய், நண்டு, திரளி, ஒட்டி, ஓரா எழுதவே வாய் ஊறுது) என்பவற்றை புறக்கணிப்பதினூடாக இலங்கை அரசிற்கு அன்னியச் செலாவணியில் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் என்பதே பொதுவாக வான் அலையில் வந்து கருத்து தெரிவித்தவர்களின் பொதுவான கருத்தாக இருந்தது. வித்தியாசமாக ஒருவர் வந்து இலங்கை விமான சேவையினைப் புறக்கணித்தல் வேண்டும் என்ற கருத்தினையும் முன்மொழிந்தார். நிகழ்ச்சி நல்ல ஆரோக்கியமான முறையில் நிகழ்ச்சி நடத்தியவரினால் ஒலி ஊதப்பட்டுக்கொண்டிருந்தது. சிறிய விளம்பர இடைவேளையின் பின் நிகழ்ச்சிகள் தொடரும் என்றார் நிகழ்ச்சியை நடத்தியபர்.

விளம்பரம் 01

இலங்கையில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்படும் மரக்கறி வகைகள், கடல் உணவுப்பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் இலக்கம் .......................................... சனி, ஞாயிறு தினங்களில் மீன் வகைகள் வெட்டி சுத்தம் செய்து தரப்படும்.

விளம்பரம் 02

நீங்கள் தாயகம் செல்ல விரும்புகிறீர்களா? இன்றே தொடர்பு கொள்ளுங்கள் குறைந்த விலையில் London to Colombo நேரடி விமான சேவை. தொடர்புகளுக்கு ........ .............................................................. என தொடர்ந்தது அந்த இரண்டு விளம்பரங்களும். தொடர்ந்து நிகழ்ச்சியினை ஒலி ஊதினார்கள். ஆனால் நான் காதுகளை மூட முடியுமா? வான் ஒலிப்பெட்டியினைத் தான் மூடமுடிந்தது.

பாடசாலையில் ஆசிரியர் மாணவர்களுக்கு திருடாமை பற்றிப் பாடம் நடத்தினார் பாடம் முடிந்தவுடன் மேசையில் இருந்த சில வெண்கட்டிகளை எடுத்து தனது புத்தகப் பையில் போட்டார் ஆசிரியர். பின்வரிசையில் இருந்த ஒரு மாணவன் கேட்டான் சேர் நீங்கள் செய்வது திருட்டு இல்லையா? என்று. அதற்கு ஆசிரியர் சொன்னார் வீட்டுக்கு படிக்கவரும் மாணவர்களுக்கு இந்த வெண்கட்டிகள் தேவை என்றார்.

*பின்வரிசை மாணவன் தீவான்*

## முந்தநாளயான் தத்துவம்

நூறு வார்த்தைகள் வலியை ஏற்படுத்தாது - ஆனால்
ஒரு நல்ல நண்பனின் மௌனம்
இதயத்தில் அதிக கண்ணீரை ஏற்படுத்தும்...

## கவிதைக்குள் பொய்

நாயைக் கல் என்பதும்
கல்லை நாய் என்பதும்
கவிஞன் கற்பனை செய்வதும்
கற்பனை கவிதை ஆவதும்
மௌனம் கவிதை பாடுவதும்
மசகை கருத்தை ஓதுவதும்
பொய்யை கவிதை பாடுவதும்
பொருளை பொருத்த ஓதுவதும்
கவிதை அங்கு பிறப்பதும்
மன்றம் வந்து கூடுவதும்
மகிழ்ந்து அதனை பாடுவதும்
அவையரங்கில் அவையோர்
எழுந்து கைகள் தட்டுவதும்
அத்தனை இத்தனை பாராட்டும்
அந்தப் பொய் புரட்டுக் கவிதைக்கா!
இல்லை அந்த பொய் புனைந்த கவிஞனுக்கா!
பொய்யே பதில் கூறட்டும்
உலகில் - உண்மையே வாய் திறவாத போது
பொய் - உண்மையிலே
எங்கே வாய் திறக்கப்போகிறது!!!

- சிவ. சிவா







# விடுப்பு

பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## எல்லோருக்கும் தெரியாத கனகரட்ணம்



கள்ளியன்காட்டைப் பிறப்பிடமாகவும் முல்லை முள்ளியவளையை வசிப்பிடமாகவும் ஆரம்ப கால விடுதலைப்புலி உறுப்பினர் செல்லக்கிளியின் சகோதரருமாகிய கனகரட்ணம் முல்லைத்தீவில் தான் கூட்டமைப்போடு இணைந்து தேர்தலில் நின்று வெற்றி பெற்றதாகவும் இறுதிவரை அந்த மக்களோடு நின்று இறுதிவரை சகலதையும் கண்ணுற்றதாகவும் விடுதலைப்புலிகள் சிறுவயதினரை படையில் இணைத்ததாகவும் மக்களை வெளியேறவிடாது சுட்டதாகவும் சனல்-4 ஆவணப்படத்துக்கு எதிராக அரசால் அண்மையில் வெளிவந்த ஆவண செவ்வியில் கூறியிருந்தார். உண்மையில் இந்த கனகரட்ணம் முல்லை இ.போ.ச. வில் பேருந்து ஓட்டுனராகத்தான் இருந்தார். பல வருடங்களாக இந்திய இராணுவ காலங்களில் முல்லை, கொழும்பு பஸ் ஓடிய இவர் விடுதலைப்புலிகளுக்கு வேவு பார்ப்பவராக இருந்து தனிப்பட்ட கோபத்தினால் கூட சிலரை விடுதலைப்புலிகளிடம் மாட்டிவிட்டவர். செல்லக்கிளியின் மரியாதைக்காக எத்தனையோ படித்தவர்கள் இருக்கும்போது கூட புலிகளால் தமிழிலேயே தொடர்ந்து பத்து நிமிடங்கள் உரைநிகழ்த்த முடியாத இவரை முல்லை மாவட்டத்துக்கு தேர்தலில் நிற்கவைத்து புலிகள் மக்களையும் கேட்டுக்கொண்டதுக்கு இணங்க இவரை தெரிவு செய்தார்கள். எதிரணியொன்று கூட யாரும் தேர்தலில் நிற்கவில்லை. அத்தோடு முல்லை மாவட்டம் 1996 புலிகளின் ஆழுகைக்குள் வந்தபின் இ.போ.ச.வும் புலிகள் வசமாக அங்கிருந்த மேலதிகாரிகளை புலிகளிடம் போட்டுக்கொடுத்து புலிகளின் பணத்தில் தான் பல்காலம் சீவியம் செய்தார். பாராளுமன்று முதல் அமர்விலேயே கொறட்டை விட்டு உறங்கிவிட்டு வந்தவரை கொஞ்?சம் மாற்றி எடுப்பாக்கி விட்டதே புலிகள்தான். ஆனால் இன்று உயிர் வாழவேண்டும் என்பதற்காக போர்குற்றம் புரிந்தவர்களை வகைதொகையின்றி தமிழ் மக்களை அழித்தவர்களை காப்பாற்றுபவற்காக இவரை பா.ம. உறுப்பினராக வாக்களித்த எத்தனையே சீவன்கள் இறந்தபின்பும் அவரது சகோதரர் செல்லக்கிளியின் பெயருக்கும் களங்கம் உண்டுபண்ணும் விதமாக நன்றிகெட்டு வெக்கமில்லாமல் உலகுக்கு உண்மையை மறைத்து பொய்கூறி போர் குற்றவாளிகளை தப்பவைக்கப்பார்க்கிறார். ஆனால் இவரை யாரும் தற்போது மதிப்பதுமில்லை. மனிதராக கணிப்பதுமில்லை.

## குச்சவெளியில் சிங்கள காடையர்கள் தொடர் அட்டகாசம்



கடந்த வாரம் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை, குச்சவெளியில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்த செல்வராசா என்ற நபர் இரு நாட்கள் அங்கு தங்கிவிட்டு சம்பவதினத்தன்று விடியற்காலையில் பஸ்தரிப்பிடத்துக்கு வருகையில் சில சிங்கள காடையர்கள் அவரைப்பிடித்து அவரிடமிருந்த பணத்தையும், உறவினர்கள் செய்து கொடுத்த பலகாரங்களையும் பறித்ததோடில்லாமல் அவரையும் கள்ளத் தமிழ் நாய் என்று சொல்லி திட்டித்திட்டியபடி மாறி மாறி அடித்திருக்கிறார்கள். இதை இழுவைக்காரன் விசாரித்தரில் அங்கே கடைகள், பேக்கரி நடாத்தும் சிங்கள கூட்டமொன்று பல காலமாக இதை செய்வதாகவும் பறிகொடுத்தோர் பலபேரென்றும் இவைகளை பொலிசாருக்கு முறையிட்டும் எந்த பலனும் கிடைக்கவில்லையென்றும் தெரியவந்தது.

## எல்லோருக்கும் தெரியாத Dr.சண்முகராசா



வீரகத்தி சண்முகராசா. இவர் முல்லையில் பிறந்து ஒட்டிசுட்டானை அண்டிய கருவேலன் கண்டலில் வளர்ந்தவர். இவர் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் உயர்தரம் பயின்றபோது புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் அமைப்பில் இருந்து பல புலி உறுப்பினர்களை சினேகம் கொண்டிருக்கும்போது யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். இவரது குடும்ப சூழ்நிலை காரணமாக புலிகளின் பணத்தில் தான் பல்கலைப்படிப்படை முடித்தார். இவர் யாழில் படிக்கும் போது புலிகளின் சுகாதார பிரிவினருடனும் சேர்ந்து பணியாற்றி இருந்தார். பின் இவர் வைத்தியராக தெரிவாகி பயிற்சியை முடித்தபின் கனடாவுக்கு ஓடிவிட்டார். அதிர்ச்சியடைந்த புலிகள் ஒருவர் மூலமாக அவர்களது கவலைக்கடிதமொன்றை இவரிடம் கையளிக்க உறுத்தலோ அல்லது உணர்ந்தோ திருப்பவும் வன்னிக்கு வந்துவிட்டார். புலிகளின் தயவுடன் திருப்பவும் வைத்தியராக சேவையில் சேர்ந்து கடமையாற்றினார். இவரின் வேண்டுகோளுக்கு இணங்க முல்லைத்தீவில் கடமையாற்றிய DNO வை புலிகள் வேறுமாவட்டத்துக்கு மாற்றமெடுக்கவைத்து இந்த சண்முகராசாவை DNO ஆக்கினார்கள். இறுதி யுத்தநேரத்தில் அத்தனை குண்டு மழைக்குள்ளும் உறக்கம் துறந்து பல உயிர்களை காப்பாற்றியவர் இந்த சண்முகராசா. காயப்பட்டவர்களுக்கு குருதி சேகரித்து ஏற்றுவதற்கு கூட Bag இல்லாமல்? Plastic பைகளை பயன்படுத்தினார். சத்திர சிகிச்சைக்கு kitchen knife ஐ பயன்படுத்தினார். இவைகளெல்லாம் புலிகளின் ஊடகப்பிரிவினரிடமும் ஆதாரங்களாக அன்றாடம் புகைப்படங்களாக எடுக்கப்பட்டன. ஆனால் அன்று இலங்கை அரசால் வெளியிடப்பட்ட சனல்-4 க்கு எதிரான ஆவண செவ்வியில் இலங்கை அரசிடமிருந்து தாராளமான மருந்துப் பொருட்கள் அனுப்பப்பட்டதாகவும் தேவைக்கு அதிகமாக மருத்துவ தளபாடங்கள் இருந்ததாகவும் கூறியிருக்கிறார். உண்மை என்னவென்றால் இப்போது உயிருக்கு பயந்து உண்மையை ஒழித்திருந்தாலும் அதே உயிரை இவரது மனச்சாட்சியே கொஞ்சம் கொஞ்சமாக குடிக்கப்போகின்றதே.

## மகிந்தனின் எடுபிடி மன்னனுக்கு மாலை (இது ஒரு அன்பரின் திட்டு)

யாழ் இராச்சியத்தின் கடைசி மன்னன் வாள் வீரன் சங்கிலியனின்



சிலையை உடைத்து புதுப்பிப்பது என்ற பெயரில் பல பன்னாடைகளின் பெயர்களை கல்வெட்டில் பதித்து சிங்களத்தில் ஏவல் எச்சில்களை எல்லாம் ஒரு வீரத்தமிழனின் சிலையை தொட்டுப்பார்க்கவே தகுதியற்றவர்கள் சிங்கள கொடிகளை சுற்றவர பறக்கவிட்டு போர் வெற்றியோடு மமதையில் சிங்கள இராணுவம் சுற்றமும் சூழ்ந்திருக்க யோகேஸ்வரி பற்குணம் போன்ற நாதாரிகள் மாலை எடுத்துக் கொடுக்க என்ன துணிவில் மாலை போட்டான் மன்னன் சங்கிலியனுக்கு இந்த மானம் கெட்ட பயல். கோப்பாய் சந்தியில் நின்ற என்னிடம் ஒரு அன்பர் கோபத்தில் கொட்டிய வார்த்தைகள் இவை.

### கடி ஜோக்ஸ்..

*ஆசையே துன்பத்துக்குக் காரணம்னு இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன்!*

*எப்படி?*

*என் மனைவியை நான் ஆசைப்பட்டுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்*

# கோர்த்து விடும் செய்திகள்

## எங்கட கடவுளுக்கும் சக்தியுண்டு பாருங்கோ.

இலண்டனில் கலவரம். சினிமாக் கொட்டகைகள், பெரும் கடைத் தொகுதிகள், சிறுகடைகள், மதுபானச்சாலைகள் யாவும் மாலையுடன் மூடப்பட்டன. ஊரடங்கு உத்தரவு வருமா என்ற பயம் கூட இருந்தது. ஆனால் எங்கட சைவக் கோயில்கள் யாவும் இரவு பதினொரு மணிவரை திறந்திருந்தன. வழமை போல் பூசைகள் திருவிழாக்கள் நடைபெற்றன. பக்த கோடிகள் ஆபரணங்கள் பல அணிந்து திருக்கோவில்களுக்குச் சென்று வழிபட்டனர். ஆனால் எந்த விதப் பாதிப்பும் ஏற்படவில்லை.

## ஈரான் சொல்வதிலும் நியாயம் இருக்கு

அமெரிக்கா கடன் சுமையால் தவிக்கையில் இரசியா அமெரிக்கர்களைப் புல்லுருவிகள் என்றது. அவையளின்ர மொழியில் புல்லுருவி என்றால் எங்கட மொழியில் தண்டச் சோறுகள். சீனா அமெரிக்காவை கண்படி செலவழிக்க வேண்டாம் இல்லாட்டி நான் தந்த கடன் என்னாவது என்றது. பிரித்தானியாவில் கலவரம் எண்டவுடன் ஈரான் பிரித்தானியப் போலிசு கொஞ்சம் அடக்கி வாசிக்க வேணும், ஆர்ப்பாட்டக் காரர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேணும், ஈரானில் இருந்து மனித உரிமை நிபுணர்களை பிரித்தானிய போய் விசாரிக்க அனுமதிக்க வேணும், ஐக்கிய நாடுகள் இதில் தலையிட வேணும் என்று சொன்னது. அவங்கட நாட்டில பிரச்சனை எண்டால் இவங்க இப்படித்தானே கதைப்பாங்கள்.

## மஹிந்த மாத்தையா இப்படிச் சொல்வாரா?

இலண்டனில் கொல்லப்பட்ட மார்க் டக்கனின் இறப்புத் தொடர்பாக ஒரு பன்னாட்டு மட்டத்தில் அமைக்கப்பட்ட ஒரு சுயாதீன விசாரணை தேவை. இறுதிக் கட்ட கலவரத்தின் போது இழைக்கப்பட்டதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பான் கீ மூன் ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்து விசாரிக்க வேண்டும். அது மட்டுமல்ல ரூபவாஹினி இலண்டன் கலவரத்தில் நடந்த மனித உரிமைகள், மீறல்கள் பற்றி ஒரு காணொளியை ஒலிபரப்புமா?

## பிரித். கலவரங்களைப் பற்றி இன்னொரு தகவல்

பொலிஸ் ஆக்களைச் சுடுகிறது ஒன்றும் புதிதல்ல. முன்பும் நடந்திருக்கு. ஆனால் ஏன் இந்தப் பெரிய கலவரம் எண்ட கேள்விக்கு ஒரு செய்தியில் விடை கிடைக்கிறது. பிரித்தானியப் பொலிஸ் தூள் விக்கிறவை எல்லாரையும் பிடிச்சு தூள் வியாபாரத்தை ஒழிச்சிட்டினம். தூள் வியாபாரியள் இதாலை பொலிசில் சரியான ஆத்திரத்துடன் இருந்தவையாம். கிடைச்ச சந்தர்ப்பத்தை அவைதான் எண்ணை ஊத்திப் பெரிசாக்கினவையாம். இலண்டன் கலவரங்களைப் பார்த்த வெளிநாட்டுக்காறர் கேக்கிற ஒரு கேள்வி: 'ஏன் பொலிஸ்காரர் வெறுங்கையோடை திரியினம் ஆயுதம் ஒண்டுமில்லாமல்.' இலண்டன் மாநாகரப் பொலிசிலை இருக்கிற முப்பத்தி மூவாயிரம் பேரில இரண்டாயிரத்து எழுநூறு பேர் மட்டும் துப்பாக்கி கொண்டு திரியலாமாம்.

## கடன் நெருக்கடியில் கிடைச்சதும் தொலைச்சதும்.

கடன் நெருக்கடியாலை பெற்றோல் விலை குறையப் போகுது எண்டு சந்தோசப்பட்டுக் கொண்டிருக்கிறன். அது என்னடா என்றால் பவுண் விலை மலை போல் ஏறிவிட்டுது. மனிசிக்கு அடுத்த திருமண ஆண்டு நாளில் புதுப் பற்றனிலை சங்கிலி செய்து தாறதெண்டு சொன்னனான்.

## கோத்த-ஜெயா வாய்ச்சண்டை நல்லாப் போகுது.

இலங்கையில் போர்க்குற்றம் நடந்தது என்றார் ஜெயலலிதா. சும்ம கிட. உன்ரை வேலையைப் பார். அரசியல் லாபம் தேடாதே என்றார் கோத்தபாய. ஐநா நிபுணர்கள் சொன்னதை வச்சுத்தான் நான் சொல்றன் என்றார் ஜெயலலிதா. இந்தச் சண்டை நல்லாய்த்தன் போகுது இன்னும் தொடரட்டும்.


MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing, Serving all the Sri Lankan Communities
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
• Packers • Movers • Shippers
We Offer the Best Services than all the Other in the trade!
Special rates for Containers and Machinery
4 Collection Points : Harrow, Warford, Knightsbridege, Croydon
FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
Warehouse, 652, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: info@massshipping.com.
Web : www.massshipping.com
*Condition Apply Warming
No hidden charges
No bnognus promotions



ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!
SUBSCRIPTION FORM
Name:
Address :
Postcode:
Telephone:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."' ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# சிருஷ்டி

இப்பரந்த உலகில் மனிதன் தான் வாழ்வதற்குத் தேவையான யாவற்றையும் உற்பத்தியின் மூலமாகவே பெறுகிறான். உற்பத்தி என்று கூறும்போது உயிர் உள்ளவை, உயிர் அற்றவை ஆகிய உணவுப் பண்டங்கள், பொருட்கள், தாவரங்கள், உயிரினங்கள் யாவும் அடங்கும். உணவுப்பண்டங்கள், பொருட்கள் ஆகியவற்றைப் பிறர் உற்பத்தி செய்தல் வேண்டும். ஆனால் தாவரங்களும் உயிரினங்களும் தம்மைத் தாமே இனவிருத்தி செய்து கொள்ளுகின்றன. இறைவன் படைப்பில் இவ் இனவிருத்தியைச் செய்துகொள்வதற்கு ஆண் பெண் என இரு பாலினங்கள் தேவைப்படுகின்றன. இந்த இரு பாலினங்களின் சேர்க்கையே இன்னொரு உயிரைச் சிருஷ்டிக்கிறது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதர்களிடையே இவ்வின விருத்திக்கு ஆதாரமாக, புதிதாகச் சிருஷ்டிக்கப்படும் உயிருக்கு ஒரு பாதுகாப்பாக திருமணம் என்ற பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திருமணம் என்னும் ஏற்பாடு ஆண்டாண்டு காலமாக பல இன, கலாச்சார, மதங்களைச் சேர்ந்தோரிடையே கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள வழக்கமாகும்.

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக இப்போது புது உயிர் களை 'குளோனிங்' முறையில் உருவாக்கி விட முடியும். ஆனால் அது இன்னொரு இனத்தை உருவாக்க முடியாது. சேவல் இல்லாமல் முட்டையை உருவாக்கிவிட முடியும், ஆனால் அந்த முட்டையிலிருந்து ஒரு குஞ்சைப் பெற இயலாது. ஒரு புதிய கோழி இனம் உருவாக்குவதற்கு ஒரு சேவல் அவசியமாக உள்ளது.

அப்படியாயின் இயற்கையின் இரு பாலினம் என்பது அவசியமற்றதா என்கின்ற கேள்வி எழுகிறது. புனிதமான இந்த இருபால் உணர்வு, உறவு இன்று ஒரு விபரீதமான நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தில், அறிவில், நாகரிகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் மேலைத்தேச நாடுகள் ஓரினச் சேர்க்கையை சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளன. அவர்களிடையே திருமணம் என்னும் பந்தத்தையும் ஏற்படுத்த அனுமதித்துள்ளது. அது மாத்திரமன்றி குழந்தைகளைத் தத்தெடுக்கும் உரிமை யையும் அளிக்கிறது. இந்த உறவுக்குப் பெயரென்ன? தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு இவர்கள் என்ன உறவு? அப்பா யார்? அம்மா யார்?

ஓரினச் சேர்க்கை மாத்திரமல்ல, இப்போது இளவய தினர் திருமணம் என்ற சடங்கு தேவையற்றது. ஒருவரை ஒருவர் நம்பினால் ஒன்றுசேர்ந்து வாழ்வதில் ஒரு தவறும் இல்லை என்று கூறிக்கொண்டு பிள்ளைகளைப் பெற்று குடும்பமாக வாழ்கிறார்கள். இப்படியான உறவுகளைப் பார்க்கும்போது மனிதகுலம் முன்னோக்கிச் செல்லு கிறதா அல்லது பின்னோக்கிச் செல்லுகிறதா என்று கேட்கத் தோன்றுகிறது. 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்ற பாரதியின் வேதனை எனக்கும் உண்டாகிறது.

இந்த ஏற்பாட்டிற்கு ஆதரவாக சிலர் ஆன்மீகத் திலிருந்து சில உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறார் கள். இறைவன் ஆண்பாதி பெண்பாதி என்பதை அர்த்தநாரீஸ்வரராக தோற்றம் தந்து உணர்த்துவதைப் போன்றதே ஓரினச் சேர்க்கையை இறைவன் ஹரிஹரனின் (சிவ-விஷ்ணு) தோற்றத்தில் உணர்த்துகிறார் என்றும், அத்துடன் ஐயப்பன் எனப்படும் மணிகண்டனின் பிறப்பும் இரு ஆண்களின் சங்கமமே, ஆதலால் இது ஒன்றும் புதிதல்ல என்றும் விவாதிக்கிறார்கள்.

இத்தகைய விதண்டாவாதங்களைக் கேட்கும் என்னைப் போன்ற ஆன்மீகவாதிகளின் உள்ளம் வேதனைப் படுவதைத் தவிர வேறு வழியில்லை. யாராவது ஆன்மீக அறிஞர்கள் இவர்களுக்கு தகுந்த பதிலை அளிக்க முடியுமா?

*- விசித்திரப்பிரியன்.*

# தமிழர் தேசியக் கோரிக்கையின்...

*(18ம் பக்க தொடர்ச்சி)*

அப்படி அவர்களிடம் எத்தகைய திட்டங்களும் இல்லையாயின் தமிழ் மக்களை அது நட்டாற்றில் தள்ளிவிடும் செயலாகவே அமையும்.

சரியான வேலைத் திட்டங்களுடன் எதிர்வரும் காலங்களில் நாங்கள் என்ன பேசப் போகிறோம், இது வரை எவற்றைப் பேசினோம், அவற்றிற்கு அரச தரப்பினர் தந்த பதில்களென்ன என்ற விபரங்களையெல்லாம் மூடுமந்திரமாக வைத்திராமல் வெளிப்படையாக எழுத்துமூல அறிக்கைகளாக மக்கள் முன் கூட்டமைப் பினர் வைத்துத் தமது அரசியல் சதுரங்கக் காய்களை நகர்த்திச் செல்வார்களாயின் அதனை தமிழ்மக்களும், உலகமும் புரிந்து கொள்வதோடு, எமது கோரிக்கை களிலுள்ள நியாயத்தன்மைகளையும் புரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும். எமது நியாயமான கோரிக்கைகளைச் செவிமடுக்காமல் அலட்சியம் செய்யும் அரசினது கபட நாடகங்களும் உலகத்தின் முன் வெளிச்சமாகும். சிறீலங்கா அரசைப் பற்றிய தற்போதைய உலக அபிப்பிராயம் சரிவு நிலையில் போய்க் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் தமிழ் மக்கள் தங்களது நிறுவன ரீதியான வெளிப்படையான செயல்பாடுகள் மூலம் உலகத்தின் அனுதாபத்தை வென்றெடுப்பதற்கு முயல்வது மிக அத்தியாவசியமாகும்.

இந்தியா திரும்பத் திரும்ப பேசித் தீருங்கள் என்று எம்மைப் பேய்க்காட்டித் தான் தப்பிக் கொள்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது. நீங்கள் வலியுறுத்திய படி நாங்கள் இன்னின்ன விடயங்களைப் பேசினோம் அவர்கள் இவ்வாறாகப் பதிலளித்துள்ளார்கள் என்ற விபரம் எமக்கும், தமிழக மக்களுக்கும் உலகத்திற்கும் வெளிப்படுத்தப்படும்போது இந்தியாவால் தொடர்ந்து எங்களைச் சிங்கள பேரினவாதத்திற்குப் பலிக்கடாக் களாக்க முடியாத நிலை தோன்றும். மேலும் மேலும் போய்ப் பேசுங்கள் என்று வற்புறுத்துவதை விடுத்து ஆக்க பூர்வமான அரசியல் நடவடிக்கைகளை இந்தியா வும் உலகமும் எடுக்க வைப்பதற்கு இனிமேல் எல்லாப் பேச்சுவார்த்தைகளையும் வெளிப்படையாகச் செய்வதே ஒரே வழியாகும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவெடுக்க முடியாத பெரிய பிரச்சனைகளுக்குள் எளிதாகத் தீர்த்து வைக்கக் கூடிய எமது சிறிய பிரச்சனைகளையும் உட்கலந்து வைத்துக்கொண்டு இலங்கையரசு ஆடும் கபட நாடகத்தை வெளிச்சம் போட்டுக்காட்டி பேரினவாதத்தின் சுயரூபத்தை உலகின் முன் வெளிக்கொணரும் நடவடிக் கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இறங்குவார் களாயின் அரசுக்கும் அதையிட்டு ஜாக்கிரதையாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். எல்லாம் நமது செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. கேட்கிற வன் கேணையனாக இருந்தால் சொல்கிறவன் அறிவாளி யாகிவிடுவான். அந்தக் கேணைத்தனம் நம்மை அண்ட விடாது பாதுகாக்க முயல்வோம்.

*தொடருவம்....*





*(12ம் பக்க தொடர்ச்சி)*

## இந்திய அரசின் பேரினவாதத்தால் இலங்கையில் எல்லை தாண்டிய அரச பயங்கரவாதம்.

இந்தியாவின் பேரினவாதம் தமிழர்களுக்கு எதிரானது என்பதை சிங்கள மக்கள் 1987இல் இருந்து உணர்ந்து கொண்டனர். அதன் பின்னர் அவர்கள் இந்தியாவுடன் இணைந்து தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதத்தை முன்பிலும் அதிகமாகக் கட்டவிழ்த்து விட்டனர். 2008இற்குப் பின்னர் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதம் எல்லை மீறிச் சென்று விட்டது. அதன் மிகச் சிறுபகுதிகளை நாம் சனல்-4 இன் காணொளிப் பதிவுகளில் கண்டோம்.

## சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்த்துக் கட்டல்

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் 04-08-2011இலன்று இலங்கையில் மக்களின் மீள் குடியேற்றத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பாராளமன்றத்தில் தெரிவித்தமையும் இலங்கை அரசின் பாதுகாப்புத் துறைச் செயலர் கோத்தபாய ராஜபக்ச இலங்கையில் இனி ஒரு அரசியல் தீர்வு தேவையில்லை என்று கொக்கரித்தமையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதே. இந்தியா இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்று பேச்சு வரும்போது 'சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருதீர்வு' என்கிறது. சகல தரப்பினரும் என்னும்போது சிங்கள மக்கள் - பேரினவாதிகள்- ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு என்பதுதான் இந்தியாவின் விருப்பம். இதையே வேறு விதமாக 'தெற்கிற்கு விற்பனை செய்யக் கூடிய ஓர் தீர்வுத் திட்டமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைக்க வேண்டும்' என முன்னாள் பிரதமரும் சிரேஸ்ட அமைச்சருமான ரட்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கை இனப்பிரச்சனைக்கு அவசரமி ல்லை புனர்வாழ்வுதான் முக்கியம் என்றுஇந்தியா கூறுவதும் பொருளாதார அபிவிருத்திதான் தேவை இனப்பிரச்சனைக்கான தீர்வு தேவை இல்லை என்பதும் வேறான கூற்றுக்களானாலும் ஒரே நோக்கம் கொண்டவை. தமி ழர்கள் தங்கள் தாயகமாகக் கருதும் வடக்குக் கிழக்கில் சிங்களவர்களைக் குடியமர்த்தி அவர்களை பெரும் பான்மையாக்குவதையே இந்தியாவினதும் சிங்களவர்களின் எண்ணம்.அதன் பின்பு 13வது திருத்தத்தை அமுலாக்குவது இந்தியா சொல்வதைப் போல் 'சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு' ஆக அமையும். இந்தியாவின் அகராதியில் 'தீர்வு' என்பது 'தீர்த்துக்கட்டல்' என்பதை 1987இல் பார்த்தோம்.

## தமிழர்கள் வரலாற்றில் இரு பெரும் பொய்கள்

தமிழர்களின் அரசியல் வரலாற்றில் பல பொய்களைச் சந்தித்துள்ளனர். எல்லாவற்றிலும் மோசமான இரு பெரும் பொய்கள்: 1. இலங்கையில் தமிழர் களுக்கு தனிநாடு அமைந்தால் அது இந்தியாவிலும் பிரிவினைக்கு வழி வகுக்கும். 2. சிங்களவர்களுக்கு இந்தியா உதவாவிட்டால் சீனா சிங்களவர் களுக்கு உதவி செய்து இலங்கையில் சீன ஆதிக்கம் ஏற்படும். முதலாவது பொய்யைச் சொல்லி தமிழர்களின் போராட்டத்தை இந்தியா 1987இல் இருந்து 2000வரை மழுங்கடித்தது. 2000இற்குப் பின்னர் தமிழர்கள் மீதான சிங்களப் பயங்கரவாதத்திற்கு இந்தியா உதவி செய்பவனாகவும் பங்காளனாகவும் செயற்ப்பட்டு வருகிறது. இனவெறியும் சாதி வெறியும் நிறைந்த புது டில்லிக் கொள்கை வகுப்பாளர்கள் இரண்டாவது பொய்யைச் சொல்லி இந்திய ஆட்சியாளர்களையும் மக்களையும் ஏமாற்றி வருகின்றனர். முதலாவது பொய்யை எதிர் மறையாக உண்மையாக்க வேண்டியது பாக்கு நீரிணையின் இரு புறமும் உள்ள தமிழர்களின் பொறுப்பு. அதாவது இலங்கைத் தமிழர் களுக்கு எதிராக செயற்படுவதை இந்தியா நிறுத்தாவிட்டால் இந்தியா பிளவு படுவதை நிறுத்த முடியாது. இலங்கையில் சீன ஆதிக்கத்தை தமிழர் களில் துணையின்றி இந்தியாவால் தடுக்க முடியாது என்பதை இந்தியா உணரவில்லை. ஆனால் அமெரிக்கா உணரலாம். அப்படி ஒரு கட்டத்தில் இந்தியா தன் தெற்கு வாசலில் ஒரு மும்முனைப் போட்டியைச் சந்திக்க வேண்டி வரும்.

## நம்பில் சிலர் திருந்த மாட்டார்கள்

இந்நிலையில் இன்னும் தமிழர்களில் சிலர் இந்தியாவை நம்புகின்றனர். இந்தியாவின் மூலமாகத்தான் தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று நம்புகின்றனர்.இந்தியாவின் குடும்ப நலன்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கும் ஆட்சியாளர்களும் சாதிய நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதிகாரிகளைக் கொண்ட கொள்கை வகுப்பாளர்களும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கு என்றும் எதிரானவர்களே என்பதை சில தமிழர்கள் இன்னமும் உணர்ந்து கொள்ள மறுக்கிறார்கள். நேரு, சாஸ்த்திரி, இந்திரா, ராஜிவ், சோனியா செய்யாததை ராகுல் செய்வார் என்று யார் நம்புவது?





Wedding Invitation Cards,
Birthday Invitation Cards,
Anniversary Invitation Cards,
மற்றும் சகல விதமான
Invitation Cards Design
உங்களுக்கு தேவைக்கேற்ப
குறுகிய காலத்தில்
Design செய்து
பெற்றுக்கொள்ள
அழையுங்கள்.

Restaurant,
Chicken Shop,
Pizza, மற்றும்
உங்கள் கடைகளுக்கு
தேவையான Menu Cards க்கள்,
Promotion Leaflet இக்களும்
குறைந்த விலையில் உங்கள்
விருப்பத்திற்கேற்ற வகையில்
குறுகிய காலத்தில் Design செய்து
பெற்றுக்கொள்ள அழையுங்கள்

Tel : 020 704 34319



# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 27, 5' 8", UK, Completed Double Masters in Data Communications, Ref 3504.

2. Age 33, 5' 6", UK(HSMP visa), Accountant, Self employed, Looking for a suitable bride, Ref 3503.

3. Age 47, 5' 6", UK, Medical Sector, Looking for suitable bride, Ref 3490.

4. Age 41, 5' 8", British Citizen, Divorced, Graduate, working in Public Service, Ref 3487.

5. Age 35, 5' 7", French Citizen, Living in UK, A/L, Self employed, Ref 3484.

6. Age 27, 5'10", British Citizen, Medical Sector, Looking for a suitable bride, Ref 3482.

7. Age 31, 5' 6", British Citizen, Graduate, working full time, Ref 3481.

8. Age 25 , 5' 6", Australia, Graduate, working as a software Engineer for government, Ref 3470.

9. Age 28, 5' 7", UK, Engineer, Looking for a suitable bride, Ref 1013.

10. Age 33, 5' 8", USA Citizen, Graduate, working as a supervisor, Ref 1020.

11. Age 37, 5' 9", British Citizen, Engineer, working in an auto mobile company, Ref 1084.

12. Age 30, 5' 6", UK(work permit visa), MSC in civil engineering, Looking for a suitable bride, Ref 1091.

13. Age 30, 5' 5", British Citizen, Accountant, Working as a Tax manager, Ref 1130.

14. Age 43, 5' 5", Swiss citizen, Engineer, Looking for a suitable bride, Ref 1167.

15. Age 37, 5' 10", British Citizen, Graduate, Self employed, Ref 1199.

16. Age 28, 6' 2", Canadian citizen, finished masters, working in Research field, Ref 1203.

17. Age 32, 5' 3", British Citizen, Graduate, working in IT, Ref 1208.

18. Age 43, 5' 6", British Citizen, Graduate, working as IT Consultant,Ref 1213.

19. Age 29, 6' 0", UK(HSMP visa), Engineer, Looking for a suitable, Ref 1316.

20. Age 34, 5' 6", Sri Lanka, Doctor, Looking for a suitable,Ref 1325.

21. Age 31, 5' 5", UK(work permit visa), Engineer, Looking for a suitable bride, Ref 1355.

22. Age 31, 5' 6", Australian PR, Accountant, Looking for a suitable bride, Ref 1413.

23. Age 41, 5' 7", British Citizen, Accountant, Looking for a suitable bride, Ref 1457.

24. Age 35, 5' 11", UK PR, Engineer, Looking for suitable bride, Ref 1693.

25. Age 30, 5' 7", British Citizen, Doctor, Looking for a suitable bride, Ref 1729.

26. Age 29, 5' 3", UK(work permit visa), Graduate, Working as a Quality Technologist, Looking for a suitable bride, Ref 1805.

27. Age 27, 5' 10", British Citizen, Grduate, working as a Financial Risk Analyst, Ref 1825.

28. Age 28, 5' 9", UK(Student Visa), doing master, working part time, Ref 1856.

29. Age 33, 5' 9", Canadian PR, Engineer, Looking for a suitable bride, Ref 1944.

30. Age 32, 5' 8", British Citizen, Engineer, Looking for a suitable bride, Ref 2106.

31. Age 37, 5' 4", British Citizen, BEng (Hons)/Electrical & Electronic Engineer, Self employed, Ref 2149.

32. Age 30 , 5' 8", UK, Electronic & Electrical Engineer, Looking for a suitable Bride, Ref 3441.

33. Age 32 , 5' 5", UK, chartered architect, Looking for a suitable Bride, Ref 3438.

34. Age 29 ,6' 1", UK(student visa), doing MBA, working part time, Ref 3437.

35. Age 27 , 5' 7", UK,Graduate, working as a Professional Travel consultant, Ref 3428.

36. Age 45 , 5' 8", UK, Accountant, Looking for a suitable Bride, Ref 3422.

37. Age 28 , 5' 8", UK PR, Graduate, working in Public Service , Ref 3419.

38. Age 34 , 5' 10", Doha , Engineer , Looking for a suitable bride , Ref 3412.

39. Age 27 , 5' 8" , India , Civil Engineer , Doing own construction Business , Ref 3411.

40. Age 32 , 5' 11" , British Citizen , Engineer,Looking for a suitable bride , Ref 3407.

41. Age 30 , 6' 0" , UK(student visa) , doing MBA , working part time , Ref 3376.

42. Age 29 , 5' 9" , French citizen , living in UK , BEng Electronics , Self employed , Ref 3374.

43. Age 31 , 5' 8" , UK(HSMP visa) , Engineer , working as an Engineer at mobile company , Ref 3373.

44. Age 33 , 5' 7" , Canada PR , Graduate , working as a computer engineer , Ref 3367.

45. Age 27, 5' 8", UK(student visa),doing MBA , working part time Ref 3361.

46. Age 33 , 6' 2", UK PR , Divorced Engineer , Ref 3360.

47. Age 30 , 5' 6" , UK(PSW visa) , Engineer , Looking for a suitable bride , Ref 3352.

48. Age 35 , 5' 5" , British Citizen , Graduate , working in Public Service Ref 3346.

49. Age 30, 5' 8", UK, MSc Qualified working as business analyst, Ref 3344.

50. Age 36 , 5' 9" , UK PR , Graduate working in a marketing agency , Ref 3337.

51. Age 24 , British Citizen , Studying ACCA , working in the NHS finance department , Ref 3327.

52. Age 30 , 5' 9" , UK(PSW visa) , Graduate , working as a deputy manager ,Ref 3325.

53. Age 33, British Citizen, Accountant, Looking for a suitable bride , Ref 3323.

54. Age 29, 5' 6", British Citizen Graduate, working at a Telecom company , Ref 3306.

55. Age 31, 5' 11", UK, Doctor, Looking for a suitable bride , Ref 3304.

56. Age 29, 5' 8", British Citizen Graduate, working as a Senior Management Consultant/Project designer , Ref 3301,

## மணமகன் தேவை

1. Age 32, 5' 8", British Citizen, Divorced, Graduate, working in Public Service, Ref 3508.

2. Age 28, 5' 2", UK, Graduate, working in IT. Looking for a suitable Groom, Ref 3502.

3. Age29,5'1", British Citizen, Doctor, Looking for a suiable Groom, Ref3496.

4. Age38,5'5", SriLanka, Doctor, Looking for a suitable Groom, Ref 1063.

5. Age 29, 5' 5", British Citizen, Accountant, Looking for a suitable Groom, Ref 1102.

6. Age 28, 5' 4", Norway, Graduate, working in Public Service, Ref 1104.

7. Age 31, 5' 10", Australia PR, Accountant, Looking for a suitable Groom, Ref 1120.

8. Age 39, 5' 4", UK(work permit), Doctor, Looking for a suitable Groom, Ref 1232.

9. Age 39, 5' 6", Canadian citizen, Engineer, Looking for a suitable Groom, Ref 1322.

10. Age 28, 5' 2", British Citizen, Accountant, Looking for a suitable Groom, Ref 1348.

11. Age 27, 5' 4", German Citizen, Living in Canada, Studying IT, Looking for a suitable Groom, Ref 1359.

12. Age 28, 5' 2", Sri Lanka, Graduate, working as administrative assistant, Looking for a suitable Groom, Ref 1459.

13. Age 41, 5' 4", Sri Lanka, Doctor, Looking for a suitable bride, Ref 1514.

14. Age 26, 5' 2", British Citizen, Medical Sector, Looking for a suitable, Ref 1531.

15. Age 25, 5' 1", UK PR, Graduate, working as a data Coordinator, Looking for a suitable Groom, Ref 1580.

16. Age 39, 5' 7", Canadian citizen, Graduate, working as a Financial sector in a bank, Looking for a suitable Groom, Ref 1595.

17. Age 41, 5' 5", British Citizen, Graduate, working as computer analyst, Looking for suitable Groom, Ref 1678.

18. Age 30, 5' 4", Sri Lanka, Doctor, Looking for a suitable Groom, Ref 1695.

19. Age 29, 5' 5", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 1780.

20. Age 28, 5' 1", German Citizen, Doctor, Looking for a suitable bride, Ref 1815.

21. Age 30, 5' 7", Sri Lanka, Graduate, working as Trainee Manager in bank, Ref 1871.

22. Age 32, 5' 3", Sri Lanka, Doctor, Looking for a suitable groom, Ref 3469.

23. Age 29, 5' 4, UK(student visa), studying Medical Sector, working part time, Ref 3461.

24. Age 23, 5' 4", German Citizen, Living in UK, studying Electronic engineering, Looking for a suitable groom, Ref 3455.

25. Age 39, 5' 3", Sri Lanka, Engineer, Looking for a suitable groom, Ref 3453.

26. Age 27, 5' 6", India, Graduate, Administrative Service, Looking for a suitable groom, Ref 3451.

27. Age 24, 5' 5", British Citizen, Graduate, working in Public Service, Ref 3436.

28. Age 29, 5' 5", Sri Lanka, Graduate, working as senior software engineer, Ref 3434.

29. Age 28 , 5' 3", UK PR, Divorced, one child, Graduate, Ref 3418.

30. Age 25, 5' 2", Sri Lanka, Graduate, working as a Financial Adviser, Ref 3406.

31. Age 25, 5' 3", UK, Graduate, working in Public Service, Ref 3392.

32. Age 29, 5' 5", British Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3390.

33. Age 30, 5' 3", British Citizen, PHD in chemical engineering, Looking for a suitable groom, Ref 3389.

34. Age24, 5'5", British Citizen, Graduate, Administrative Service, Ref 3388.

35. Age 29 , 5' 2", British Citizen, Financial Sector, Looking for a suitable groom, Ref 3382.

36. Age 29 , 5' 4", UK(student visa), BSc Computer Science, Looking for a suitable groom, Ref 3381.

37. Age27,5' 5", British Citizen, Accountant, working as a Commercial Financial Analyst , Ref 3371.

38. Age 32, 5' 6", British Citizen, ACCA qualified, working in bank as manager, Ref 3365.

39. Age 31, Canada Citizen, Graduate, working as a Marketing Manager, Ref 3363.

40. Age 40 , 5' 2", British Citizen, Accountant, Looking for a suitable groom, Ref 3362.

41. Age 26, 5' 8", British Citizen, Medical Sector, Looking for a suitable groom, Ref 3359.

42. Age 42, 5' 6", Canadian PR, Medical Sector, Looking for a suitable groom, Ref 3358.

43. Age 34 , 5' 5" , Canadian Citizen , working as computer programmer , Looking for a suitable groom , Ref 3342.

44. Age 29 , 5' 5", British Citizen, Accountant, working as a Production Accountant, Looking for a suitable groom, Ref 3316.

45. Age 32, 5' 2", British Citizen, Graduate, Financial Sector, Ref 3309.

46. Age27, 5'3", British Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3308.

47. Age33, 5'2", British Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3307.

48. Age 26 , 5' 6" , Sri Lanka, Graduate, Administrative Service, Ref3299.

49. Age 26 , 5' 2" , Australian Citizen, Engineer, Looking for a suitable groom, Ref 3282.

50. Age 28 , 5' 3" , British Citizen, Engineer, Looking for a suitable groom, Ref 3275.

51. Age 32 , 5' 2" , British Citizen, Accountant, Looking for a suitable groom, Ref 3420.

52. Age 30 , 5' 6" , British Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3423.

53. Age 28 , 5' 8" , UK , Engineer, Looking for a suitable groom, Ref 865.

54. Age 30, 5' 7", Sri Lanka, Engineer, Looking for a suitable groom, Ref 3340.

55. Age 41 , 5' 6" , British Citizen, Living in Australia, Graduate, working as a Pharmacist, Ref 3290.

56. Age 30 , 5' 4" , Australian Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3232.

57. Age 32 , 5' 4" , British Citizen, Architect, Looking for a suitable groom, Ref 3227.

58. Age 28 , 5' 3", UK , Engineer, Looking for a suitable groom, Ref 3275.

59. Age 30 , 5' 5" , Canadian Citizen, doing a PhD in Sociology, working part time, Ref 3253.

60. Age 29 , 5' 5" , Sri Lanka, Lawyer, Looking for a suitable groom, Ref 2224.

61. Age 41 , 5' 4" , Sri Lanka, Doctor, Looking for a suitable groom, Ref 1514.

62. Age 26, 5' 2" , British Citizen, Graduate, working in an investment bank company as a Computer Engineer, Ref 1527.

63. Age 25 , 5' 1" , UK PR, Graduate, working as a Data Coordinator in the IT Department, Ref 1580.

64. Age 39 , 5' 7", Canadian Citizen , Graduate , working in financial sector in a bank , Ref 1595.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

## தமிழீழத்திற்காகத் தமிழகம்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி எல்லாம் இந்த அரசியல் கட்சிகள் செய்யாமல் போனதற்கு என்ன காரணம்? இந்தக் கட்சிகள் நடத்துவது பதவி அரசியல். ஈழத் தமிழர்கள் அழிவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் பதவி அரசியலைச் சிறிது காலம் ஒத்தி வைக்கக் கூட இக்கட்சித் தலைமைகளுக்கு மனமில்லை.

மேலிருந்து கீழ்வரை இந்தக் கட்சிகளின் இயைபே இப்படிப்பட்டதுதான். காலமெல்லாம் பொதி சுமந்து பழகியபின் திடீரென்று போர்ப் புரவிகளாக மாற முடியாது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை வழிநடத்துவதற்கு மட்டுமல்ல. பிறிதொரு தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதற்கும் கூடத் தேசியம் குறித்துத் தெளிவான புரிதல் தேவைப்படுகிறது. செயலளவில் இந்தியத் தேசியத்திற்குச் சேவகம் செய்து கொண்டே தாயகம், இறையாண்மை, தன்னாட்சி என்றெல்லாம் தமிழ்த் தேசிய வாய்ப்பந்தல் போடுவதால் தமிழகத்திற்கும் பயனில்லை, தமிழீழத்திற்கும் பயனில்லை.

### விடுதலைப் போராட்டங்கள் இரண்டு

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும், தமிழக விடுதலைப் போராட்டத்துக்குமான இயங்கியல் இடையுறவை உள்வாங்கிச் செயல்படும் போதுதான் உலகத் தமிழர் ஒற்றுமை என்பது பொருளும் பயனும் உடைத்தாகும். இவ்விரு விடுதலைப் போராட்டங்களும் தனித் தனியானவை ஆனால் நெருங்கிய தொடர்புடையவை. ஒன்றுக்கொன்று புறநிலையில் துணை செய்யக் கூடியவை. ஆனால் ஒன்றுக்கொன்று நிபந்தனையாகக் கூடியவை அல்ல. இந்த இடையுறவை மாறாது நிலைத்திருக்கும் சூழலில் இடம் பெறுவதாக அல்லாமல், தொடர்ந்து மாறிவரும் உள், வெளி நிலைமைகளில் இயங்கி வருவதாகக் காண வேண்டும். இருதரப்பிலும் முன்னின்று போராடும் ஆற்றல்களுக்காவது முதலில் இந்தப் புரிதல் தேவை. பிறகு இது உலகத் தமிழர்களின் கூட்டுணர்வில் இறங்கிப் பதிய வேண்டும். இருதரப்பு அறிவாளர்களும் இதற்காக முன்முயற்சி எடுக்க வேண்டும்.

தமிழகத்தின் தமிழ்த் தேசிய இயக்கம் வயதில் மூத்ததென்றாலும் பின்தங்கி விட்டது. தமிழீழத்தின் தமிழ்த் தேசிய இயக்கம் முந்திக் கொண்டுவிட்டது. தமிழகத்தில் தமிழ்த் தேசியத்தின் தேவையைத் பெருந்திரளான தமிழ் மக்கள் உணரச் செய்வதற்காகப் போராடி வருகிறோம். தமிழ்த் தேசியம் பெருந்திரளான தமிழ் மக்களை ஆட்கொள்ளாமல் விடுதலைக்கான அரசியல் ஆற்றலாக மலர முடியாது. தமிழ் நாட்டில் வெறும் பரப்புரைக் கட்டத்தில் இருக்கிறோம் என்பதன்று இதன் பொருள். தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கான போராட்டங்கள்தாம் தமிழ்த் தேசியத்தின் தேவையைப் பெருந்திரளான மக்கள் உணரும்படி செய்வதற்கான முதன்மைவழி. இந்தப் போராட்டங்களைத் தமிழ்த் தேசிய விடுதலைக் குறிக்கோளின் திசையில் செலுத்துவதற்குத் தமிழ்த் தேசிய அமைப்புகளை உறுதியும் வலிமையும் மிக்கவையாகக் கட்டியெழுப்ப வேண்டும். இந்தக் கடமைகளைச் செய்வதற்குத் தமிழ்த் தேசிய ஊடகங்களை வலுவாக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் அறப் போராட்டமாகத் தொடங்கி ஆயுதப் போராட்டமாக வளர்ந்து கரந்தடிப்போர் என்ற நிலையிலிருந்து மரபுவழிப் போராக வளர்ந்து, இறுதியில் பெருத்த படையியல் தோல்வியைச் சந்தித்துள்ளது. தமிழீழ மக்கள் இந்தத் தோல்வியிலிருந்து மீண்டெழுந்து தங்கள் சூழலுக்குப் பொருத்தமான புதிய வடிவங்களில் போராட்டத்தைத் தொடர வேண்டும். அதற்கு உலகத் தமிழர்கள் உதவ வேண்டும்.

### சிங்கள அரசைத் தனிமைப்படுத்தல்

எப்படி? தமிழீழ மக்கள் எவ்வகையிலும் போராடுவதற்குமான வெளியை இழந்து நிற்கிறார்கள். இந்த வெளியை உருவாக்கித் தர வேண்டுமானால் சிங்கள அரசுக்குக் கடும் நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

இனக் கொலைக் குற்றவாளியைத் கூண்டிலேற்றுக! ஈழ மக்கள் மீதான இனப் பேரழிப்புப் போர் குறித்து அய்.நா. அமைப்பின் வழியாக விசாரணை நடத்துக! சிறைப்படுத்திய போராளிகள் அனைவரையும் விடுதலை செய்க! இன்னமும் முள்வேலி முகாம்களில் அடைப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்க! அதியுயர் பாதுகாப்பு வலையங்களை அகற்றுக! தமிழ் மக்கள் அனைவரையும் மீள் குடியமர்த்தம் செய்க! அவர்களின் நிலம், உடைமைகள், தொழில் அனைத்தையும் திருப்பித் தருக! போரினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை முழுமையாக ஈடு செய்க! தமிழர் தாயகப் பரப்பில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துக! தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளை உறுதிசெய்க! இவைபோன்ற கோரிக்கைகளுக்காகத் தமிழகத் தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் போராட வேண்டும். இது அறப் போராட்டம்தான் என்றாலும் அடையாளப் போராட்டமாக இருந்து விடக் கூடாது.

**ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை வழிநடத்துவதற்கு மட்டுமல்ல. பிறிதொரு தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதற்கும் கூடத் தேசியம் குறித்துத் தெளிவான புரிதல் தேவைப்படுகிறது.**

சிங்கள அரசுக்கு உறைக்கும் விதத்தில் நம் போராட்டம் அமையும் பொருட்டுச் சிறிலங்காவை உலக அளவில் தனிமைப்படுத்த வேண்டும். பொருளியல் வகையிலும் அரசியல்-அரசுறவியல் வகையிலும், பண்பாட்டு வகையிலும் சிறிலங்கா மீது தடை கொண்டுவரச் செய்ய வேண்டும்.

### சிங்களத்தின் மீது தாக்கம்

சிங்களப் பேரினவாத அரசைத் தனிமைப்படுத்தி நெருக்குதல் ஏற்படுத்தும் முயற்சிகள் சிங்களப் பேரினவாதத்தின் சமூக அடித்தளமாகிய சிங்கள மக்களைச் சிந்திக்க வைக்கும். அவர்களைத் தங்கள் அரசுக்கு எதிராகத் திருப்பும். சிங்கள மக்களிடையே உண்மையான சனநாயக ஆற்றல்கள் வளர்வதற்கு உதவும். அதுமட்டுமல்ல சிங்கள ஆளும் வர்க்கத்துக்குள் இதனால் முரண்பாடுகள் முற்றும். மோதல்கள் வெடிக்கும். ஆளும் பாசிசக் கும்பல் மேன்மேலும் தனிமைப்படும். இவை யாவும் சேர்ந்து தமிழ் மக்களுக்கான சனநாயக வெளியைத் தோற்றுவிக்கும், விரிவாக்கும். அடக்குண்டு நசுக்குண்டு கிடக்கும் தமிழ் மக்கள் இந்த வெளியைப் பயன்படுத்திக் களம் காண்பார்கள்.

பாலஸ்தீன மக்களின் 'இண்டி·பாடா' போல், இப்போதைய காசுமீரத்து மக்களின் பேரெழுச்சி போல், ஈழத்து மக்களும் கிளர்ந்தெழுந்து போராடுவார்கள். இந்தப் போராட்டமே வெற்றியைத் தேடித் தந்துவிடுமா? அல்லது மீண்டும் ஆயுதப் போராட்டம் தேவைப்படுமா? என்பதை இப்போதே நம்மால் கணிக்க இயலாது. மேலும் அது ஈழ மக்களை மட்டும் அல்லது அவர்களை வழிநடத்தும் விடுதலை ஆற்றல்களை மட்டும் பொறுத்ததன்று. ஒன்று மட்டும் உறுதி. வடிவம் எதுவானாலும் அந்தப் போராட்டத்தை மீண்டும் ஒருமுறை பயங்கரவாத முத்திரை குத்தித் தனிமைப்படுத்தி ஒழிப்பது நடவாது.

### வருங்கால வாய்ப்பு

நம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வருங்காலப் பாதை இப்படியே அமையக்கூடும். வேறு விதமாக அமைந்தாலும், அதை உள்வாங்கிச் செயல்படத் திறந்த மனத்துடன் அணுகுவோம். ஆனால் இப்போது செய்ய வேண்டியது என்ன என்பதில் தெளிவாக இருப்போம். சிங்கள அரசைத் தனிமைப்படுத்தும் இயக்கத்தை விரிவாக முன்னெடுப்போம்!

தமிழீழத்தைத் தமிழகம் புரிந்து கொள்வது போலவே, தமிழீழமும் தமிழகத்தைப் புரிந்து கொள்ளட்டும். உலகத் தமிழினம் தன் வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து, திட்டமிட்டுச் செயலாற்றினால், உலகில் தமிழருக்கு ஒரு நாடு பிறக்கும். பிறகு மற்றொரு நாடும் பிறக்கும். உலக அரங்கில் தமிழருக்கென்று இரு கொடிகள் உயரும். மனிதகுல முன்னேற்றத்துக்குத் தமிழினத்தின் பங்களிப்பு இருபடி மேலே செல்லும்.

# கோத்தபாயாவின் கருத்துக்கு நா.க.த. அரசாங்கம் கண்டனம்



சென்ற 9ஆம் திகதியன்று இந்திய தொலைக்காட்சி சேவையான ர்நயன டநைெள வுழனயல இற்?கு சிறிலங்காவின்? பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச வழங்கிய செவ்வியின்போது பிரித்தானியத் தமிழ்ப் பெண் செல்வி தமிழ்வாணி ஞானகுமார் அவர்களை இழிவு படுத்தும் வகையில் கூறிய வார்த்தைகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றினை வெளியீட்டுள்ளது.

நா.க.த அரசின் பெண்கள் மற்றும் சிறுவர் முதியோர் விவகார அமைச்சகம் அமைச்சர் திருமதி. பாலாம்பிகை முரகதாஸ் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டள்ளதாவது:

சிறிலங்கா அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் இவ்வகையில் மிலேச்சத்தனமாக உணர்வெதுவுமற்ற முறையில் சொல்லாடல் செய்வது அவர்களது கொடுங்கோல் ஆட்சியினது மிருகத்தனத்தையும் அவர்கள் கையில் தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளையும் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

செல்வி தமிழ்வாணி அவர்கள் 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எமது தாய் மண்ணில் நிகழ்ந்தேறிய படுகொலைகள் மானிடப் பேரழிவின் மத்தியிலும்கூட தன்னலமற்ற வகையில் அவ்விடத்தில் ஆற்றிய சேவையின் பெறுமதியைநாடுகடந்ததமிழீழ அரசாங்கமும் புலம் பெயர் தமிழ்ச் சமூகமும் நன்கறிவோம். அவர் சனல் 4 தொலைக்காட்சிக்கு துணிவுடன் முதலில் கொடுத்துதவிய வாக்குமூலம் தான் பின்னர் இறுதிக்கட்டப் போரில் நடந்த உண்மைகளையெல்லாம் வெளிக்கொணர ஊன்றுகோலாக அமைந்தது.

எனவே கௌரவம் மிக்க தமிழ்ப்பெண் ஒருவரைப்பற்றி திரு கோத்தாபய ராஜபக்ச பொறுப்பற்றவகையில் ஏற்படுத்தியுள்ள அவதூற்று வார்த்தைகளை அனைத்துலகச் சமூகம் கண்டிக்க வேண்டுமென அறைகூவல் விடுக்கின்றோம்.



# ராமதாஸ் முன்னிலையில் திருமாவளவன் ஆபாசப் பேச்சு - பரபரப்பு

நேற்று சென்னையில் ?தனி ஈழமே தீர்வு? என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. தமிழீழப் பிரச்சினைக்காகப் போராடிப் பலமுறை சிறை சென்ற ஈழத்தியாகி ஐயா. ராமதாஸ் அவர்கள் தலைமையில் இந்தக் கருத்தரங்கு ?ஈழத் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் ஈழ விஷயத்தில் கடும் மறதி நோயால் அவதிப்பட்டு காங்கிரசுடன் கூட்டணி வைத்த ஐயா.ராமதாஸ் அவர்களும் தொல்.திருமாவளவனும், தமிழக மக்கள் தேர்தலில் கொடுத்த அதிர்ச்சி வைத்தியத்தால் தெளிந்து நோயிலிருந்து மீண்டு வந்ததை, உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் அறியும் வண்ணம் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி ஏற்கனவே உலக வாழ் தமிழர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கியிருந்தது.

முள்வேலியில் ஈழத் தமிழர்களைப் பார்த்துவிட்டு வந்து முள்வலி எழுதிவிட்டு, துக்கம் தாளாமல் முள்வேலி ஸ்பான்சரான காங்கிரசைக் கட்டிப் பிடித்து அழுத திருமாவளவன், ஒருவழியாக தன் துக்கத்தில் இருந்து மீண்டதை சென்ற வாரம் கொடுத்த அறிக்கை மூலமே தெரிந்திருப்பீர்கள்.

அதாகப்பட்டது ?ராஜபக்சேவோடு விருந்து உண்ட நிருபமா ராவை அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராக நியமித்திருப்பதற்கு? அன்னார் தன் கடும் கண்டனத்தை அந்த அறிக்கையில் பதிவு செய்திருந்தார்கள். அப்போதும் சில துரோகிகள் ?இலங்கைக்கு டூர் சென்ற திருமாவை உள்ளடக்கிய தமிழக எம்.பிக்கள், ராஜபக்?ஷேவுடன் விருந்து உண்ணாமல் வேறு எதை உண்டார்கள்? என்று கேள்வி எழுப்பியதை நாம் அறிவோம்.

ஆனால் இத்தகைய அவதூறுகளுக்கு அஞ்சுபவனும் மானரோசம் உள்ளவனும் அரசியலுக்கு சரிப்பட்டு வரமாட்டான் என்ற முதுரைக்கு இணங்க திருமாவளவனும் ராமதாசும் வெட்கம் விட்டு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அதற்கு நன்றி சொல்லிக் கொள்வோம். இத்தகைய சிறப்புப் பெற்ற தலைவர்கள் கலந்துகொண்ட சிறப்புப் பெற்ற கூட்டத்தில் திருமாவளவன் பேசிய பேச்சு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதன் சாராம்சம் பின்வருமாறு:

தனித் ,தமிழ் ஈழத்திற்காக எனது எம்.பி. பதவியையும் கூட துறக்கத் தயாராக இருக்கிறேன். தமிழ் ஈழத்தை அடைய வேண்டும் என்பதற்காகவே பாமகவுடன் கை கோர்த்துள்ளேன்.

மூன்றாந்தர பிட்டுப் படங்களில்கூடக் கேட்க முடியாத, குடிகாரனின் ரகளையில்கூடக் கேட்டிராத, தெருச்சண்டையில் வீரப் பெண்மணிகளின் வாயில் இருந்தும் கேட்டிராத ஆபாசமான அருவருக்கத்தக்க இந்த வசனத்தை தொல்.திருமாவளவன் அவர்கள் தமிழ்க்குடிதாங்கி ராமதாஸ் முன்னிலையில் பேசியதைக் கேட்டு, அங்கு கூடியிருந்த தமிழர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். நமது நிலை இதையெல்லாம் கேட்கும்படி ஆகிவிட்டதே என தமிழ் உணர்வாளர்கள் சிலர் தற்கொலைக்கு முயன்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றி தமிழினத்தலைவரிடம் கருத்துக் கேட்டபோது நான் மெரீனா பீச்சில் நடித்த ஆபாசக்காட்சியையும் இது விஞ்சி விட்டது? என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இந்த ஆபாசப் பேச்சு அடங்கிய ஒலிநாடா வெளியில் பரவாமல் தடைசெய்யப்பட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழர்களின் அவா. செய்வாரா ஈழத் தாய்?

*-செங்கோவி-*

திரை விமர்சனம்

# Malena: தேகமும் தேசமும்




டிஸ்கி: இந்தப் படத்தையும் (முடிந்தால் இந்தப் பதிவையும் 18,28,38,48,58,68,78,88 வயது நிரம்பாத யோக்கியர்கள் தவிர்க்கவும்.

குப்பையில் கிடைத்த மாணிக்கம் என்று இந்தப் படத்தை நான் தாராளமாகச் சொல்லலாம். பல வருடங்களுக்கு முன் நண்பர் அனுப்பிய மின்னஞ்சலில் இருந்த ஒரு வீடியோ பார்த்துவிட்டு மிரண்டு போனேன். அந்த ஒரு சீனுக்காகவே பல நாட்கள் இந்தப் படத்தைத் தேடி அலைந்தேன். கிடைத்த பிறகே தெரிந்தது இது உலக சினிமாக்களில் முக்கியமான படம் என்று.

இரண்டாம் உலக போரில் கலந்து கொள்ள கணவனை அனுப்பிவிட்டு, இத்தாலியின் சிசிலி நகரில் வாழும் தனியே வாழும் பேரழகி மெலீனா. (சரியான உச்சரிப்பு மலேனா!). கணவனுக்காகவே காத்திருக்கும் அவள் ஊரில் உள்ள ஆண்களால் காமத்தாலும் பெண்களால் பொறாமையாலும் பார்க்கப்படுபவள். இரண்டாம் உலகப் போரில் நாடுகள் சக நாடுகள் மீதான ஆக்கிரமிப்பில் தீவிரமாக இறங்குகின்றன. அவளது காத்திருப்புக்குப் பதிலாக கணவனின் இறப்புச் செய்தி கிடைக்கிறது.

கணவன் இருக்கும்போதே வட்டமிட்ட கழுகுகள், மேலும் முன்னேற ஒரு பொய்யான வழக்கில் சிக்க வைக்கப்படுகிறாள். ஊராரின் ஏச்சும் பேச்சும் தொடங்குகிறது. அவளைப் பற்றிய வதந்திகள் இறக்கை கட்டிப் பறக்க, மெலீனாவிற்கு ஆதரவாக இருக்கும் தந்தை மனம் உடைகிறார். தொடர்ந்து நடக்கும் போர்த் தாக்குதலில் அவரும் இறக்கிறார்.

அழகைத் தவிர ஏதுமற்ற அனாதை ஆகிறார் மெலீனா. அவளது நாடு ஜெர்மானியர்களால் ஆக்கிரமிக்கப் படுகிறது. அவள் அழகே அவளுக்கு ஆபத்தாக ஆகி, விபச்சாரியாக அவளை ஆக்குகின்றது. ஜெர்மானிய ராணுவ ஆக்கிரமிப்பாளர்களின் இச்சைக்கு ஆளாகிறாள். அவள் நன்றாக இருந்த போதே அவளை ஏசிய பெண்கள் கூட்டம், அவள் வேசி ஆனதும் கடும் வெறுப்பை உமிழ்கிறது. அதே நேரத்தில் அவளின் நாடு போரில் வென்று விடுதலை ஆகிறது.

மெலீனாவின் மேல் ஆத்திரமுற்ற பெண்கள் கூட்டம், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவளை கடுமையாகத் தாக்கி அவமானப்படுத்தி ஊரை விட்டே துரத்துகின்றனர். அதன்பிறகு போரில் இறந்ததாகச் சொல்லப்பட்ட மெலீனாவின் கணவன் திரும்பி வருகிறான். அவள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவளை மீண்டும் தன் ஊரிலேயே தலை நிமிர்ந்து வாழ வைக்கின்றான்.

ஒரு படைப்பு இலக்கியம் ஆவது தனக்குள் பல திறப்புகளை ரசிகனுக்காக கொண்டிருக்கும் போதே. சாதாரண கதையாகத் தோன்றும் இந்தக் கதையை உலகத் திரைப்படமாக ஆக்கியது இயக்குநர் செய்த நுணுக்கமான இரு வேலைகள்.

முதலாவது மேலோட்டமாக அழகிய பெண்ணின் கதையாகக் காட்டிக் கொண்டாலும், அடிநாதமாக ஓடுவது அந்த தேசத்தின் கதை. இரண்டாம் உலகப் போர் பின்னணியில், மெலீனாவிற்கு நடப்பது தேசத்திற்கும் தேசத்திற்கு நடப்பது மெலீனாவிற்கும் நிகழ வைத்து இப்படைப்பை பேரிலக்கியமாக உயர்த்துகிறார். சரியான பாதுகாப்பின்றி இருக்கின்ற பெண்ணை வைத்து, அப்போதைய இத்தாலியை உருவகப்படுத்தியதே இயக்குநரின் தனித் திறமைக்குச் சான்று.

இரண்டாவது (முக்கியமானது), ஒரு 13 வயதுப் பையனின் பார்வையிலேயே படத்தை நகர்த்தியது. பலரும் பேசத் தயங்கும் பால்ய கால பாலியல் பிரச்சினையை தைரியமாக முன் வைத்தது. ரெனாட்டோ அதீத பாலுணர்ச்சி கொண்ட பாலகுமாரன் சொல்லும் 'உடம்பு விழிக்கும் முன்னே புத்தி விழித்திக் கொண்ட' பையன். டீன் ஏஜில் இருக்கும் ரெனாட்டா பேரழகி மெலீனாவை ஒரு தலையாகக் காதலிப்பவன்.

அவளை நிழல் போல் பின் தொடர்பவன். அவளின் அந்தரங்க வாழ்க்கை ரெனாட்டோவின் கண்களின் வழியே நமக்குக் காட்டப்படுகிறது. பார்வையாளனை திட்டமிட்டே ரெனாட்டோவின் மனநிலைக்குக் கொண்டு செல்கிறார் இயக்குநர். ரெனாட்டோ மெலீனாவின் மேல் வைத்திருக்கும் அதீத காமம் கலந்த காதலை நாமும் உணர்கின்றோம். மெலீனாவை பிறர் வதந்திகளால் பேசியே கொல்லும்போதும், கடுமையாக அவளைத் தாக்கி அவமானப்படுத்தும் போதும் எதுவும் செய்ய முடியாத கையாலாகாத் தனத்துடன் துடிக்கின்றான் ரெனாட்டோ. தன் தேசம் அதிகார போதை கொண்டோரால் போரில் சீரழிக்கப்படும்போது துடிக்கும் சாமானிய மக்களின் பிரதிநிதி அவன்.

ஒரு சீரியசான கதையை நகைச்சுவையாகக் கொண்டு செல்ல ரெனாட்டோவின் பாலுணர்வு காட்சிகள் உதவுகின்றன. 13 வயதுப் பையனின் கற்பனைகளும் செயல்பாடுகளும் எவ்வித ஒளிவுமறைவுமின்றி காட்சிப்படுத்தப்படுகின்றன. காம உணர்ச்சியின் உச்சத்திற்கே பார்வையாளனைக் கொண்டு செல்ல ரெனாட்டோ பாத்திரம் உதவுகின்றது. அதுவே இறுதிக் காட்சியில் காமம் கழன்று பேரன்பு மட்டுமே மிஞ்சும் ரெனாட்டோவின் நிலைக்கு நம்மையும் கொண்டு செல்கிறது.

மெலீனாவாக மோனிகா பெல்லுசி. இத்தாலிய செக்ஸ் பாம். இயக்குநர் புரைளநி?நவுழசயெவழசந இந்தக் கதைக் கருவுடன் பேரழகி மெலீனா பாத்திரத்திற்கு பொருத்தமான நடிகை கிடைக்காமல் பலநாட்கள் திரிந்தவர். எப்போது மோனிகாவை சந்தித்தாரோ, அந்த நிமிடமே அவர் முடிவு செய்தார் இவரே மெலீனா என. அதன்பிறகே திரைக்கதை டெவலப் செய்யப்பட்டது.

அழகு என்பது சாதாரணமானது. கம்பீரமான அழகு என்பது அவ்வளவு எளிதில் வாய்க்கப்படுவதில்லை. ஆரம்பக்காட்சிகளில் மோனிகாவைப் பார்க்கும் எவரும் கம்பீர அழகை உணர்ந்து கொள்வர். இந்தப் படத்தைப் பார்த்தபின் பலநாட்களுக்கு மோனிகா நம் மனதை விட்டு நீங்கவில்லை. உண்மையில் வேரு படங்களில் வேறு கேரக்டரில் அவரைப் பார்க்கவும் மனம் ஒப்பவில்லை.

ரெனாட்டோவாக GIUSEPPE SULFARO. முதல் படமான மெலீனாவில் நடித்த போது 14 வயது. 'மோனிகாவைப் பார்த்த கணமே அவர் மேல் காதலில் விழுந்தேன். டீன் ஏஜில் அத்தகைய பேரழகியின் மேல் காதல் வருவது ஆச்சரியம் அல்ல. ஆனாலும் எனக்குத் தெரியும் இது நிறைவேறாக் காதல் என்று!' - இது ஒரு பேட்டியில் அவர் சொன்னது. அந்தக் கெமிஸ்ட்ரியே இயல்பான நடிப்பை அவரிடம் இருந்து வெளிக் கொண்டு வந்தது. நடித்தார் என்பதை விட வாழ்ந்தார் என்றும் 'வாழ்ந்தார்' என்றும் சொல்லலாம்.

இயக்குநர் Giuseppe Tornatore ஏற்கனவே சினிமா பாரடைஸ் கொடுத்தவர். அதற்கு மேலும் அவரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா என்ன?

படத்தின் வசனங்கள் பல நம் மனதைத் தொடுபவை. மெலீனா விபச்சாரி ஆனபின் வரும் கஸ்டமரான ஆர்மி ஆஃபீசர் 'நான் ஒவ்வொரு வியாழனும் வருவேன்' எனும் போது மெலீனா விரக்தியுடன் சொல்லும் 'நீ எனக்கு சாப்பாடு கொண்டு வரும் வரை தாராளமாக வரலாம்' எனும் வசனம் வெறும் காமக்காட்சியை சட்டென்று நிறம் மாற்றும். படத்தின் இறுதியில் மெலீனாவை விட்டு எதிர்த் திசையில் விலகிச் செல்லும் ரெனாட்டோ சொல்லும் வசனம் புகழ்பெற்றது: என்னிடம் நெருங்கிப் பழகிய பெண்கள் கேட்பர் 'என்னை எப்போதும் நினைவில் கொள்வாயா என! நானும் 'ஆம்' என்பேன். ஆனால் நான் எப்போதும் நினைவில் கொள்ளும், என்னிடம் அவ்வாறு ஒரு போதும் கேட்காத மெலீனா'

மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் அற்புதமான கலைப்படைப்பு வெளியான நேரத்தில் கடும் எதிர்ப்பைச் சந்தித்து. காரணம், பதின்ம வயதுப் பையனின் பாலியல் காட்சிகள் தான். அந்த எதிர்ப்பு ஓரளவு நியாயம் ஆனதே. எனவே மனமுதிர்ச்சி இல்லாதோர் இப்படத்தைப் பார்ப்பதைத் தவிர்ப்பது நல்லது.

அதே நேரத்தில் நல்ல சினிமா மேல் ஆர்வம் கொண்டோருக்கு, மெலீனா பேரழகி தான்!

- *செங்கோவி*




## டாகுட்டர்ர்ர் விஜய் ரசிகர்களே! படிசிங் கன்னா ரொம்ப பீல் பண்ணனுமுங்கண்ணா?




2020 ஆண்டு.. குழந்தை: அப்பா எனக்கு ஒரு பேய்க்கதை சொல்லுங்க... அப்பா: ஒரு காலத்தில விஜய்னு ஒரு ஹீரோ இருந்தான்...

குழந்தை: அய்யய்யோ பயமா இருக்குப்பா, இன்னைக்கு இது போதும்..

.........................................

ஒரு குரங்கு ஒரு குருவிய மீட் பண்ணிச்சாம். உன்ன விட நான் பேமஸ் என சொல்லுச்சாம். அதுக்கு குருவி இல்ல இல்ல என் பேர்ல தான் ஒரு படம் வந்திருக்கு, அதனால நான் தான் பேமஸ் என சொல்லுச்சாம், அதுக்கு அந்த குரங்கு 'அந்த பட ஹீரோவே நான் தான்னு சொல்லிச்சு..

.........................................

ஒரு மரத்தில பன்னிரண்டு குருவிகள் உக்காந்து இருந்திச்சு ஒருத்தன் வந்து துப்பாக்கியால சுட்டான். எல்லா குருவியும் பறந்திச்சு ஒண்னு மட்டும் ஓடாம இருந்திச்சு. ஏன்னா அது விஜய்யோட குருவி.

.........................................

விஜய் நடிச்ச படத்துக்கு தியேட்டர்ல எக்கச்சக்க கூட்டம். என்னடா என்ன விஷயம் என ஆச்சரியப் பட்டு ஒருத்தன் கேட்டான்..

அதுக்கு இன்னொருத்தன் சொன்னான், அது ஒண்ணும் இல்லடா இந்த படத்துக்கு ஒருத்தன் ரிசர்வ் பண்ணி வந்திருக்கானாம். அவனை பார்க்க தான் இத்தனை கூட்டம்....

.........................................

விஜய் : நா அடிச்சா தாங்கமாட்ட, நாலு மாசம் தூங்க மாட்ட,

ஒரு குரல் : டேய் நீ அடிச்சா கூட பரவால்லடா, நீ நடிச்சா தாண்டா தாங்கவும் முடியல்ல தூங்கவும் முடியல்ல.

.........................................

நடிகர்களுக்கெல்லாம் ஒரு தேர்வு வச்சாங்க உங்களோட ஷிட் படங்களை எல்லாம் பற்றி ஒரு குறிப்பு வரைக.. என்பது தான் அந்த கேள்வி உடனே விஜய் எழுந்திருச்சு சொன்னாராம் 'இது அவுட் ஆப் சிலபஸ் '

இன்னொரு தேர்வு அதுல கொடுக்கப்பட்ட கேள்வி 'உங்களோட ப்ளாப் படங்களை பற்றி ஒரு குறிப்பு எழுதுக ?'

RAJ SCIENCE TUITION
LIMITED SEATS ONLY AVAILABLE
ENROLL NOW
Contact :
07903501336
07794424147
Science subjects ONLY
from Grade 8 to GCSE
WE OFFER
* Exam Preparation
* Supplementary Lessons
* Model Question Paper

Tutor Profile : Master in Physiotherapy (MPT)
with 12 years' experience and
currently working in King's Hospital.
3 YEARS TUTORING EXPERIENCE IN SCIENCE SUBJECTS.

## கவிதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்



திரு.திருமதி தங்கராஜா தம்பதிகளின் புத்திரியான கவிதா தனது பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகள் 16.07.2011 சனிக்கிழமை பார்க்கிங் புறோட்வே மண்டபத்தில் (Barking Broadway Theatre) நடைபெற்றது.

அரங்கேற்ற நிகழ்வுகளுக்கு ராஜ்குமார் பாரதி இசையமைப்பினை வழங்கியிருந்தார்.

நிகழ்வுகளின் இடையே சிறப்பு விருந்தினர் உரை மற்றும் வயலின் இசை இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

விறுவிறுப்பாக நடைபெற்றஇவ் நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகளுக்கு சிறியோர் பெரியோர் என் பலரும் கலந்து சிறப்பித்திருந்தது சிறப்பம்சமாகும்.

*தகவல் : முத்து*

திரை விமர்சனம்

# ரௌத்திரம்



*நடிகர்கள்: ஜீவா, ஷ்ரேயா*

*இசை: நிக்கி*

*ஒளிப்பதிவாளர் என்.ஷண்முகசுந்திரம்.*

*இயக்கம் : கோகுல்*

மகாகவி பாரதியாரின் புதிய ஆத்தி சூடியிலிருந்து எடுக்கப்பட்ட 'ரௌத்திரம்' (பழகு), சாதரண மனிதனின் நியாயமான உணர்வுகளை, உணர்ச்சிகளை, கோபங்களை காட்டச் சொல்வதாகும். பிறருக்கு துன்பமெனில் 'ரௌத்திரம்' பழகுவதில் தவறில்லை என்பதை மைய இழையாக்கி படமாக்கிய விதத்தில் மிரட்டியிருக்கிறார்கள் 'ரௌத்திரம்' படக்குழுவினர்.

சென்னை சட்டக்கல்லூரி மாணவி ஷ்ரேயா. ஷ்ரேயாவின் தோழியிடம் சில்மிஷம் செய்துவிடுகிறான் சட்டக்கல்லூரியில் படிக்கும் ரௌடி ஒருவன். கல்லூரி முதல்வரிடமும், போலிஸ் அஸிஸ்டண்ட் கமிஷ்னரான தன் தந்தையிடமும் புகார் தெரிவிக்கிறார் ஷ்ரேயா. அவன் பிரபல ரௌடி 'கௌரி'க்கு வேண்டப்பட்டவன் என்பதால் நடவடிக்கையெடுக்கத் தயங்குகிறார்கள். கலங்கிப் போகும் இருவரும் சாலைக்கு வருகிறார்கள். சில்மிஷம் செய்தவன் சாலையில் அடிபட்டு வந்துவிழுகிறான் ஜீவா நடு ரோட்டில் அவன் கூட்டத்தைச் சேர்ந்தவர்களைப் புரட்டியெடுக்கிறார். காரணம்.. ஜீவா பயணித்த ஷேர் ஆட்டோ விபத்திற்குள்ளாவது சட்டக்கல்லூரி ரௌடி மற்றும் அவனது கூட்டத்தினரால். ஜீவாவின் கோபத்தைப் பார்த்து காதல் கொள்கிறார் ஷ்ரேயா.

ஜீவாவைப் பழிவாங்க நேரம் பார்த்திருக்கும் ரௌடிகள், ஜெயிலில் இருக்கும் கௌரி வெளியே வரட்டும் என்று காத்திருக்கிறார்கள். பால்ய காலத்தில் தாத்தா பிரகாஷ்ராஜிடம் பெற்ற பயிற்சியால் சாலையில் நடக்கும் குற்றங்களைத் 'தட்டி'க்கேட்கும் ஜீவா, ஒரு கட்டத்தில் ஜெயிலில் இருந்து வெளியேறி வரும் பிரபல ரௌடி கௌரியைக் காயப்படுத்திவிடுகிறார். கௌரி குழுவினரின் கொலை முயற்சி, ஜீவாவின் குடும்பம், காதல் அனைத்தும் ஜீவாவின் கோபத்திற்கு முன்பு என்ன ஆனது என்பதை விறுவிறுப்பாகப் படமாக்கியிருக்கிறார்கள்!!

ஜீவா - இந்தப் படத்தின் மூலம் ஆக்சன் ஹிரோக்கள் வரிசையில் இடம்பிடிக்கிறார். ஜீவாவின் உடல் மொழியும், நடிப்பும் முந்தைய படங்களில் பார்க்காத ஒன்று. ஷ்ரேயா - படம் நெடுகிலும் ஜீவாவை லவ்வுகிறார். ஜீவா ஷ்ரேயா காதல் காட்சிகள் சுவாரஸ்யம். ஜெயப்பிரகாஷ் லக்ஷ்மி ராமகிருஷ்ணன் ஜீவாவின் பெற்றோர்.ஜெயப்பிரகாஷ் ஜீவாவிற்கு இடையே நடக்கும் உரையாடல்கள் அழகு. அண்ணன் ஸ்ரீநாத், மாப்பிள்ளையாக சத்யன். இருவரும் சில இடங்களில் கிச்சுகிச்சுமூட்டுகிறார்கள். பக்கத்துக் குப்பத்தின் தாதாவாக பாலிவுட் நடன இயக்குனர் கணேஷ் ஆச்சார்யா. ஒரு பாடலில் மாறுபட்ட நடனம் மூலம் அசத்தியிருக்கிறார். 'இன்னா பெரியா ஆளா நீ...' என்று பொல்லாதவனில் மிரட்டும் சுருட்டைமுடி நடிகர் தான் பிரதான ரௌடி 'கௌரி'.

படத்தை இயக்கியிருப்பவர் கோகுல். முதல் படம். நடுத்தெருவில் கொலை நிகழ்ந்தாலும் கைகட்டி வேடிக்கை பார்க்கும் நம் மனநிலையை (படம் முடியும் வரையில்) கொஞ்சம் அசைத்துப் பார்த்திருக்கிறார். முதல் பாதியில் கொஞ்சம் தொய்வாகச் சென்றாலும் இரண்டாம் பாதியில் விறுவிறுவென்று வேகமெடுத்தும் படம் முடியும் வரை ஒரு வித பதைபதைப்பை ஏற்படுத்தி முகத்தில் அறைகிறார் முடிவில்!!

ஒளிப்பதிவாளர் என்.ஷண்முகசுந்திரம். சென்னை ஓவியக் கல்லூரி பட்டதாரி. முதல் படம். பிரகாஷ்ராஜின் சண்டை, கௌரியை அறிமுகப்படுத்தும் காட்சி, இரவில் நடக்கும் சண்டைக் காட்சிகள் என்று பல காட்சிகளில் இவரது கோணங்கள் அட போட வைக்கிறது. ஜீவா ஷ்ரேயா காதல் காட்சிகள் மேலும் அழகூட்டுகிறது.

இசை - நிக்கி. முதல் படம். படத்தின் பலவீனம் பாடல்கள். 'மாலை மங்கும் நேரம்' மற்றும் 'அடியே உன் கண்கள்' மட்டும் கேட்கும் வரிசையில். பின்னனி இசை (வேறொருவர்), எடிட்டிங் படத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்கிறது. படத்தின் சண்டைக்காட்சிகள் - 'அனல்' அரசு. அசத்தல் ரகம். குறுகலான சந்துகளில், நடுரோட்டில் அமைத்திருக்கும் சண்டைகள் பிரமாதம்.

படம். இரண்டரை மணி நேரம். கொஞ்சம் குறைத்திருக்கலாம். பிரதான ரௌடி 'கௌரி' யைப் பற்றி ஏற்படுத்திய பிம்பத்திற்கு ஏற்ப காட்சியமைப்புகள் அமையாதது குறையே.

காவல்துறை இப்படத்திலும் வேடிக்கை பார்க்கும் துறையே.காவல் துறையில் உயர் பொறுப்பில் இருப்பவர் ஒரு ரௌடிக்காக நடிவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் என்று காட்டியிருப்பது நம்பும் படியாக இல்லை. பாடல்களில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். பிற்பகுதியில் வேகமெடுக்கும் திரைக்கதை, முற்பகுதியில் இல்லாதது குறையாகவே தெரிகிறது. சீமானின் 'தம்பி' படத்தின் பாதிப்புகள் சில இடங்களில் தெரிகின்றன.

எளியவன் ஒருவன், வலியவனால் துன்பத்திற்காளாகிறான் என்றால், அதைக்கண்டு அமைதியாய் இராமல் 'ரௌத்திரம்' பழகச் சொல்லி, அதற்கு நியாமான காரணங்களையும், காட்சியைமைப்பையும் கோர்த்து தந்த அறிமுக இயக்குனர் கோகுலிற்கு நன்றிகளை சொல்லாம்.

அங்கங்கே சில ஓட்டைகள் இருந்தாலும் இரட்டை அர்த்த வசனங்கள், தனி காமெடி ட்ராக், பறந்துபறந்து அடிக்கும் சண்டைகள் போன்ற அபத்தங்கள் இல்லாதது ஆறுதல். படத்தின் மையக்கருத்திற்கும் பரபரப்பான காட்சியமைப்பிற்கும் படத்தைக் கட்டாயம் பார்க்கலாம்.

நியாயமான காரணங்களுக்கு ரௌத்திரம் பழகவில்லையெனில் அவன் ஆண்மகனில்லை என்று உரத்துச் சொல்லியிருக்கும் படம்தான் இந்த ரௌத்திரம்.

*- செந்தில்*

## சினித்துளி

### சுட்டதை ஒப்புக்கொண்டார்!!



தெய்வ திருமகள் படத்தின் வெற்றிவிழா குறித்த செய்தியை படித்துவிட்டு நமுட்டு சிரிப்பு சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் திரையரங்க உரிமையாளர்களும், சில விவரமான பத்திரிகையாளர்களும். ஒரு படம் ஓட வேண்டும் என்று நினைப்பதுதான் அந்த தொழில் சார்ந்த அத்தனை பேரின் ஆசையாகவும் இருக்க முடியும். அப்படி இல்லாத சூழலில் சம்பந்தப் பட்டவர்கள் அமைதியாக இருந்துவிட்டாலே போதும். யாருக்கும் உறுத்தாது.

சரி படம்தான் ஆங்கிலப்படத்தின் பிரதி என்றால், படத்தில் வரும் இசை யாவது ஒரிஜனலாக இருக்கும் என்று நினைத்தவர்களுக்கு அதைவிட பேரதிர்ச்சி.ஜி.வி.பிரகாஷின் இசையை கேட்டு இன்புற்றவர்கள், அப்படி பாராட்டிய நாக்கை உப்பு தண்ணீரை விட்டு அலசினாலும் தப்பில்லை. அவ்வளவும் காப்பி! பா பா பாப்பா என்ற பாடலின் இசை பற்றிதான் இப்படி புழுங்குகிறது விவரமறிந்தவர்கள் ஏரியா.

எழுபத்து மூன்றாம் வருடம் வந்த டிஸ்னினுடைய நாடகமொன்றின் இசைதான் அது. இந்த இசைக்கு சொந்தக்காரர் ரோஜர் மில்லர். இதே படத்தில் வரும் இன்னொரு பாடலான ஜெகடதோம்... அமன் அண்டு அயன் அலிகான் இசையில் வெளிவந்த ட்ரூத் ஆல்பத்திலிருந்து சுடப்பட்டிருக்கிறது.

ஜி.வி.பிரகாஷிடம் விளக்கம் கேட்டால், டைரக்டர்தான் இதை கொடுத்து அப்படியே போட்டுத்தர சொன்னார் என்கிறார் அவர். நல்லா காமெடி பண்றாங்க எல்லாருமா சேர்ந்து...

### மீண்டும் 'சன்'!



சன் பிக்சர்ஸ் வாங்கிய படங்களும், அது தொடர்பான பஞ்சாயத்துகளும் கோர்ட் படியேறியதோடு நில்லாமல், அந்த நிறுவனத்தின் சி.இ.ஓ சக்சேனாவையும் சிறைக்குள் தள்ளியது. எந்திரன் படத்தில் தங்களுக்கு லட்சக் கணக்கில் பணம் வர வேண்டியிருக்கிறது என்று கடந்த வாரம் கூட சில திரையரங்க உரிமையாளர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். ஒரு புறம் புதிய புதிய புகார்கள் வரவர இன்னொரு பக்கம் சக்சேனா மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படுகின்றன.

இதற்கிடையில் மீண்டும் சன் பிக்சர்ஸ் புதிய பொலிவோடு இயங்கவிருக்கிறதாம். அதற்கு அச்சாரம் போடும் விதத்தில், விஜய் நடித்த நண்பன் படத்தை வாங்கி வெளியிடும் முடிவில் இருக்கிறார்களாம். இதுவரை விஜய்யிடம் முறைப்பு காட்டி வந்தவர்கள், மீண்டும் கைகுலுக்கி விட்டார்களாம்.

### 'கெட்டவனாக' மாறும் சிம்பு



கௌதம் வாசுதேவ் மேனனின் இயக்கத்தில் 'விண்ணை தாண்டி வருவாயா' படத்தில் நடித்த சிம்பு,வானம் படத்தில் பரத் உடன் நடித்தார்.டைரக்டர் தரணி இயக்கும், இந்தி 'தபங்' படத்தின் தமிழ் ரீமேக்கான 'ஒஸ்தி'யில் பொலிஸ் நாயகனாக சிம்பு நடிக்கிறார். அடுத்த வருடம், 'கெட்டவனாக' அவதரிக்க சிம்பு அதிரடி முடிவை எடுத்துள்ளார். கெட்டவன் படத்தில் நடிக்க நடிகர் ,நடிகைகள், தொழில் நுட்பக் கலைஞர்களை தேர்வு செய்து வருகின்றதாம் படக்குழு!

இப்படத்தை தமிழ்,தெலுங்கு,இந்தி ஆகிய மொழிகளில் அக்கலாச் சாரங்களுக்கு எற்றவாறு படமாக்கவுள்ளனராம்.

## ஜோக்ஸ்...

*ஏன் தலைவர் அந்த பாடலாசிரியரைப் போய் அடிக்கறாரு?*

*கட்சிக்குத் தேர்தல் பிரச்சாரப் பாட்டு எழுதும்போது 'விவசாய வட்டி ரத்தானது ஜோர் ஜோர்தான்' அப்படீன்னு எழுதறதுக்குப் பதிலா 'விவசாயிகளுக்கு ரத்தானது சோறு சோறுதான்'-னு எழுதிட்டாராம்...!*

................................................................

*வகுப்பறையில் இரு மாணவர்கள்*

*ஒருவன்: போடா முட்டாள்....*

*மற்றொருவன்: நானாடா முட்டாள்..?*

*நீதான்டா முட்டாள்...*

*ஆசிரியர்: நான் ஒருத்தன் இங்க இருக்கேன்றதையே மறந்துட்டீங்களாடா...?*

*பிளேயர் நடுவரிடம்: என்ன சார் இது பாதி ஆட்டத்திலேயே பைல்களை எடுத்துட்டுப்போறீங்க நாங்க 75 ரன்தான் அடிச்சிருக்கோம்...*

*நடுவர்: 50 ஓவர் முடிஞ்சு போச்சு தெரியலையா?*

*பிளேயர்: அப்ப இது டெஸ்ட் மேட்ச் இல்லையா?*

*நடுவர்: நீங்க என்ன ட்ரஸ் போட்ருக்கீங்கன்னு கொஞ்சம் குனிஞ்சு பாருங்க!*

*பிளேயர்: இந்த பாழாய்ப்போன மறதியால மேட்சையே கோட்டை விட்டுட்டோம்.*

................................................................

*மனைவி: போதை ஏறிடுச்சுன்னா அதுக்காக இப்படியா?*

*கணவன்: ஏன்... அப்படி என்ன பண்ணினேன் பங்கஜம்?*

*மனைவி: உங்க கையில இருக்கிறது பிராந்தி பாட்டில் இல்ல கெரஸின் பாட்டில்.*

*எங்க ஆபீஸ்ல மேனேஜர் இருக்காரு கிளார்க் இருக்காங்க . . .*

*இதெல்லாம் எதுக்கு எங்கிட்ட வந்து சொல்றீங்க?*

*நீங்கதானே படிச்சிட்டு யாராவது வேலையில்லாம இருந்தா சொல்லச் சொன்னீங்க.பீ*

................................................................

*ஏன்டா... கூழைக் கரைச்சித் தண்ணிய உடம்பிலே ஊத்திக்கிட்டே குடிக்கிறே?*

*கூழானாலும் குளித்துக் குடின்னு எங்க வாத்தியார் சொல்லிக் கொடுத்திருக்காரே!*

................................................................

*உங்க கட்சியிலே இனிமே எந்தப் பிரச்சினையும் வராதுன்னு சொல்றீங்களே! எப்படி?*

*என்னைத் தவிர எல்லாரையும் டிஸ்மிஸ் பண்ணிட்டேனே!*

................................................................

*கணவன் மனைவி ரெண்டு பேருக்கும் முதல்லேயிருந்தே ஒத்து வரல்லேன்னு எப்படிச் சொல்றீங்க?*

*தேனிலவுக்கே ரெண்டு பேரும் தனித்தனியா போனாங்கன்னா பாத்துக்கயேன்.*

................................................................

*அம்பது ரூபாய்க்குச் சில்லறையாய்ப் பத்து ரூபாய்த் தாளு கொடுங்களேன்.*

*அம்பது ரூபாய்த் தாளை அஞ்சாய்க் கிழிச்சிக்க வேண்டியது தானே?*


................................................................

*என்னடா விட்டத்தையே வெறிச்சுப் பார்த்துக்கிட்டிருக்கே?*

*இரண்டு ரெக்கை உள்ள பறவை எல்லாம் வானத்தைச் சுத்தி வருது! இந்த ஃபேனுக்கு மூணு ரெக்கை இருந்தும் வீட்டுக்குள்ளேயே சுத்துதே!*

................................................................

# HAPPY DAYS




# LION BEERS HALF PRICE !!

At selected stockists, including:

Grocers

AJ Foods Lewisham. Anglo Asian Wembley. Belmont Supermarket Harrow. Best Food Hounslow. Best Foods South Harrow. Chandra Stores Catford. Ganapathy C/C Wembley. Harran Brothers Croydon. High Street Convenience Store East Ham. KRS Foods Lewisham. Malar Supermarket Wembley. Mega Superstore Tooting. Rayners Wine Harrow. South Harrow Food & Wine Harrow. Sharon Tooting. Stop & Go East Ham. VVN Sons Southall.

Restaurants

Gana Cafe Harrow. Gana Cafe Wembley. Hop & Spice Balham. Hopper Hut Wembley. Jaffna House Tooting. Palm Beach Wembley. Palm Palace Southall. Papaya Ealing. Papaya Harrow. Prince of Ceylon Hendon. Sambal Kitchen & Diner Harrow. Sarasas Rest. Southall. Serendip Indo Sutton. Spicy Island New Malden. Spicy Palace Southall. Watch Me Rest Wimbledon. Yaal Rest. East Ham.

Check with individual outlets for promotion dates or phone the promotion hotline: 0208 795 5224

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk